
# தாயகம்



60/=

கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டிதழ்

# மௌனம் ஒழி


- கல்வயல் குமாரசாமி

ஊரும் இரவும் பெரு மூச்சும்
உள் அடங்கித் தீரும்
நொடிகள்
திகைப்பும் திசை தெரியா
மௌனம்
மொழி
மௌனம் ஒழி
மரணத் தறுவாயில்
தவளை குரல் கொடுக்கும்
கவனம் கவனம் என
காற்றும்
எதிர் ஒலிக்கும்

மனவெளியில்
மவுனம் ஒளி
மௌன மொழி
மனித அவலத்தின் மௌனம்
உறுதி மொழி
மௌன இறுதி
மொழி

குட்டைக் குளத்துப்
பலியினராய்
குஞ்சு, குருமன் குமர் இளசு
கிழங்கள் யாவுமே
புவனி, புதிர்பார்க்கப்
போயிற்றே!

நஞ்சு இரண்டும்
என்ன நயப்பு!



புதியஜனநாயகம் புதியவாழ்வு புதியபண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்

இதழ் இல 41

<u>பிரதம ஆசிரியர்</u>
க.தணிகாசலம்
தொ.பே.021-2223629

<u>ஆசிரியர் குழு</u>
சி.சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
கல்வயல் வே. குமாரசாமி
சோ. தேவராஜா
அழ. பகீரதன்
ஜெ.சற்குருநாதன்
சி. இதயராஜா
த. கோபாலகிருஷ்ணன்

<u>பக்க வடிவமைப்பு</u>
ஐசி

<u>ஓவியங்கள்</u>
முன்அட்டை - யோகி
சீலன்
சித்திரா

<u>தொடர்பு:</u>
ஆசிரியர், ஆடியபாதம் வீதி
கொக்குவில்.
021-2223629

மின்னஞ்சல்: thayakam_1@yahoo.com

<u>அச்சுப்பதிப்பு</u>
கஸ்ரோன் பிறிண்டேர்ஸ்
கல்வியங்காடு. 2224937

<u>வெளியீடு</u>
தேசிய கலை இலக்கிய பேரவை

A/C No: இலங்கை வங்கி -72361444


## உள்ளே..


<u>கவிதைகள்</u>

கல்வயல் குமாரசாமி
சோ. பத்மநாதன்
குழந்தை ம.சண்முகலிங்கம்
த.ஜெயசீலன்
சு.சுகேசனன்
ராகலை மோகன்
செம்மலை மோகன்
அழ. பகீரதன்
பருத்திதாசன்
ஜெடுங்கேணி ரமணன்

<u>சிறுகதைகள்</u>

ஆதவாசிந்தாமணி
தாமரைச்செல்வி
ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்
சி.ஆழ்வார்
சமரபாகு சி.உதயகுமார்
கே.எ.சிவரத்தினம்

<u>குறுநாவல்</u>

தணிகையன்

<u>கட்டுரைகள்</u>

கனகநாயகம் வேல்தஞ்சன்
சந்திரலேகா கின்ஸ்லி
ஞானசீலன்

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு
தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்
இதழ் இல 82
ஒக்ரோபர் 2012

# கற்றுக் கொள்ள விரும்பாத பாடங்கள்

எமது மண்ணில் கொடும் போர் நடந்து பெரும் அழிவுகளைத் தந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஜனநாயக ஆட்சி முறை நிலவும் நாட்டில், ஜனநாயக வழிமுறைகளுக்குள் இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வை நீண்ட காலமாக எட்டத் தவறியதால் ஏற்பட்டதே இந்தப் போரும் பெரும் துயரமுமாகும். இப்போர் முடிவடைந்தும் இன்றுவரை எட்டப்பட முடியாத ஒன்றாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளது.

"இடறிவிழுதல் அறிவில் எழுதல்" என்பது ஒரு பழமொழி. சாதாரண மனித வாழ்வின் நடைமுறையிலும் சிந்தனையிலும் இழையோடும் இப்பழமொழியின் சாரம் பெரும் மனித அவலங்களையும் மனித இழப்புக்களையும் ஏற்படுத்தும் போர் அழிவுகள், இயற்கை அழிவுகளின் போது மேலும் ஆழமாகவே நோக்கப் படவேண்டும். ஆனால் எமது மண்ணின் யதார்த்த நிலை அப்படி உள்ளதா? போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரம் நிறைந்த வாழ்வு இன்றும் தொடர்கிறது. இடம் பெயர்ந்தோரின் மீள் குடியேற்றம். சிறைக் கைதிகள், காணாமற் போனோர், அங்கங்களை இழந்தோர் என அவல வாழ்வு தொடர்ந்தும் நீள்கிறது. இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் என்பது கூட வல்லிணக்கமாகவே அரசால் அர்த்தப் படுத்தப் படுகிறது.

போர் முடிந்த பின்னர் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆய்வதற்கு "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை கண்டறிவதற்கான குழு" அமைக்கப்பட்டது. அரசால் ஏற்படுத்தப்பட்ட இந்த குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவே சர்வதேசங்கள் இங்கு மூக்கை நுளைக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றில் ஏற்பட்டு வரும் தாமதமும் இழுபறியும் மீண்டும் ஓர் உண்மையை உறுதிப்படுத்தி நிற்கிறது.

மக்கள் மீதான ஒடுக்கு முறைகளும், பொருளாதாரப் போட்டிகளும், அதிகார வேட்கையும் இழுபறிகளும் நிறைந்த உலகம் இது. இதில் அதனைப் பெறுவதற்கும் தக்க வைப்பதற்குமான ஈவிரக்கமற்ற அதிகார மோதல்களிலும் அதன் இறுதிக் களமான போர்களிலும் வென்றவர்களும் தோற்றவர்களும். ஒடுக்குபவர்களும் ஒடுக்கப்படுபவர்களும் கற்றுக்கொள்ளும் பாடங்கள் ஒரேவிதமாக அமைவதில்லை. இங்கும் வெற்றிபெற்ற அரசு போரின் துயரில் இருந்தல்ல தமது பேரினவாத நலன்களை அடிப்படையாக வைத்தே தமக்கான பாடங்களைக் கற்றுக் கொள்கிறது.

வரலாறு தோறும் அதிகாரத்துவ நலன்களை காத்து சுகித்து வரும் ஆளும் வர்க்கங்கள் ஒரு பொழுதும் "புத்தர்கள்" ஆவதில்லை. அதிகார வர்க்கங்கள் எப்பொழுதும் தமக்கான கற்றல் நெறிமுறைகளையே பின்பற்றி வருகின்றன. அதனையே மக்கள் மீது திணித்தும் வருகின்றன. அவர்களின் பாடப்பரப்பில் அன்பு, சமத்துவம், சமநீதி, சமவுரிமை என்பன ஏமாற்று வார்த்தைகளாகவே அன்றி நடைமுறைக்கு உரியனவாக என்றும் இடம் பெறுவதில்லை. அவர்கள் என்றுமே கற்றுக்கொள்ள விரும்பாத பாடங்கள் அவை.

ஆனால் அவர்களால் ஒடுக்கப்படும் மக்கள், யுத்தத்தால் பெரும் இழப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் உட்பட்ட மக்கள், அவர்களை வழிநடத்திய அரசியற் தலைமைகள் கற்றுக்

கொள்ள வேண்டிய பாடங்கள் அடிப்படையில் மிக வேறுபாடானவையாகும். மனிதநேயம் மறக்கப்பட்ட சூழலில், மனித உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்ட நிலையில் உருவாகும் போரின் நடுவில் அகப்பட்டு அதன் கொடிய விளைவுகள் அனைத்தையும் முகம் கொண்டு அனுபவித்த மக்கள் அதன் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் மிக ஆழமானவையாக இருத்தல் வேண்டும். எம்மை ஒடுக்குபவர்கள் போலன்றி குறுகிய எல்லைகளுக்குள் இறுகி இறுகிப் போவதில் இருந்து விடுபட்டு திறந்த மனதுடன் அந்த அனுபவங்களை தொகுத்துக் கற்பதற்கு முனைய வேண்டும்.

இனப்பிரச்சனைக்கு ஜனநாயக வழிமுறைக்குள் ஒரு நிரந்தர அரசியற் தீர்வை எட்டவேண்டுமானால் அந்நிய ஆதிக்க சக்திகளை நம்பி மேலும் முரண்பாடுகளையும் அழிவுகளையும் தேடிக்கொள்ளாமல் மக்களை முற்றாக நம்பவேண்டும். மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற உதவவேண்டும். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வெறும் இனத்துவ அரசியலுக்குள் மட்டும் மக்களின் அரசியல் உணர்வுகளைக் குறுக்கியது போலன்றி சகல இனங்களைச் சேர்ந்த மக்களும் பொதுவாக எதிர்நோக்கும் அரச ஒடுக்குமுறைகள், பொருளாதார கல்வி கலாசார சமூக வாழ்வியல் பிரச்சினைகள் யாவற்றிலும் ஒன்றுபட்டுக் கைகோர்க்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

மனிதரை மனிதர் ஒடுக்குவதும் அதற்கெதிராக மனிதர்கள் ஒன்றுபட்டு போராடுவதும் இன்று நேற்றல்ல வரலாறு தோறும் நடந்து வருபவை. அத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான விடுதலை எழுச்சிகள் மூலம் மனிதகுல வரலாறு கற்றுத்தந்த பாடங்கள் நிறையவே உள்ளன. அவை அவ்வக்காலம், இடம், சூழலுக்கேற்ப ஆன்மிகத் தத்துவ வெளிப்பாடு களாகவும், அறநெறிப் போதனைகளாகவும், அறிவியல் வளர்ச்சியடைந்த காலத்தில் மனித வாழ்வு பற்றிய சமூகவிஞ்ஞான ஆய்வு வழிவந்த நடைமுறைச் சிந்தனைகளாகவும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. அவற்றை காலத்துக்கேற்ப ஆய்ந்து அறிந்து பிரயோகிப்பதன் மூலம் ஒடுக்கு முறைகளற்ற, ஏற்றத் தாழ்வுகளற்ற அன்பும், சமத்துவமும், நீதியும் நிலைத்தோங்கும் உயரிய வாழ்வை நோக்கி மனித சமூகம் பயணிக்க உதவ முடியும்.

இன்றும் இவற்றை நோக்கிய இடையறாத முயற்சிகள் உலகெங்கும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. "மானுடம் தனைக் கட்டிய தளையெலாம் அறுக" என பாரதியும் இதனையே பிரகடனம் செய்தான். ஒடுக்குமுறையற்ற உலகை நோக்கிய, விடுதலை பெற்ற வாழ்வை நோக்கிய இந்நகர்வு மனித சமூகத்தின் நல்வாழ்வுக்கும் ஏன் நாம் வாழும் புவியின் மீள் உயிர்ப்புக்கும் கூட மிக அவசியமானது. இந்நகர்வு இன்றைய உலகமயமாதலின் யதார்த்த நிலைக்கேற்ப மந்தமாகவே நடந்தவண்ணம் உள்ளது.

இதனை விரைவு படுத்துவதில் போரினால் பட்டறிவு பெற்ற மக்கள் தமது பங்கை அளிக்க முடியும். இதுவே கொடும் போருக்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை இம் மண்ணில் எட்டுவதற்கும் வழிமுறையாக அமைய முடியும். பழமைவாத குறுகிய தேசியவாத அரசியலில் இருந்து விடுபட்டு முற்போக்குத் தேசிய அரசியலை நோக்கி அனைத்து மக்களையும் வழிநடத்திச் செல்லும் மார்க்கம் இதுவாகவே உள்ளது.

மக்கள் வரலாற்றிலிருந்து மட்டுமல்ல இப்போரிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடமாகவும் இது அமைய முடியும். ஆனால் இதுவும் அதிகார விருப்புடைய அரசியல் தலைமைகளாலும், நுகர்வியக் கனவுகளில் மூழ்கடிக்கப்படும் மக்களாலும் கற்றுக் கொள்ள முனையாத பாடமாகவே இன்றும் உள்ளது. இந்நிலையை மாற்றி நடைமுறையுடன் இணைந்த இக்கற்றலைச் செய்ய உதவுவதன் மூலமே சமூக அறிவியல், கலை, பண்பாட்டுத் தளத்தில் விழிப்புணர்வையும், மீள் எழுச்சியையும் ஏற்படுத்துவதுடன், மக்கள் விடுதலை வாழ்வை நோக்கி நகர்வதற்கு வழி சமைக்க முடியும்.

-ஆசிரியர் குழு

# அலைகள் அழித்த பூமி

த. ஜெயசீலன்

பூமியை மனிதன் புரட்டித் திருத்துதற்கு
நேரத்தைப் பார்த்திருக்க
நினையாப் பிரகாரம்
பூமி மனிதனைப் புரட்டிற்று மீண்டுமின்று.
ஆயிரம் ஆச்சர்யம்
அறிவியலிற் செய்தவர்.. கை
மீறி இயற்கை புகுந்து விளையாடிற்று.
அலைக்கரங்கள் கொண்டு
அண்டை நிலப்பரப்பை
மளமளென்று அள்ளி மண்டிற்று..
வந்த கடல்!
முப்பது அடியுயர மூல அலை
நிலம் விழுங்க
சிப்பாய் அலைகள் தரையைச் சுருட்டிற்று!
கப்பல்கள் கடதாசிக்
கப்பலாய்ப் பறந்து போச்சு.
விமானங்கள் விட்டிற் பூச்சிகளாய் மிதந்து
போச்சு
வாகனங்கள் சிதறிய
சீட்டுக் கட்டுகளாச்சு
வீடுகளும் நடுங்கி அடிபெயர்ந்து
நொருங்கிற்று
கணக்குகளிலில்.... இத்தனைபேர்
கரைந்தார்கள்
எனக்கணக்கு
விடநின்ற வாய்களை
உண்மை கிழித்திற்று
ஆனைகளின் வாயில் அரைபட்ட
சிறுகரும்பாய்
மாநகர்கள் தும்பு தும்பாய்ச்
சிதறியெங்கும் நாறிற்று
பூமி முழுதிலுள்ள அணுசக்தியைப் போலே
ஆயிரம் மடங்காய்
அவதாரம் எடுத்தாடிப்
பூகம்பம் பொங்கிற்று:
புயலலைகள் மேவிற்று.
ஆக்கம் அழித்த அணு உலைக்கு
உலை வைக்க
சாக்குரலாய் கதிர்வீச்சு
திசைமூச்சை நெரித்திடுது
மனிதன் "அனைத்தும்" அறிந்திட
வல்லவனாம்
என இனியும் நம்பாமல்..
இயற்கைமுன் பணிந்து வாழப்
பழகாட்டில்
வருங்காலம் பலியாகப் போகிறது.

# விதையிட்டவர் யாரோ?

சு.ஆழ்வார்

இலண்டன் மாநகரில் இருந்து வந்திருந்த இரத்தினசபாபதியும் அவரது மனைவி மாதுமையாளும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தங்கள் கால்களை 10 வருடங்களின் பின் பதிக்கிறார்கள். அவர்களது இளைய மகன் ஒழுங்கு செய்திருந்த சிற்றூர்தி (VAN) ஒன்றில் ஏறி தங்கள் பிறந்த ஊரான வவுனியாவிலுள்ள கல்நாட்டினகுளத்துக்கு புறப்படத் தயாராகி விட்டனர்.


"அப்பா, ஒரு கிழமைக்கு கொழும்பிலை நிண்டு, வந்தகளை போன பிறகு ஊருக்கு போங்கோவன்" என்று மகன் ரவி யோசனை கூறினான்

"வேண்டாமடா, வவுனியாவுக்கு போவம். ஊருக்கு போகத்தான் அங்கையிருந்து வந்தது"

"சரி"

வாகனம் கொழும்பு புத்தளம் பிரதான வீதிக்கான பாதையை அண்மித்து புத்தளம் பக்கமாக பயணத்தை தொடர்ந்தது. தொலை பேசியில் தொடர்பு கொண்டு இளைய மகளோடு தொடர்ச்சியாகப் பேசுவதால் பேசுவதற்கு ஏதுமற்ற நிலையில் அமைதியே நிலவுகிறது. இளைய மகனின் மனைவி சகுந்தலா மாதுமையாளோடு உரையாடியபடியே வந்து கொண்டிருந்தாள். ஆனால், சபாபதி யாருக்கு பழைய ஞாபகம் நிழலாடியது, சிந்தனையில் ஆழ்ந்தார்.

வவுனியாவிலுள்ள கல்நாட்டின குளம் என்ற இடத்திலே வாழ்ந்து வந்த ஆதிக் குடும்பங்களில் சபாபதியின் குடும்பமும் ஒன்று மாமன் மகளான மாதுமையாளை இவர் திருமணம் செய்து, இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவள் ஒருத்திதான் பெண்பிள்ளை. அவள் இப்போது இலண்டனில் இருக்கிறாள். அவளோடதான் சபாபதியாரும் மனைவியும் 10 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இரண்டாவதாக மகன் தனராஜா. இவன்



இப்போது உயிரோடு இல்லை. மூன்றாவதும் கடசியுமான மகன் ரவி தான் இப்போது ஊரிலே வாழ்கின்றான். இவர்களை விமான

நிலையம் வந்து அழைத்துச் செல்கின்றான்.

கல்நாட்டினகுளம் ஓர் அழகிய விவசாயக் கிராமம். வவுனியாவின் முதிர்ந்த கிராமங்களில் இதுவும் ஒன்று. 84ம் ஆண்டின் மாவட்ட வரைபடத்தின் படியுள்ள நான்கு கோவில்களில் இங்குள்ள ஆசிக்குளம் கலாச்சார மணம் வீசும் கிராமமாகும். கல்நாட்டின குளம் கிராமத்தில் தான் இரத்தினசபாபதி பிறந்து வளர்ந்தது எல்லாமே

இக் கல்நாட்டினகுளம் கிராமம் வவுனியா மாவட்டத்தை சேந்தது. ஆனால், இதனை அடுத்தாதக அமைந்துள்ள கிராமமான களுகுண்டமடு, அலகல்ல கிராமம் ஒரு சிங்கள மக்கள் வாழும் கிராமம். இது அனுராதபுர மாவட்டத்தை சேர்ந்தது. கல்நாட்டின குளம் ஒரு பெரிய குளம், அத்துடன் இருவேறு இனக் கிராமங்களையும் இது எல்லையிடுகிறது. சிங்களக் கிராம மக்கள் பெரும்பாலும் ஆரம்பத்தில் விவசாயக் கூலிகளாகவே வாழ்ந்துள்ளனா். தமிழ் பிரதேசங்களில் விவசாயக் கூலி வேலையாட்களாகவே இருந்துள்ளனா். அக்குளத்தினுள் மீன் பிடிக்கவும் வருவார்கள். நரசிங்கா் கோவில் வேள்வியில் கலந்து கொள்வார்கள். அதே வேளை அலகல்ல மலைப் பிள்ளையார் கோவிலுக்கு தமிழ் மக்களும் சென்று ஒன்றாகவே, இன ஐக்கியத்துடனேயே வாழ்ந்தார்கள். இரு கிராமத்தவா்களுக்கும் பொதுவான வருடப் பிறப்பு மகிழ்ச்சி பொங்கும் ஒரு விழாவே. அங்கு இரு தரப்பிலும் பரஸ்பர நட்புறவு இருந்தது சிங்களவர் ஒருவருக்கு பல தமிழ் நண்பா்களும், தமிழா் ஒருவருக்கு பல சிங்கள நண்பா்களும் இருந்தனா்.

சபாபதியாருக்கும் பல சிங்கள நண்பா்கள் உள்ளனா். வருடப்பிறப்புக்கு முதல் நாள் களுகுண்டவெளி சென்று தனது நண்பா்களோடு அன்றிரவு அங்கேதான் தங்கியிருப்பார். குடித்து, உண்டு மகிழ்வார்கள். போர்ச் சூழலினால் சிங்கள மக்கள் குளத்திற்கு கூட வருவதில்லை. சில வயதுபோனவா்கள் மாத்திரம் இருதரப்பிலும் உறவைப் பேணி வந்தனா். அதில் சபாபதியாரும் ஒருவா். பின்னா் சபாபதி யாரின் மூத்த மகன் இயக்கத்துக்கு போன பின்னா் அவரும் உறவைத் தவிர்த்துக் கொண்டாா்.

அவா்களின் வாகனம் புத்தளத்தை அண்மித்து அனுராதபுரம் வீதியில் பயணத்தை தொடா்ந்தது.

“ஏதாவது சாப்பிடப் போறியளோ?” என்று ரவி கேட்கவே, “இல்லை” என்ற சபாபதியாா் சிந்தனையில் ஆழ்ந்தாா்.

பின்னைய நாட்களில் யாரோ யாரோவெல்லாம் தூண்டிவிட தமிழ் பிரதேசத்தின் நுழைவதும், நெற்கதிா்கள், வீடுகளை தீக்கிரை யாக்குவதும் தொடா்ந்தது. விவசாயக் கூலிகளாக இருந்த சிங்கள இளைஞா்கள் இராணுவம், ஊா்காவற்படைகளில் இணைந்து பொரு ளாதார நலனை பெற்றாலும் இன ஐக்கியம் என்பது ஆப்பிறுக்கப்பட்ட பிளவாகவே மிகுந்து நின்றது.

காலை நேரம் 10 மணியளவில் வவுனியா வந்த வாகனம் ஹொரவப் பொத்தானை வீதியில் பயணித்து, தபால் பெட்டி சந்தியால் திரும்பி அவா்களுடைய கிராமத்தை வந்தடைந்தது. சபாபதியாா் தனக்குரிய சிரம பரிகாரங்களை முடித்த பின்னா் அங்கு வந்து சோ்ந்திருந்த

நண்பர்களோடு உரையாடி மகிழ்ந்தார்.

வவுனியா வந்து ஒரு வாரமாகியும் எந்த சிங்கள நண்பர்களும் இவரை பார்க்க வராமை சபாபதிக்கு வேதனையை அளித்தது. சண்டை முடிந்து விட்டது, ஒரே தேசம், ஒரே மொழி என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், அவ்வாறில்லை என்பது சபாபதிக்கு புலப்பட்டது.

"நான் ஒருக்கா அலகல்லுக்கு போகப்போறன்" என்று தனது மனைவியிடம் உறிதியாக கூறினார்.

"அவர்கள் வந்து பாக்கவுமில்லை முதல் அவர்கள் நடந்த விதமும் உங்களுக்குத் தெரியும் தானே"

தனது மனைவி எதனை அடிப் படையாக வைத்து கூறுகிறாள் என்பதையும் சபாபதியார் தெளிவாக புரிந்து கொண்டார்.

"ஆரும் தூண்டிவிட வந்து வீட்டை எரிச்சவங்கள். அவங்கள் பாவம், தன்னிலை அறியாதவங்களப்பா எங்கட வயலிலை வேலைசெய்து அவங்கள் கட்டிவைச்ச நெல்லைத் தாங்களே வந்து எரிச்சுப் போட்டு போனவங்கள். பிறகு சின்னப்பிள்ளையளை எங்கட வீடுவழிய அனுப்பி அரிசி கேட்டவங்கள்."

சபாபதியார் தொடர்ந்தார்

நீண்ட விவாதங்களின் பின்னர் மாதுமையாள் சபாபதியாரின் வாதத்திற்கு பணிந்துவிட்டாள்.

"எப்ப போகப் போறியள்"

"நாளைக்கு போகப் போறன்"

மறுதினம் அதிகாலை தனது தினசரி கடைமைகளை முடித்துவிட்ட சபாபதியார் கால் நடையாகவே அல கல்லைக்கு புறப்பட்டார். குளக்கட்டு வழியா நடந்து செல்லும் போது தனது இளைமைக்கால நினைவுகளை மீட்டிய வாறே சென்றார். நடப்பதற்கு தடை செய்யப்பட்டு முடக்கி வைக்கப்பட்ட கால்கள் நீண்ட காலத்தின் பின்னர் நடக்கிறது. லண்டனில் நடப்பது பயிற்சி நடை இயந்திரத்தோடுதான். நின்ற இடத்திலிருந்து தான் நடை. சிங்களக் கிராம எல்லையை தொட்டுவிட்ட சபாபதியாருக்கு அங்குள்ளவர்களை மட்டுக்கட்ட இயல வில்லை. தனது பால்ய நண்பனான சிரிசேனாவின் வீட்டைத் தேடி போனார். வீடு பெரிய கல்வீடாக நிமிர்ந்து நிற்கின்றது. வீட்டின் வெளியே சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சிரிசேனாவை விசாரித்தார். அப்பிள்ளை களுக்கு தமிழ் தெரியவில்லை. ஆனால், சிரிசோனா என்ற பெயர் விளங்கிவிட்டது போல உள்ளே சென்ற ஒரு சிறுவன் அவரை அழைத்து வந்தான். வெளியே வந்த சிரிசேனா சபாபதியை கண்டவுடனேயே அடையாளம் கண்டு கொண்டார். ஓடிவந்து ஆரத்தழுவினார். உள்ளே அழைத்துச் செல்வதைப் பார்த்த சிறுவர்களுக்கு ஒரு தமிழரை அவர்களது தாத்தா தழுவி அழைத்துச் செல்லவது வியப்பாக இருந்தது.

"எப்ப அண்ணை வந்த நீங்கள்? எங்ளுக்கு தெரியாது" என்ற சிரிசேனா தனது மனைவி மல்லிகாவை அழைத்தார். வெளியே வந்த மல்லிகா சபாபதியாரை கண்டவுடன் பழைய நினைவுகள் மீண்டவளாக மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள். உரையாடல்கள் பரஸ்பரம் நிகழ்கின்றன.

அங்கு வந்து நின்ற சிரிசேனா, மல்லிகா தம்பதிகளின் பேரப்பிள்ளைகள் தமது பாட்டனும் பாட்டியும் பேசும் தமிழ் மொழியை எண்ணி வியந்தனர்.

முன்னைய நாட்களில் இரு கிராமங் களுக்கும் உறவு இருந்த போது இரு தரப பிற்குமே இரு மொழிகளும் தெரிந் திருந்தன. இன்றைய சந்ததிகளுக்கு உறவுகள் பிளவு பட்டு ஒரு மொழிக் கோட்பாடு உருவாகி விட்டது. இன்று இரு மொழி, மும்மொழி கோட்பாடு பற்றிப் பேசும் அரசியல் வாதிகள் தான் இக் கிராமத்தவரின் இரு மொழி கோட் பாடுடைய வாழ்வியலை சிதைத்தவர்கள்.

சிரிசேனாவின் பேரப்பிள்ளைகளோடு சபாபதியார் சிங்களத்திலே உரையாடினார். இதற்கிடையில், சபாபதியார் சிரிசேனாவின் வீட்டில் தங்கியிருக்கும் செய்தி கிராமம் முழுவதும் பரவியது சகோதர இன மக்கள் சிரிசேனாவின் வீட்டிற்கு வந்து சபாபதியாரை கண்டு சுகதுக்கங்களை பகிர்ந்து கொண்டனர்.

"அண்ணை, இரண்டு நாள் நிண்டு போங்கோவன். எல்லா வீட்டுக்கும் போய், எல்லாரையும் பார்த்துக்கொண்டு போகலாம்" என்றான் சிரிசேனா

"ஓமடா, நிக்கிறன்"

டீ சில்வா, தர்மசேன, பிரேமசிறி, எல்லாரும் தங்களது வீடுகளுக்கும் வருமாறு அழைத்தார்கள். அழைத்த வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு நேர உணவு எடுக்க சபாபதியார் தீர்மானித்தார். தொலை பேசி மூலமாக தான் இரு தினங்களுக்கு இவர்களோடு தங்கியிருக்க விரும்புவதாக தனது மனைவிக்கு தெரியப்படுத்துகின்றார். முன்னைய நாட்களில் இவ்வாறுதான் சபாபதியார் தங்கியிருப்பார். 30 வருடங் களின் பின் இப்போது அது மீண்டும் பலிதமாகின்றது.

இரு தினங்கள் நிறைவு பெற்ற பின்னர் சபாபதியார் புறப்படத் தயாரா கினார். அவரோடு பழகியவர்கள் யாவரும் திரண்டு வந்து வழியனுப்பினர்.

"நரசிங்கர் கோவில் பொங்கல் வருகுது எல்லாரும் கண்டிப்பாக வரவேணும்." என்று சபாபதி எல்லோருக்கும் அழைப்பு விடுத்தார்.

"சரி, நான் வாறன்" என்று கலங்கிய கண்களோடு விடைபெற்றுச் சென்றார் சபாபதியார். சபாபதியாரின் மறையும் உரு வத்தை அவரது நண்பர்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிசேனாவுக்கு ஒரு பிள்ளை ஆமியில், மருமகன் ஊர்காவற்படையில் இருக்கின்றனர். சபாபதிக்கு ஒரு பிள்ளை இயக்கத்தில் இருந்தது. இவர்களுக்கு இடையில் மொழிப் பிரச்சினை இனவெறி இல்லாதபோது, ஏன் இத்தனை காலமும் இவர்கள் பிரிந்திருந்தனர். விதையிடடவர் யாரோ?

முற்றும்

# உயர் பதவியில் இருக்கும் பெண்கள் எதிர் நோக்கும் சாவால்கள்

சந்திரலேகா கிங்ஸ்லி

பிரபஞ்ச இயக்கத்தில் ஆணும் பெண்ணும் சம பங்கு கொண்டவர் களாகவும் முக்கிய பாத்திரங்களாகவும் அவசியமான இயங்கு சக்திகளாகவும் காணப்படுவது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். இருந்தாலும் பழங்காலந் தொட்டு இன்று வரை பெண்கள் தாழ்வாக கருதப்பட்ட இலக்கிய வரலாற்றுப் பதிவுகளும் ஏராளமாகும். ஆனால் எத்தனை தான் அதனை மறுத்துப் பேசினாலும் எழுதினாலும் அவை தகர்க்கப்பட வேண்டியவைகள் எனக் கருதப்பட்ட பொழுதும் அவை சிரத்தையில்லாமல் கணக்கிலெடுக்கப்படாமல் விடப் படுவதும் சாதாரணமாகி விட்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் விஞ்சிக் கொண்டு அறிவியற் துறையில் அற்புதங் களுடன் இந்நூற்றாண்டில் பெண் முன்னேற் றங்கள் பல்வேறு கோணத்தில் பல்வேறு துறைகளிலும் வியாபித்திருப்பது பாராட்டுக் குரியதும் வரவேற்கக் கூடியதும் உற்சாகப் படுத்தப்பட வேண்டியதும் ஆகும். காலம் காலமாய் கலாசாரம், பண்பாடு, மதம், நாகரீகம், சமூக அரசியல் நிலைப் பாடுகள் என்பவைகள் பெண்ணை சிறைப் பறவையாக்கி வைத்திருப்பது சமூகவியல் பார்வையில் ஓர் உயிருக்கு இழைக்கப்பட்ட துரோகமும் ஒடுக்கு தலுமாகும்.

எனவே இவற்றை உடைத்து வெளிவர வேண்டிய தேவைப்பாடு உயிரிக்கு உந்துதலாக வருவது உயிரியலிலும் உளவியலிலும் இயல்பானதாகும். எனவே பெண் எனும் உயிரி தன்னை முனைப்பாக காட்டப்பட வேண்டிய தேவைப்பாட்டை உணர்வதும் அம்முனைப்பினை உலகுக்கு காட்டுவதும் கூட சமூக விடுதலையின் ஓர் அங்கமாகவே கருதப்படுகிறது.

இவ்வடிப்படையில் பெண் முன்னேற்றம், பெண் சமத்துவம், பெண் விடுதலை, பெண் ஒடுக்கு முறைக்கு எதிராகப் பேசுதல், பெண் அடிமைச் சூழலை ஏற்படுத்தல். என்பவை தகர்க்கப்பட்டு அவை மூலம் சமூகத்தின் வளர்ச்சியில் பெண்ணின் பங்களிப்பை உயர்த்த வேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்வாறான தோற்றப் பாடுகள் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை சமூகவியல் அடிப்படையில் தொடங்கி இன்று அறிவியல் சிந்தனைகளும் தொழில் நுட்ப உலகிலும் நீண்டு விட்டிருக்கிறது.

என்னதான் அறிவியல் சிந்தனைகள் உயர்ந்திருந்தாலும் உலகம் எல்லாத் துறையிலும் வளாச்சியடைந்து காணப் பட்டாலும் தொழில் நுட்பம் விஞ்ஞானம் விண்ணைத்தாண்டி விசாலித்திருந்தாலும் உயிரினங்களின் வளர்ச்சி மெச்சி மெச்சி பேசப்பட்டாலும் கூட ஆண், பெண் சமத்துவமின்மை என்பது எல்லா உயிரினங் களிலும் மிக முக்கியமாக மனித உயிரினத்தின் பெண்மை பற்றிய

நிலைப்பாடு தாழ்வாக சிந்திக்கப்பட்டதாயும் குறைவான பெறுமானம் கொண்டதாயும் பலவீனமுடையதுமான சிந்தனைகள் மாற்றப் படுவதாய் தெரிவ தில்லை.

இவ்வாறான நிலையில் யதார்த்த தடைகளை உடைத்த நிலையில் பெண்கள் இன்று பல்வேறுபட்ட துறைகளிலும் தம்மை நிலை நிறுத்த உட்சாகமெடுத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்குரிய ஆற்றலும் அவளுக்குள் அதிகமாய் உள்ளதாய் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. பொது வாகவே பெண்கள் தம்முடைய திறமை களாலும் ஆற்றல்களாலும் உயர் பதவிகள் உயர் தொழில்கள், வணிகத் தொடர் பாடல்கள், தகவல் தொழில் நுட்பங்கள், விளையாட்டுத் துறைகள், அரசியல் பொது நிர்வாகம் சமூக முன்னெடுப்புக்கள் சமூக செயற்பாடுகள் யந்திர வீர தீர செயற்பாடுகள் என்பவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பொழுது சமூக, கலாசார, பண்பாட்டு ரீதியான பல அழுத்தங்க ளையும் எதிர்ப்புக்களையும் அவள் தகர்த்தெறிய வேண்டியதாக காணப் படுகிறது.

இது அவர்களும் சமூகத்தி லுள்ள ஆண்கள், குடும்ப அமைப்புகள், மத அமைப்புகள், சமூக கட்டமைப்புகள் மனித குல மேம்பாட்டு மையங்கள் கலாசார பண்பாட்டு இலக்கிய அமைப்புகள் பொருளாதார பங்கீடுகள், என்பன சுதந்திரமான பெண்களின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாகவும் முன்னேற்ற தடையாகவும் காணப் படுகின்றது.

ஒரு பெண்ணை யாவரும் பார்க்கின்ற பார்வைக்குள் பழமையான எல்லா சோலிகளையும் உள்ளடக்கி எல்லா பிற்போக்கு தன்மை இன்னும் இன்னும் அவளை அடிமைப் படுத்தக் கூடிய அம்சங்களை தம் கண்ணில் அப்பிக் கொண்டு பார்க்கும் பார்வையின் அர்த்தத்தி லிருந்து சரியான விளக்கத் தினை பெற்றுக் கொள்ளும் பெரு முயற்சிகள் ஏதோ ஒரு வகையில் தோல்வியடைந்தனவாகவே காணப்படுகின்றன. ஆகவே மனித குல வளர்ச்சிக்கு தேவையான சரியான பங்களிப்பினை வழங்கக்கூடிய பெண் முன்னேற்றங்களை இனங்கண்டு அவற்றை ஏற்றுக் கொள்வதும் முன்னெடுப்பதும் மனித குல வளர்ச்சியை ஆதரிக்கும் அனைவரி னதும் கடமையாகும்.

எனவே சமூக விடுதலை பற்றிய சரியான சிந்தனைகளை உலகுக்கு எடுத்துக் காட்டும் ஒரு சில பெண்களின் சரியான நிலைப்பாட்டை தம் எழுத்திலும் செயற்பாட்டிலும் வாழ்விலும் கடைப் பிடிக்க வேண்டிய தேவை அவசிய மானதாகும். சமூகத்தில் பெண்ணின் விடுதலை சமூக விடுதலைக்கு சரிசமமாக உதவக் கூடியதுடன் சமூக விடுதலையை நிலைபெறச் செய்வ தாகவும் காணப் படுகின்றது. பெண் விடுதலை பற்றிய சிந்தனைகளை பேசாத சமூக விடுதலை அர்த்த மற்றதாகவே காணப்படும்.

உயர் பதவிகள், உயர் தொழில்கள் மற்றும் தொழில்நுட்ப பொருளாதார அரசியல் வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற பெண்களின் பெறு

மானத்தையும் குடும்பப்பாங்கான கோயிலுக்கு போய் 'அப்பாடா' என்று இருக்கின்ற பெண்களின் 'பாவப்பட்ட' பெறுமானத்தை ஒப்பிட்டுப்பார்த்தே சமூக அமைப்பு முறையில் மாற்றம் கொண்டு வரல் அவசியம் ஆகும்.

பெண்களின் உடைகள், ஆபரணங்கள், அணிகலன்கள், குணங்கள், இயல்புகள் தொடர்பான சரியான தெளிவான விளக்கம் சமூகத்தில் எடுத்துரைக்கப்படுவது கூட பெண் சார்ந்த பெறுமானத்தை சரியாக எடுத்துக் காட்ட உதவுவனவாக காணப்படும்.

பெண் ஒழுக்கம் அளவீடுகள் உள உடல் சார்ந்த நிலையிலிருந்து தொடர்பாடல் தகவல் பரிமாற்றம், உழைப்பு, அவளது இயல்பூக்கம் ஆண், பெண் கூட்டுழைப்பு குடும்ப அமைப்பு முறை இயந்திரம் பயன்பாடு என்பவற்றிலெல்லாம் விடுதலை எவ்வாறு தங்கியுள்ளது என்பதன் தெளிவை சமூகத்தில் ஊடகங்களில் வரை யறுத்துக் காட்டப்படுதல் அவசியமாகும். காலங்காலமாக பெண்களுக்கு இருக்கும் பெரும் பிரச்சனை ஒழுக்கம் சார்ந்த கட்டு மானத்தில் வரையறைகள் தான். இது சார்ந்த விளக்கம் சமூகத்தில் அழுத்தப்பட்டு அர்த்தப்படல் வேண்டும்.

பெரும்பாலும் பெண்கள் உயர் பதவிகளுக்கு வரும் பொழுது அவர்களுக் கெதிராக பூசப்படும் சமூகஞ்சார்ந்த பெறுமானத்தின் மதிப்பீடுகள் முறையாகவும் சரியாகவும் விளங்கிக் கொள்ளவும் அவற்றை எதிர்த்து நிலை நிற்கவும் வேண்டிய சவால் மிகுந்த ஆளுமையை அவள் தனக்குள் கட்டமைத்துக் கொள்வது மகவும் அவசியமானதாகும்.

ஒரு பெண் தன்னை உருவாக்கிக் கொள்ளும் விதத்தில் தான் சார்ந்த வர்களையும் உருவாக்கும் செயற் பாட்டிலுமே சமூகத்தில் பெண்களின் நிலைப்பாட்டை எம்மால் வழிநடத்த முடிகிறது. அவற்றில் தெளிவான அறிவு ஆற்றல் முன்னெடுப்புக்கள் அறிவியல் சிந்தனைகள் தோற்றப்பாடுகள் என்பவற்றை அச்சமின்றி கூறும் தைரிய மனப்பாங்கையும் வளர்த்து கொள்வது மிகவும் அவசிய மானதாகும்.

அரசியலிலும் சமூக செயற் பாட்டிலும் சூழ்நிலைக்கு பொருத்தமான முறையிலோ எதிரான முறையிலோ செயற்படும் பொழுது தனக்கேற்படும் அனுபவங்களை சரியான ஒழுங்கமைத்துக் கொள்ளும் ஆற்றலும் அதற்காக எடுத்துக் கொள்ளும் உழைப்பு முயற்சிகளும் சூழற்சி முறையுடையதாகவும் மீள் பரிசோதனைக்கு உட்படுவதாக மாற்றப்படல் வேண்டும். இவற்றினூடாக வரலாற்று ரீதியான மனித குல விருத்தியின் செயற்பாடுகள் ஆழப் படுத்தப்படுதலும் வேண்டும். இவ்வாறான சூழ்நிலையே பெண் விடுதலை மனித குல விடுதலைக்கு வித்திடக் கூடிய வலிமையை பெறுவதாக அமைகின்றது.

பெண் விடுதலை பற்றிப் பேசும் பொழுது தெரிவுகள் மிகவும் காத்திரமான பங்களிப்பினை செய்வதாக காணப்படுகிறது. பெண் தன் வாழ்வில் தெரிந் தெடுத்துக் கொள்ளும் கலாசார பண்பாட்டு அரசியல்

சமூக கட்டமைப்புகள், பொருளாதாரம் குடும்பம், அபிலாசைகள் என்பவற்றில் தெரிவுகளில் அறிவு பூர்வமான நிலைப் பாட்டை கொண்டிருப்பது அசவசிய மானதாகும். தெரிவில் தடுமாறுவதும் தெரிவை சரிப்படுத்திக் கொள்வதும் தெரிவை மீள் பரிசோதனைக்குட் படுத்துவதும் தெரிவை மாற்றுவதும், தெரிவை தெளிவுபடுத்துவதும், தெரிவை நிராகரிப்பதும், தெரிவை அர்த்த முள்தாக்குவதும் பெண்ணின் உள ஆற்றல்சார் விடயங்களாக காணப்படுகிறது. பெண்ணின் சரியான தெரிவுகள் பெண் முன்னேற்றத்துக்கு பெரிதும் உதவுகின்ற தாகவும், அவர்களின் வளர்ச்சியில் பங்கெடுப்பதாகவும் காணப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக பெண் தனக்கு ஏற்படும் எல்லாவிதமான சவால்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய சமூக வல்லமையை வளர்த்துக் கொள்ள வேண்டியதும் அவற்றை சரியாக புரிந்து கொள்வதும் மற்றவர்களுக்கு புரிய வைப்பதும் அது சார்ந்த எழுத்துக்களையும் செயற் பாடுகளையும் முன்னெடுப்பது பெண் விடுதலைக்கு வித்திடுவதாயும் எதிர்கால சமூக விடுதலைக்கு உரம் சேர்ப்பதாயும் அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# அழகியதான சமூகம்

– செம்மலை மோகனி

வன்முறையின் அடையாளமாக நான்
இல்லாத பொழுதுகளில்
எனைச் சுற்றியுள்ள மரஞ்செடி கொடிகளுடனும்
கோபமில்லாத நிலையில்
மனிதர்களின் சிரிப்பிலிருந்து
நான் கடத்தப்பட்டுள்ளேன்.

கொலைகாரனாக கொள்ளைக்காரனாக
கடத்தல் களவு கப்பம் கற்பழிப்பு
குற்றங் குறிகள் இல்லாத போது
நான் சந்தேக நபராகியுள்ளேன்.

எனதான பாதைகளில்
உயிர்ப்புக்களைக் காணமுடியாத போது
என் விடுதலை எப்போது?

அப்போது என் தாயின் கருங் கூந்தல்
வெண்பஞ்சாய் நரைத்திருக்கலாம்
அவள் நடை தளர்ந்து உடல் சுருங்கி
நடைபிணமாகி யிருக்கலாம்
திருமணம் முடித்த சோதரன் மகன்
மணவயதை எட்டியிருக்கலாம்
அன்பான காதலி
இன்னொருவரின் மனைவியாகி யிருக்கலாம்

மிதமாகத் தடவிப்போகும் சாரலை
உடலும் கண்களும் உணரும்
டெவனும் சென் கிளையரும் சீரழிந்திருக்கலாம்
பச்சையாய் செழித்து வாழ்வழித்த தேயிலை
தலையைத் தொலைத்து வாடியிருக்கலாம்
பள்ளப்பாதைகள் மேடாகியிருக்கலாம்
நாம் வளர்த்த கூடாரங்கள் அப்படியே இருக்கலாம்
இல்லை அடித்துப் பிடித்து சுண்ணாம்புச் சுவராய்
அலங்கார மேற்றிருக்கலாம்
எப்படியிருப்பினும் எல்லா நினைவுகளிலும்
தற்போதான வரண்ட
என் சிறைச்சாலைக் காலங்களைப் புதைத்து
விடுதலை பெறும் மனதிற்கு ஈரஞ்சேர்க்க
காத்திருக்கும் ஓர் அழகியதான சமூகத்தை
நினைத்திருக்கிறேன் நான்.


# கிராமத்தானின் நினைவுகள்

தணிகையன்

(சென்ற இதழில் - வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப் பட்டு தான் பிறந்த கிரரமத்துக்கு திரும்பிய வசந்தன் தனது இளமைக் காலத்தில் அக்கிராமத்தில் பெற்ற பயனுள்ள அனுபவங்களை மீட்டுப் பார்க்கிறான். அன்று கிராமத்து வாசிகசாலையில் சமத்துவமாக எல்லோரும் புத்தகங்கள், சஞ்சிகைகள் படிக்கவேண்டும் என அவனது நண்பன் ஞானம் கொண்டுவந்த பிரேரணை தோல்வியடைந்ததால் புதிய சவால்களை எதிர் நோக்கியபடி அன்றிரவு இருவரும் வீடு திரும்புகின்றனர்.)

அதிகாலையில் எழுந்து ஞானம் கிணற்றடியில் குளிக்கும் சத்தம் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்தான் வசந்தன்.

அன்று வெள்ளிக்கிழமை என்பது அப்பொழுதுதான் அவனுக்கு நினைவு வந்தது. நகர்ப்புறத்தில் இருக்கும் போது அதிகாலையில் எழுந்து நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குச் செல்லும்



பழக்கத்தை ஞானம் அந்தக் கிராமத்துக்கு வந்த பின்னரும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தான். பக்கத்து வீட்டில் வசிக்கும் வசந்தனும் அந்த பழக்கத்தை பழகிக் கொண்டான். மார்கழி மாத பனிக் குளிருக்காக போர்த்திய போர்வையை விலக்கி சூதலைத் தாங்கியபடி கொடியில் போட்ட வசந்தன் அவசர அவசரமாக காலைக் கடமைகளை முடித்துக்கொண்டு குளிப்பதற்கு கிணற்றடிக்குச் சென்றான். ஞானம் கேற்றடிக்கு வருவதற்கிடையில் குளித்து வேட்டி கட்டி சால்வையால் உடலைப் போர்த்தியபடி சயிக்களை உருட்டியபடி வசந்தன் கேற்றடிக்குச் சென்றான்.

வணக்கம்!

வசந்தனின் கேற்றடியில் அவனைப் போலவே வேட்டி சால்வை உடுத்து காத்து நின்ற ஞானம் வணக்கம் சொல்ல வசந்தனும் வணக்கம் சொன்னான். இப்படி வணக்கம் சொல்லும் முறை அன்றைய இளைஞர்களிடம் மிக அருகி இருந்தாலும் ஞானத்தைப்போல தமிழுணர்வால் ஈர்கப்பட்ட இளைஞர்கள் தமக்குள் இதனை இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்தனர். இருவரும் சயிக்கிகள்களில் ஏறி ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள நல்லூர்க் கோவிலை நோக்கி அதிகாலை பூசையில் பங்கு கொள்வதற்காக விரைந்தனர்.

என்ன ஞானமண்ணை இரவு நித்திரை கொண்டீங்களா?

எல்லாரும் இப்படித் தூக்கத்திலை இருந்தா எப்படி நாங்கள் நித்திரை கொள்ளுறது

எனக்கும் இரவு நித்திரை வரேல்லை.. இனியும் எப்பிடி உவங்க ளோடை உறவை வைச்சுக் கொள்ளிற தெண்டு எனக்குத் தெரியேல்லை

எதிலையும் அவசரப்படக்கூடாது. இராத்திரி வாசிகசாலையிலை நடந்த சம்பவத்துக்குப் பிறகுதான் எனக்கும் இந்தச்

சமூகம் எப்படி இறுகிப்போய்க்கிடக்கெண்டு தெரிஞ்சுது. தனியச் சாதியிலை மட்டுமில்ல இன்னும் கனவிசயங்களிலை இப்பிடித்தான் நாங்களும் இறுகிக்கிடக்கிறம் போலை. அதுகளை விளங்காமை தமிழருக்கெண்டு ஒரு தனிநாட்டை நினைக்கிறதிலை பயனில்லை.

அதுசரி அண்ணை உங்களுக்கு எப்பிடி சாதியளை ஒழிக்க வேணும் எண்டதிலை இவளவு உணர்வு வந்தது

பாரதி இந்திய சுதந்திரத்துக்காக எல்லாரும் இந்திய மக்கள் எண்ட உணர்வைப் பெறவேணும் எண்டான். அதுமாதிரி எல்லாரும் தமிழ் மக்கள் எண்ட எண்ணம் வந்தால்தான் நாங்கள் சுதந்திரம் அடையலாம் எண்டது ஒண்டு. அதையும் விட வாழ்க்கையிலை பட்டுத்தெளியிற பாடங்கள் தான் வலிமையானது எண்டு நான் நினைக்கிறன்

ஒழுங்கைகள் தெருக்கள் சன நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி இருந்தமையால் சயிக்கிள்களில் இருவரும் அருகருகே சென்றபடி கதைத்துக் கொண்டு செல்வது சுலபமாக இருந்தது. ஞானம் தனது பழைய நினைவுகளை வசந்தனுடன் பரிர்ந்து கொண்டான்.

ஐம்பத்தெட்டுக் கலவரத்தால் ஞானத்தின் தந்தையார் பாதிக்கப்பட்டு மனநோய்க்கு உள்ளானபோது அவனது வாழ்க்கை குழம்பிப்போனது. குடும்ப பொருளாதாரம் மட்டுமல்ல அவனது படிப்பு நேரங்களும் நோயுற்ற தந்தையாரை பராமரிப்பதிலேயே கழிந்தது. இவற்றால் ஏற்பட்ட மனத்துயரங்களிலிருந்து சிறிது ஆறுதலடைவற்கு தந்தையாரால் இள வயதில் இருந்தே அவனுக்கு ஊட்டப்பட்ட மதநம்பிக்கையே உதவிகரமாக அமைந்தது.

அவனது தந்தையாருக்கு மனநோய் அதிகரிக்கும் நாட்களில் அவனால் பாடசாலைக்குச் செல்ல முடியாதநிலை இருந்தது. அப்படி ஒருநாள் தந்தையாரை பராமரித்துவிட்டு மன அமைதிக்காக வீட்டிலிருந்து சற்று தொலைவில் இருந்த சிவன்கோவிலுக்குச் சென்றான். உயரமான கோபுரம், உள்மண்டபம், வெளிமண்டபம், உள்வீதி, வெளிவீதி என பிரமாண்டமான தோற்றத்துடன் அமைந்திருந்தது அந்தக் கோவில். அது பூசைக்கான நேரமல்ல என்பதால் சனநாட்டமின்றி அமைதியாகக் காணப்பட்டது. கோபுர வாசலின் நுழை வாயிற் படியில் நரைத்து நீண்ட வெண்தாடி, மேவி இழுத்து முடிந்த சிறிய கொண்டை, சற்று உருண்டு திரண்ட மேனியில் மடிந்து தொங்கிய உருத்திராட்சமாலையுடன் காலைப் பக்கவாட்டில் மடித்தபடி அமர்ந் திருந்தார் கோவிற் குருக்கள். கோவில் கிணற்றில் நீரள்ளி காலைக் கழுவிவிட்டு கோவிலுக்குள் நுழைவதற்கு வந்த கறுத்து: மெலிந்த ஞானத்தின் உருவத்தைக் கண்டதும் குருக்கள் உசாரடைந்தார். அன்றுதான் புதிதாக வரும் அவனது முகத்தை உற்றுப்பார்த்தார். பக்தி சிரத்தை யுடன் ஒரு புன்முறுவலை அவரை நோக்கி உதிர்த்துவிட்டு வாயிற்படியை தாண்டி உள்நுழைந்தான் ஞானம். எதையோ நினைத்தவராய் அவசரமாக வாயிற்படியை விட்டு அவசரமாக எழுந்த கோயிற் குருக்கள் அவனை நோக்கிப் பின்தொடர்ந்து வந்தார். மிகுந்த பக்தியுடன் மூலஸ்த்தானத்தை நோக்கி கரங்களைக் கூப்பி வணங்க முயன்ற ஞானத்தை நெருங்கிய அவர் தம்பி நீ ஆர்? என்று கேட்ட கேள்வி அவனைத் திகைக்க வைத்தது. அதை நான் யார் என்று தத்துவஞான அடிப்படையிலான கேள்வியாகப் புரிந்து கொள்ளும் நிலையில் அன்று அவன்

இல்லை. ஆனாலும் கடவுளை நோக்கி கூப்பிய கரத்தை கைவிடாமல் எதிரே வந்து நின்ற குருக்களை நோக்கி திருப்பியபடி திகைப்புடன் நின்ற அவனுக்கு "எவ்வடத்தை இருக்கிற நீர்" என்ற அவரது அடுத்த கேள்வி அதன் அர்த்தத்தை புரிய வைக்க கூப்பிய கரத்தை கீழே விட்டு விட்டு விரைவாக வாயிற் படியை தாண்டி வெளியே வந்தான். அந்தக் கோவிலின் பிரமாண்டமும் குருக்களின் தோற்றமும் அவனைப் பிடித்து அழுத்தி அச்சுறுத்துவது போல இருந்தது. தந்தையாரின் நிலையால் ஏற்பட்ட மனச்சுமையை இறைவனிடம் முறையிட்டு இறக்கி வைக்கலாம் என எண்ணி வந்த அவன் புதிய சுமையொன்றை மேலும் சுமந்தபடி தாயாரிடம் சென்றான். "அம்மா நாங்கள் ஆர்"

குருக்களின் கேள்வியால் அவன் திகைத்து நின்றது போலவே தாயாரும் அவனது கேள்வியால் சிறிது நேரம் திகைத்து நின்றாள்.

"தம்பி உதுகளை உனக்கு இப்ப ஏன்?"

அது அவசியமற்ற கேள்வி என்பதை தாயாரின் வார்த்தைகள் வெளிப்படுத்தியதா அல்லது மனங்களுக்குள் ஓர் அழுக்குச் சுமையாக மூடிமறைத்து நீண்ட காலம் காக்கும் சமூகத்தின் குரலாக இருந்ததா என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எங்களை ..... எண்டு சொல்லுறவை. ஆனால் உதுகளை இப்ப வெளிப்படையா ஒருத்தரும் கதைக்கிறேல்லை

நகர்ப்புற நாகரிகத்தின் குரலாக அவளது அடுத்த பதில் இருந்தது. அத்துடன் எண்டு சொல்லுறவை என்ற வார்த்தைக்குப் பின்னால் இது ஒரு காலகட்டத்தின் சமூகத்தின் திணிப்பு என்பதும் தாயாரின் வார்த்தையிலிருந்து இயல்பாகவே வெளிப்பட்டது.

அன்றிலிருந்துதான் அப்பாகு பாடுகளுக்கு எதிரானவனாக ஞானம் மாறியிருந்தான். அதற்கு அவன் படித்த நூல்களும் பக்கத்துணையாக இருந்தன.

ஐந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள நல்லூர்க் கோவிலை அடையுமுன்னர் ஞானம் கூறிய அவனது வாழ்க்கை அனுபவங்கள் கிராமத்துச் சூழலில் வாழ்ந்து பழகிய வசந்தனுக்கும் பயனாக இருந்தன.

ஆலயத்துக்கு முன்னால் அவர்கள் வந்து இறங்கியபோதுதான் அதிகாலைப் பூசைக்கான ஆரம்ப மணி அடித்தது. உள்ளே நுழைந்ததும் விநாயகர் வழிபாடு, பள்ளி அறைப்பூசை என ஆலயமணிகளின் பலத்த ஓசைகளுடன் பூசைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. வழமையாக எல்லாப் பக்தர்களையும் போல அப்பூசைகளைக் காண்பதற்காக விரைந்து ஓடி முண்டி அடித்துக்கொள்ளும் மனநிலையில் அன்று அவன் இல்லை. வழமைபோல அவ்வாறு செய்த வசந்தனுக்கு அவனது செயல் வியப்பாக இருந்தது. பூசை முடிந்து பக்தர் கூட்டம் சற்று விலகிய பின்னரும் மூலஸ்தானத்துக்கு நேரே சம்மாணம் கட்டி அமர்ந்தபடி கரங்களைக் கூப்பியும், இடையிடையே மூலஸ்தானத்தில் அமர்ந் திருக்கும் கந்தப்பெருமானை நோக்கி அருள் புரியுமாறு கரங்களை நீட்டியும் கண்களில் நீர் வழிந்தோட வாய்விட்டு அழுதும் வேண்டுதல்கள் செய்துகொண்டிருந்த வயதான தாயாரின் மீது அவனது கவனம் சென்றது. அவன் கூட அவனது தந்தையாருக்காக வாய்விட்டு வேண்டுதல்

செய்யாவிட்டாலும் மனம் வெதும்பி கண்ணீர் மல்க பல நாட்கள் வணங்கி நின்றிருக்கிறான். அந்தத் தாயாரின் நிலை அவனைப் பாதித்ததனால் வசந்தனையும் சைகை மூலம் அழைத்து அதனை அவதானிக்கும்படி கூறினான். வழமையாக அதிகாலைப் பூசைக்கு வரும் பக்தர்களில் பலர் அவ்வாறு வாய்விட்டு அழுது வேண்டுதல்கள் செய்வது வழக்கம். வழிபாடுகள் முடிந்து வெளியே செல்லும் வரை மௌனமாக இருந்த ஞானம் மீண்டும் சயிக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்ட போது உரையாடத் தொடங்கினான்.

"வசந்தன் அந்த வயசான தாயைக் கவனிச்சியா அவள் தன்ரை துன்பத்தை கண்ணீர் விட்டு கடவுளிட்டை எவ்வளவு நம்பிக்கையோடை அழுது புலம்பி வெளியிடுறா, அவவின்ரை பிரச்சினையை கடவுள் தீர்ப்பாரா?"

வசந்தனுக்கு ஞானத்தின் கேள்வி வியப்பை அளித்தது. ஆன்மிக விடயங்களில் பெரிதும் அக்கறை இல்லாமல் இருந்த அவனை காலையிலும் மாலையிலும் இறை வழிபாடு செய்ய ஊக்கம் அளித்ததே ஞனம்தான். இன்று அவனே அந்தக் கேள்வியைக் கேட்ட போது உடனடியாக அவனால் பதில் சொல்ல முடியவில்லை. சிறிது நேரம் மௌனமானான்.

"ஓ! பாக்கப்போனால் இதெல்லாம் ஒரு மன ஆறுதலுக்குத்தான்."

"அப்ப பிரச்சனையளை தீர்க்கிறதுக்கு மனிசர்தானே முயலவேணும்"

"ஓ.. சோதினை பாஸ்பண்ணவேணும் எண்டு சாமியைக் கும்பிட்டாப் போதுமா? படிச்சாத்தானே பாஸ்பண்ணலாம்"

"அப்ப இதிலை சாமியைக் கும்பிடுறதின்ரை பலன் என்ன?"

"ஒரு நம்பிக்கையும் ஒழுங்குபடுத்தலும் எண்டு சொல்லலாம் எண்டு நினைக்கிறன்"

"அப்பிடியெண்டா சாமியைக் கும்பிட்டுத்தான் ஒழுங்கையும் நம்பிக்கையையும் பெறவேணும் எண்டில்லையே அறிவுதான் தெய்வமெண்டு பாரதி சொல்லி இருக்கிறார்."

"அண்ணை நீங்கள் எங்கையோ போறியள் போல கிடக்கு.. இராத்திரிக் கூட்டம் உங்களைப் நல்லாப் பாதிச்சிட்டுது."

"ஏன்ராப்பா அப்பிடிச் சொல்லிறாய் நான் ஓரிடமும் போகேல்லை. நாங்கள் எதிர்கொள்ளிற வாழ்க்கையின்ரை உண்மை நிலையைத்தான் பார்க்கிறன். சமயங்கள் கூட எவளவோ விசயங்களைச் சொல்லுது. நாங்கள் வெறும் வழிபாட்டோடை நிக்கிறம். பரிட்சையிலை பாஸ்பண்ணவேணும் எண்டால் நீதானே படிக்கவேணும். சாமியைக் கும்பிடுறது மன ஒருமைப்பாட்டையும் அமைதியையும் மட்டும்தானே தரும். இல்லையா?"

"ஓ அது சரிதான்"

"அப்பிடியெண்டால் தனிமனிசரே தங்கடை பிரச்சினையளை தாங்கள் தீர்க்கிறதுக்கு தாங்கள்தான் முயற்சிக்க வேணுமெண்டால். சமுகமா எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினையளை ஆர் தீர்க்கிறது. அந்த வயதான தாயின் பிள்ளையளுக்கான சீதனப் பிரச்சினை, இரவு வாசிகசாலையிலை நடந்த சாதிப் பிரச்சினை, நாட்டிலை இடைக்கிடை கிளம்பிற இனப்பிரசச்சினை இதுகளைப்போலை இறுகிப்போய்க் கிடக்கிற எத்தனையே பிரச்சினையளை எப்பிடி இந்த சமூகம்

தீர்க்கப்போகுது"

"நீங்கள் பெரிய பெரிய பிரச்சினை யளை தூக்கிப்போடுறியள். உதுக் கென்னாலை பதில் செல்லேலாது. உதை இப்ப விடுவம், முதலிலை நாங்கள் வாசிகசாலையிலை இனி அங்கத்தவரா இருக்கிறதா இல்லையா எண்டு முடிவு செய்யவேணும்"

"நிச்சயமா நாங்கள் முழுக்க விலகிநிற்கக் கூடாது. சாதாரண உறுப் பினராகவாவது இருக்கவேணும். இல்லாட்டி தொடர்ந்தும் பிழையான பாதைக்கு செல்ல உதவிறதாகத்தான் இருக்கும்"

காலை நேரத்தில் தெருவில் வாகனங்கள் குறைவாக இருந்தமையால் இருவரும் சயிக்கிளில் சமாந்தரமாகச் சென்றபடியே உரையாடிக்கொண்டு சென் றனர். கிராமத்து தெருவிலும் ஒழுங்கை களிலும் கூட சனநடமாட்டம் குறைவாகவே இருந்தது. காலைப்பனிநீர் மரங்களில் இருந்து வழியெங்கும் நீர்தெளித்ததுபோல நனைத்துக் குளிர்மைப்படுத்தி இருந்தது. காலைப்பொழுதின் அழகையும் குளிர் மையையும் ரசித்தபடி பிரதான தெருவி லிருந்து ஒழுங்கைக்குள் இருவரும் திரும்புகின்றனர்.

"குட் மோணிங் கோயிலாலை வாறியள் போலை கிடக்கு ஞானம் அவசரமா. போறீரா?. கொஞ்சம் நில்லும்"

அப்பொழுதுதான் சேட்டை கைக ளுக்குள் மாட்டி பொத்தான்களை பூட்டியபடி தனது வீட்டின் தெருப்படலையை திறந்து கொண்டு வெளியே வந்த கனகநாயகம் ஞானத்தை கைகாட்டி மறித்தார்.

என்னண்ணை

இருவரும் அவருக்கு அருகே ஓரமாக சயிக்களை நிறுத்தி கால் ஊன்றி நிற்கின்றனர்.

"அந்தப் புத்தகம் எப்பிடி? படிச்சு முடிச்சிட்டீரா?"

"ஓ.. சீன மக்களின் வாழ்க்கை நிலையை வடிவா எடுத்துச் சொலலுறா"

அவர் ஞானத்துக்கு படிப்பதற்கு இரவல் கொடுத்த பேள்பக் என்ற ஆங்கில பெண் எழுத்தாளரின் "நல்ல நிலம்" நாவலைப் பற்றியே அவர் கேட்டார்.

இண்டைக்கு காலமை லைபிறறிக்குப் போறன்.. நீரும் மெம்பராச் சேர்ந்தா விரும்பிற புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம்

"ஓமண்ணை.. நானும் இராத்திரி உதைப்பற்றி யோசிச்ச நான். நிறைய விசயங்கள் படிக்கவேணும் போலை கிடக்கு எத்தினை மணிக்குப் போறியள்?"

"ஒன்பதரைக்குப் போவம்"

"சரியண்ணை வீட்டிலை நில்லுங்கோ கட்டாயம் வருவன்"

ஆலயத்துக்குச் சென்று திரும்பிய இருவரும் ஒரு அறிவாலயத்துக்குச் செல்லப் போகிறோம் என்ற ஒரு புத்துணர்வுடன் தத்தமது வீடுகளை நோக்கிச் செல்கின்றனர்.

## உலகம் அழிவது..?

ஆங்கிலேயர் காலத்துப்
பிரித்தாளும் சூழ்ச்சி அறிவீரோ
எங்களது இளமைக் காலத்தில்
போர் என்றால் போர் என்று புகன்றது
யார் நலனிற்காய் எனத் தெரிவீரோ?
தேசத்து மானிடர் வீரத்தில் மாண்டதில்
நலம் பெற்றார் யாரென ஓர்வீரோ?
பார் போற்றும் வகையில்
தீவதை ஆசியத்து அதிசயமாய் ஆக்குவதில்
ஆவது யார்க்கு பெருநலமென் புரிவீரோ?

தேசம் அழகியதெனில்,
சொர்க்கம் இம்மண்ணில் உள்தெனில்,
ஆளுமை யார்க்கும் வாய்த்த தெனில்,
வாழும் யார்க்கும் இது ஓர் நாடெனில்
இன மத குல வேறுபாடின்றிப் பிழைப்பிற்காய்
சட்டம் மீறி நாட்டை விட்டோடும்
குடியானவர் நலனில் உண்டோ எண்ணம்
இறைமை தனை ஏற்றோர் யார்க்கும்!

இறைமை இழந்தோர் இயலுமோ வெல்தல்?
தேர்ந்தால் கரம் சேர்ப்பர் மனிதர்!
'சர்வ தேசம்' பொடிபடப் பொடிபட
பேர்த்து எறிகின்ற ஓர் நோக்கில் நின்று
ஆர்த்தெழுந்தால் வேரொடு வீழும்!
அழிவில் ஒருகால் ஆனந்தம் அடைவர்,
நல்லவர் வாழ்வர் தீயவர் அழியின்!

## வாழ்க்கைப் பயணம்

அழ பகீரதன்

வாழ்க்கை என்பது பயணம்
நடந்த பாதைகள் சுவடுகள்
வாழ்ந்து முடித்தவர் கதைகள்
பாடப் புத்தகமாய் விரியும்

பாடிப் பறந்த நினைவுகள்
பருவ காலத்துச் சுகங்கள்
தேடி உலகில் செல்வங்கள்
சேர்த்த போதில் இன்பங்கள்
ஆடி அடங்கிடும் ஆயுளில்
வம்ச விருத்தியில் நிறைவுகள்

ஆறிலிருந்து அறுபது வரை
ஆனந்த உலகின் அனுபவங்கள்
ஊறிப் போன நினைவினில்
ஊரின் வனப்பில் மகிழ்வுகள்
தேறிக் கண்ட உண்மைகள்
தேவை நிமித்தமே உறவுகள்

உடம்பின் அணுக்கள் தேய்ந்தால்
இடம் கொடுக்குமோ மனமது
அடம் பிடிக்கும் நெஞ்சினில்
அடங்க மறுக்கும் உணர்வுகள்
தடம் பதித்த அந்த பயணத்தில்
விடவும் கூடுமோ பிணைப்புக்கள்

# பொருளாதார வளர்ச்சி மட்டும் அபிவிருத்தியாகிவிடாது.

கனகநாயகம் வேல்தத்சன்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் (Economic growth) தனியார் துறை (Private Sector) இயந்திரமாகவும் (Engine) அரசதுறை (State Sector) அதன் சாரதியாகவும் (Driver) நவீன பொருளிய லாளர்களால் விபரிக்கப்படுகிறது. இது சாத்தியமா?

மார்க்சிய அறிஞர்களால் வளர்ச்சி என்பது உற்பத்தி முறையில் (Modes of production) ஏற்படும் மாற்றாங்களை அடிப்படை யாகக் கொண்டு நோக்கப் படுகிறது. தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் சமூக உறவுகள், உற்பத்திகள், பரிமாற்றம் ஆகியவற்றின் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை



மார்க்சிய பொருளியல் பார்வையுள்ளோர் வலியுறுத்துவர். மானிட வரலாற்றில் பூர்வீக பொருளாதாரமுறைமை பரிணாம வளர்ச்சி யடைந்து ஒரு கட்டத்தில் முதலாளிய பொருளாதாரம் முறை மையாகி, சோஷலிஸ பொருளா தாரத்தினைத் தழுவி இறுதியில் கொம்யூனிஸ பொருளாதாரமாக முழுமை யடையும் என்பதே அவர்களது வாதம். இது நீண்ட காலம் எடுக்கத்தக்க வரலாற்றியல் பார்வை.

எனினும் வோல்ற்றர் றொஸ்ற்ரொவ், மார்க்சிஸிய கோட்பாட்டை எதிர்த்தார். "The Stages of Groeth a Non Communist Manifesto" எனும் வெளியீட்டில் நாடுகள் அனைத் துக்கும் பொதுவான அபிவிருத்திக் கட்டங்கள் உள்ளன என வாதிட்டார். அவர் ஐந்து கட்டங்களை வெளியிட்டார். முதலில் மரபு வழிச் சமூகங்கள், இரண்டாவதாக மாறு நிலைக்கட்டம், மூன்றாவதாக அபிவிருத்திப் பாதையில் புறப்படுதல், நான்காவதாக அபிவிருத்தியில் முதிர்ச்சி நிலை, ஐந்தாவதாக உயர்ந்தளவிலான நுகர்வுக் கட்டம் (The stage of high mass consumption) என் கிறார் றொஸ்ற் ரேவ் (Rostow). இவரைப் பின் பற்றிய பொருளியலாளர்கள், இவரை விமர்சித்து பின் மீண்டும் மார்க்சிய கண்ணோட்டத்துடன் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஆராய்ந்த ஏனைய பொருளியலாளர்கள் என அனைவரும் அபிவிருத்தி பற்றிய பல்வேறு கோட்பாடு களை உருவாக்கினர். நவீன மயவாக்கமும் நவீன மயமாகு தலுமே அபிவிருத்தி என்றும் வாதிட முற்பட்டனர் சிலர்.

பொருளாதார வளர்ச்சியின் பொருள் சார் நன்மைகள் அடிமட்ட மக்களிடமும் முழுமையாக சென்றடைந்து அவர்களின் தேவைகளும் நலன்களும் பூர்த்தி செய்யப்படுதலே பொருளாதார அபிவிருத்தி

எனப்படும் என்பதை அனைத்துக் கோட்பாட்டுக்களுக்காகவும் "பாடுபடும்" பொருளியலாளர்ளும் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றனர்.

இக்கட்டத்தில் தெளிவாக எமக்கு விளக்கும் விடயம் பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டிலோ அதன் ஒரு பிரதேசத்திலோ ஏற்பட்டாலும் அது அபிவிருத்தியாக பரிணமிக்க வேண்டுமெனில் அங்கு வாழும் அடிமட்ட மக்கள் மத்தியில் பொருட்களும் சேவைகளும் உரியமுறையில் நேர்த்தியாகவும் சரியாகவும் பங்கிடப்பட வேண்டும் என்பதாகும். அதாவது அபிவிருத்திக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படுதல் அவசியமானது தான். ஆனால் அது மட்டும் போதுமானதல்ல. வளர்ச்சியின் நன்மைகள் அடிமட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் 99% ஐயும் 1% ஆன 'மேலோங்கிகள்' அனுபவிக்க மிகுதி 1% ஐ மட்டுமே ஏனைய 99% ஆன ஏழைமக்கள் அனுபவிக்கும் நிலை அபிவிருத்தி ஆகிவிடாது. இது பணக்காரர்களை மேலும் பெரிய பணக்காரர்களாக்கி விடுவதுடன் ஏழைகளை மேலும் பரம ஏழைகளாக்கி வறியவர்களாக்கிவிடும்.

இந்த இடத்திலே தான் தனியார் துறையை இயந்திரமாகவும் அரசதுறையை சாரதியாகவும் உருவகப் படுத்துவதில் உள்ள பலவீனம் புரியத் தொடங்கும். அரசதுறையும் தனியார் துறையும் கோட்பாட்டளவில் வெவ்வாறாக வரையறுக்கப்பட்டாலும் ஒரு ஜனநாயக தாராண்மைவாத பொருளாதார முறைமை கொண்ட நாட்டில் அல்லது கலப்பு பொருளாதார முறைமை கொண்ட நாட்டில் நடைமுறை அவ்வாறு இல்லை. அரசியல்வாதிகளும் உயர் அரச அதிகாரிகளும் பாரியளவில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தனியார் துறை முதலீடுகளைக் கொண்டிருக்கிறார்கள். அபிவிருத்தியடைந்த அமெரிக்க ஐக்கிய நாடு தொடக்கம் மாலைதீவு போன்ற சிறிய ஏழைநாடுகள் வரை இதுவே நடைமுறையாக உள்ளது.


இவ்வாறான நிலையில் சாரதியே இயந்திரமாகிவிடுவதும் அல்லது தத்தமது சுயநல இயந்திரங்களை சம்பந்தப்பட்ட சாரதிகள் புதுப்பித்து மேம்படுத்தி ஏழைக் குடித்தொகைக்குள் வேகமாக ஓட்டுவதும் நிகழ்ந்தேறுகிறது. குடிமக்கள் காயப்படவோ சேதப்படவோ அழியவோ இது வழி கோலும்.

அதனால் தான் அரசதுறை, தனியார்துறை மட்டுமல்ல சிவில் சமூகமும் முழுமையாகப்பங்குபற்றும் வகையில் (தற்காலத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களும் NGO) ஜனநாயகத்தோடு நல்லாட்சியை வலியுறுத்துகிறது. பொறுப்புக் கூறுதலும் வகை கூறுதலும் (Responsibility and Accountability) வெளிப்படைத் தன்மையும் (Transparency) நல்லாட்சியில் இன்றியமையாதன வாகின்றன. பொருளாதார வளர்ச்சி என்பது வறுமை ஒழிப்பு (அல்லது தணிப்பு), உட்கட்டுமானங்களும் சேவைகளும், சுகாதாரம் தொழில் நுட்பமும் முகாமைத்துவமும், கல்வி, பண்பாடு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையும் சமாதானமும், சூழல் பாதுகாப்பு, பெண்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் ஆகியவற்றினையும் உள்ளடக்கியதாக, மேம்பாடடையச் செய்வதாக அமையும் போது அபிவிருத்தி சாத்தியமாகின்றது. ஆனால் இத்தகைய நல்லாட்சி அமைவது அரிது என்பதே உண்மையாகும்.

# பரவெளிக் காதல்

(தாகூரின் கீதாஞ்சலியில் இருந்து)

மொழிபெயர்ப்பு :குழந்தை ம.சண்முகலிங்கம்



1.

பாடழிந்த கோயிலின் பரம்பொருளே!
இடையறுந்த வீணையின் தந்திகள்,
இப்போ,
உனைப் போற்றி இசைப்பதில்லை.
உனது வழிபாட்டு வேளையை,
மாலைமணி ஓசைகள்
பிரகடனப் படுத்துவதில்லை.
உன்னைச் சூழவுள்ள பரவெளி,
சலனமற்று அமைதியுட் கிடக்கிறது.

நாடோடி வசந்தத் தென்றல்
உனது
தனித்த உறைவிடத்து வருகிறது.
அது,
மலர்களின் செய்திகளை
உனது வழிபாட்டுக்கு,
இப்போ, காணிக்கையாக்கப்படாத
மலர்களின் செய்திகளைக்
கொணர்கிறது.

முந்தைய,
உன் தொழுகையர்,
இன்னமும் மறுக்கப்பட்டுள்ள,
உனது அனுக்கிரகத்துக்கு ஏங்கி,
என்றென்றும் அலைகின்றனர்.
மாலை வேளையில்,
நெருப்பும் நிழலும்,
மங்கு புழுதியில் கலக்கும் போது,
இதயத்தில் பசியோடு,
அவன்,
பாடழிந்த கோயிலுக்கு
மீண்டும்
சோர்வுடன் வருகிறான்.

பாடழிந்த கோயிலின் பரம்பொருளே!
உனக்கு,
பலப்பல விழவு நாள்
அமைதியில் வரும்.
பலப்பல தொழுகை இரவுகள்,
தீபம் ஏற்றப்படாது போகும்.

கைத்திறன் மிக்க கலைவல்லார்,
படிமம் பல புதிதாய்ச் சமைப்பர்
காலம்,
அவற்றுக்கு வருகின்ற வேளை,
"மறத்தல்"
எனும் புனித அருவிக்குச்
சுமந்து செல்வர்.

பாடழிந்த கோயிலின்
பரம்பொருள் மட்டுமே,
சாவிலாப் புறக்கணிப்பில்,
வழிபடப்படாது
எஞ்சி இருக்கிறது.

II

சின்னக் குழந்தையின் கண்களுக்குள்
நழுவி விடும் நித்திரை
எங்கிருந்து அது வருகிற தென்பது
யாருக்காவது தெரியுமா?!
ஆம், மின்மினிப் பூச்சிகளால்,
மெல்லிதாய் ஒளியேற்றப்பட்ட,
கானகத்தின்
உரு நிழல்களின் மத்தியில்,
வனதேவதைகளின் கிராமத்தில்,
அதன் இருப்பிடம் உள்ளதென்றும்,
அங்கு,
வசீகரத்தின்
மருளரும்பு மொட்டுக்கள் இரண்டு
தொங்குகின்றன என்றும்,
வதந்தியொன்றுள்ளது!

மதலைகள் கண்களில் முத்தமிட,
அங்கிருந்தே அரு வருகிறது!

துயிலும் வேளை குழந்தையின் உதட்டில்
இமைத்திமைத்து ஒளிரும்
அப்புன்னகை
எங்கு அது பிறந்தது?
எவருக்கேனும் தெரியுமா?!
ஆம்,
சந்திரப் பிறையின்
மெல்லிளங்கதிரொன்று
மறையும் கோடை முகிலொன்றின்
விளிம்பைத் தொட்டது!
அங்கு,
பனித்துளி கழுவியதோர்
காலையின் கனவில்
அப்புன்னகை பிறந்தது
துயிலும் வேளை, குழந்தையின்
உதட்டில்,
இமைத்திமைத்து ஒளிரும்,
அப்புன்னகை பிறந்தது,
என்று
வாந்தியொன்றுள்ளது.

சின்னக் குழந்தையின் உறுப்புக்களில்
மலரும், அவ்வினிய மென்புதுமைக்
கிளர்ச்சி
இத்தனை காலம்...
எங்கு அது மறைந்து கிடந்ததென்பது,
எவருக்கேனும் தெரியுமா?!
ஆம், அன்னை,
இளஞ்சிறு பெண்ணென இருந்த காலை,
மென்நயம் வாய்ந்த,
அரவமற்ற,
காதல் மறைபொருளில்,
அது, அவளது,
இதயத்தில்,
பரந்து தோய்ந்திருந்தது
சின்னக் குழந்தையின் உறுப்புக்களில்
மலரும்
அவ்வினிய மென்புதுமைக் கிளர்ச்சி!!

III

முடிவற்ற உலகங்களின் கடற்கரையில்
குழந்தைகள் சந்திக்கின்றன!
எல்லையற்ற வானம்
தலைக்குமேல்
அசைவின்றிக் கிடக்கிறது!
அமைதி இழந்த நீர்
கொந்தளிக்கிறது!
முடிவற்ற உலகங்களின் கடற்கரையில்,
கூச்சல்கள், ஆடல்களோடு
குழந்தைகள் சந்திக்கின்றன!
மணல் கொண்டு
அவர்கள்
தம் வீடுகளைக் கட்டுகிறார்கள்.
வெறும் சிப்பிகளை வைத்து
அவர்கள் விளையாடுகிறார்கள்.
சருகுகள் கொண்டு
அவர்கள்
தங்கள் வள்ளங்களை இழைக்கிறார்கள்.
புன்சிரிப்போடு அவற்றைப்

பரந்த ஆழத்தில் மிதக்க விடுகிறார்கள்.
உலகங்களின் கடற்கரையில்,
குழந்தைகள் விளையாடுகிறார்கள்!

நீந்த அவர்களுக்குத் தெரியாது.
வலை வீச அவர்களுக்குத் தெரியாது.
முத்துக் குளிப்பவர்
முத்துக்களுக்காகச் சுழியோடுகிறார்கள்.
வணிகர்,
தமது கப்பல்களில் பயணிக்கிறார்கள்.
குழந்தைகளோ,
கூழாங்கற்களைப் பொறுக்கி
மீண்டும்
அவற்றை எறிந்து பரப்புகிறார்கள்!
மறைந்திருக்கும்
பொக்கிஷங்களை
அவர்கள் தேடவில்லை!
வலை விரிக்கவும்
அவர்களுக்குத் தெரியாது!

சிரிப்பில்
கடல் பொங்கி எழுகிறது!
கடற்கரையின் புன்னகையோ,
மங்கலாக மினுமினுக்கிறது.
குழந்தையின்
தொட்டிலை ஆட்டும் அன்னை போல,
சாவோடு செயற் தொடர்புடைய
அலைகள்,
குழந்தைகளுக்கு
அர்த்தமற்ற கதைப் பாடல்களைப்
பாடுகின்றன.

கடல்,
குழந்தைகளோடு விளையாடுகிறது!
கடற்கரையின் புன்னகையோ,
மங்கலாக மினுமினுக்கிறது.
முடிவற்ற உலகங்களின்
கடற்கரையில்
குழந்தைகள் சந்திக்கின்றன!

பாதை அற்ற வானத்தில்
மழைப்புயல் அலைகிறது!
தடமற்ற தண்ணீரில்
கப்பல்கள்
பாடழிந்து போகின்றன!
மரணம் பரவிக் கிடக்கிறது!
குழந்தைகள் விளையாடுகிறார்கள்!
முடிவற்ற உலகங்களின்
கடற்கரையில் தான்
குழந்தைகளின்
பெருஞ் சந்திப்பு நிகழ்கிறது!

IV

நான் பாடவந்த பாடலோ,
இற்றை நாள்வரை
பாடப்படாதிருக்கிறது!

எனது இசைக்கருவியின் நரம்பை,
முறுக்கேற்றுவதிலும் தளர்த்துவதிலும்,
எனது நாட்களைக் கழித்துவிட்டேன்!
காலம், இன்னமும் சரிப்படவில்லை!
வார்த்தைகள சரியாய்
அமைந்திடவில்லை!
விரும்பினால் விளையும் ஏக்கம் மட்டுமே,
பெருந்துயராக,
என் உள்ளத்துள்ளது!

மலர், இன்னமும் விரிந்திடவில்லை!
தென்றல் மட்டுமே
மூச்செறிந்து செல்கிறது!

அவனது முகத்தை நான் கண்டதில்லை!
அவனது குரலையும் கேட்டதில்லை!
என் மனைமுன் செல்லும்
வீதியில் பிறக்கும்
அவனது காலடி மென்னொலியை
மட்டும்,
என் அகத்திருந்து கேட்டிருக்கின்றேன்!
தரைமீது,

அவனது இருக்கையை விரிப்பதில்,
நெடிதெனக் கிடந்த நாளும்
கடந்தது!
ஆயினும்..
தீபம் ஏற்றப்படவில்லை!
அதனால், அவனை,
என் அகத்துள் வருமாறு
என்னால் கேட்கவும் முடியவில்லை!

அவனைத் தரிசிக்கும் நம்பிக்கையோடு
இருக்கிறேன்!!
ஆயினும் அத்தரிசனம்...
இதுவரை இல்லை...
ஏ
நீ பேசாதிருந்தால்,
என் இதயத்தை,
உனது அமைதியால் நிரப்பி(ச்)
சகித்துக் கொள்வேன்!
நட்சத்திர விழிப்போடும்,
பொறுமையால்
தாழக் குனிந்த தலையோடும்,
காத்திருக்கும் இரவு போல,
ஆடாது அசையாது
காத்திருப்பேன்!

விடிகாலை நிச்சயம் வரும்!
இருள் மறையும்!
வானைத் தகர்த்து உனது குரல்
பொன் அருவியெனக் கொட்டும்!

அந்த வேளையில்,
எனது
பறவைக் கூடுகள் அனைத்திலிருந்தும்
உனது வார்த்தைகள்,
பாடல்களில்
இறக்கை அடிக்கும்!
எனது,
கானகத் தோப்புக்கள் யாவற்றிலும்,
மலர்களில்,
உனது
இசைக்கோலங்கள் மோதும்!......

VI

இதயம் இறுகி,
வறண்டு வெடித்திருக்கும் வேளையில்,
கருணை மழையென
என்மீது பொழி!

வாழ்வு வனப்பை இழந்த வேளையில்,
பொங்கு பாடலோடு இங்கு வா!

ஆர்ப்பரிப்பு மிக்க பணி,
தன் பேரிரைச்சலைத்
திசை தொறும் எழுப்பி(ப்)
புற உலகங்களிலிருந்து
என்னை அடைத்துவிடும் வேளையில்.....
அமைதியின் தலைவ!
உனது அமைதியோடும்,
ஓய்வோடும்,
என்னிடம் வா!

இழிந்த எனது இதயம்
மூலையில் அடைபட்டு(ச்)
சுருண்டு கிடக்கும் வேளையில்,
எனது மன்னவனே!
கதவை மோதித் திற!
அரச ஆசாரத்தோடு வா!

மருட்கையும் புழுதியும் கொண்டு,
ஆசை,
மனதைக் குருடாக்கும் வேளை,
ஓ புனிதனே! விழித்திருப்பவனே!
உனது ஒளியோடும்,
முழக்கத்தோடும்,
வா!

# நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு?

ஆராய்ச்சிமணி அதவா அ.சிந்தாமணி

"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று ஔவையார் சொன்னவராம். அதனாலைதானே என்னவோ ஐயர்மார் ஆக்களுக்குப் பூனூல் போடுறவை. அவைக்குக் கடவுளோடை கதைக்கத் தெரியும் எண்டுதான் நாங்களெல்லோரும் கோயிலிலை போய் அவையிட்டைச் சொல்லி அரிச்சனை செய்விக்கிற னாங்கள். இப்ப என்னெண்டால் கையிலை கழுத்திலை இடுப்பிலை எண்டு எல்லா இடமும் நூல் கட்டிக்கொண்டு ஆக்கள் திரியினம். ஒரு இருவது முப்பது வருசம் முந்தி யாரும் இப்பமாதிரிக் கைவழிய நூல் கட்டித் திரிஞ்சு நான் காணேல்லை.

தமிழ்ப் பொம்பிளையள் கொஞ்சம் கொஞ்சமாக் கந்தசட்டி கவுரி விரதமெண்டு கைவழிய கட்டத் துவங்கி, இப்ப கடல் கடந்து போன பிறகு நூல் யாவாரம் தூள் பறக்குது. அப்ப இருவத்தைஞ்சு ஐம்பது சததுக் கெல்லாம் கட்டின நூலுக்கு எத்தினையோ டெலர் பவுண் கணக்கிலை காசு சிலவழிக்கினம். அதைவிட இப்ப கோவிலுக்குப்போய் நூல் கட்டாமை வாறவையைக் காண ஏலாதமாதிரி தமிழ்ச் சைவச்சன மெல்லாம் கறுப்புச் சிகப்பு காவி மஞ்சள் பச்சை எண்டு பல நிறத்திலையும் நூல் கட்டிக்கொண்டு திரியுது.

புத்த சமயச் சனம் பிரித்நூலெண்டு சொல்லி வெள்ளை நூல் கட்டிக்கொண்டு திரியுது. முந்தி முந்தி எவரிண்டையும் தலையை மோந்து பாத்து, நல்லெண்ணை மணந்தால் தமிழன் தேங்காய் எண்ணெய் மணந்தால் சிங்களவன் எண்டு கண்டு பிடிப்பன். அது மாதிரி கலர் நூல் கட்டினாத் தமிழன் வெள்ளை எண்டால் சிங்களவன் எண்டு ஆராய்ச்சி பண்ணிக் கண்டு பிடிச்சன். அதன் பிறகு என்னண்டா சிங்களச் சனமுமெல்லோ இப் கலர் கலரான நுல் கட்டிக்கொண்டு திரியுது.

அண்டைக்குச் சந்தையிலை ஒரு ஆள் நெத்தி நிறைய திருநீறும் பூசிக் கையிலை சிவப்பு நூலும் கட்டிக் கொண்டு காய்கறி வித்துக் கொண்டிருந்துது. தமிழிலை கதைச்சன். தமிழிலை மறுமொழியும் சொல்லிச்சுது. ஆனால் எங்களுக்குத் தெரிஞ்ச தமிழ் மாதிரித் தெரியேல்லை. தயங்கி தயங்கி "தம்பிக்கு ஊரெங்கை?" எண்டு கேட்டன். "மாத்தறை" எண்டு சொல்லிச்சுது. மாத்தறையிலையும் தமிழர் இருக்கினையோ எண்டு யோசிச்சுப்போட்டு தம்பி தமிழ்த் தானே எண்டு கேட்டன். "இல்லை நான் சிங்களம்" எண்டுது. அப்ப இதென்ன திருநீறும் கையிலை சிவப்பு நூலும் எல்லாம்" எண்டு கேட்டன். அது கத்தரகம தேவாலயத்திலை கட்டின நூலும் பூசின திருநீறும் எண்டு விளங்கப்படுத்திச்சுது.

நல்லபிள்ளை எண்டு நினைக்கிறன் நான் குழம்பிப் போனன் எண்டு விளங்கியிருக்க வேணும். "நாம எல்லாக் கோவிலுக்கும் போவான்" எண்டு மேலும் விளக்கமழிச்சுது. அப்ப சைவம் பௌவுத்தம் எண்டால் நூல் கட்டுவினம் எண்டு ஆராஞ்சு ஒரு முடிவுக்கு வந்தன். வெள்ளை நூல் இருந்தா புத்தசமயம் எண்டும் விளங்கிக் கொண்டன்.

பிறகொரு நாள் என்னுடைய கந்தோரிலை வேலை செய்யிற ஒரு சிங்கள ஆள் மஞ்சள் நூல் கட்டிக்கொண்டு வந்தார். சைவக் கோவில் நூல்களைப் போலை இல்லாமல், அந்த நூல் நல்ல ஒழுங்கா நேர்த்தியா வெட்டிக் கட்டப்பட்டிருந்துது. "எந்தக் கோவில் நுல் இது?" எண்டு கேட்டன். "இதுவும் பிரித்நூல்தான்" எண்டார். இந்தியாவிலை புத்தகாயா விலை மஞ்சள் நூல் கட்டுகிறவையாம். இங்கையும் அந்தமாதிரிச் செய்யினம் எண்டு விளங்கப்படுத்தினார்.

என்னுடைய நூல் அறிவு நூல் சிக்கல் போலை குழம்பிக் கொண்டு போகிற இந்தக் காலத்திலை தான், இன்னொரு சிங்களக் கூட்டாளி கையிலை மஞ்சள், சிவப்பு, ஒறேஞ், நீல நிற நூல்களையும் சேர்த்து இழைச்ச வெள்ளை நூல் ஒண்டு கட்டியிருந்தார். இதெந்தக் கோயில் நூல் எண்டு நான் கேக்க முன்னமே, எண்ட பார்வையை விளங்கிக் கொணடவர் மாதிரி "அது புத்தசமயக் கொடியிலை உள்ள அஞ்சு நிறங்களும் எண்டு விளங்கப் படுத்தினார். எண்டாலும் மனிசர் ஏன் நூல் கட்டிக்கொண்டு திரியிறவை எண்டு இன்னமும் எனக்கு விளங்கேல்லை. அதாலை நூல் கட்டுற குருக்கள் ஒருவரிட்டைப் போய் இந்த நூல் கட்டுகிறதிலை இருக்கின்ற மருமம் என்னவெண்டு பக்தி விசுவாசத்தோடை கேக்கிறமாதிரி கேட்டன். அவர் வலும் உற்சாகமாக "தம்பி எங்கடை முன்னோருக்கு எல்லாச் சயன்சும் தெரியும். இப்ப இந்த மின்சாரம் இருக்கெல்லோ அது கண்ணுக்குத் தெரியாதமாதிரி ஓடுது. எண்டாலும் அதிலை பெரிய பவர் இருக்குதெண்டு உமக்குத் தெரியும் தானே. பற்றியைச் சாச்பண்ணுகிற மாதிரி நாங்க மந்திரம் சொல்லி நூலிலை பவரை ஏத்தி வைக்கிறம். அந்தப் பவர்தான். கட்டி இருக்கிறவையை வெளியிலை இருந்து வாற கெட்ட சக்தியளிட்டை இருந்து காப்பாத்துகிறது..." எண்டு அவர் தொடர முன்னாலை நான் குறுக்கிட்டன்,

"குருக்கள் ஐயா, அதுசரி. அப்ப பொம்பிளையள் கையிலை நூல் கட்டி எப்பிடிப் புருசனைக் காப்பாத்தப் பார்க்கினை? "ஐயர் ஒரு ஞானப் புன்னகையுடன் "அங்கைதான் மாங்கல்யத்தின்ரை மகிமை இருக்குது" எண்டார். எனக்கு அந்த லைனிலை பேச விருப்பம் இருக்கேல்லை, "ஐயா.. தாங்யூ வெறி மச். எண்டாலும் இந்த நூல்களிலை ஏந்தியிருக்கிற பவர் எத்தினை நாளுக்கு நிண்டு பிடிக்கும்? சவுக்காரம் போட்டுக் குளிக்கேக்கை கழுவேக்கை இறங்கிப் போகாதோ? பற்றியளுக்கு ஷெல்வ் லைவ் எண்டு

வைச்சிருக்கிற மாதிரி நூலுக்கு ஒரு லிமிற் இருக்காதோ?'' எண்டு கேட்டன்.

குருக்கள் உலகம் தெரிஞ்சவர். அவருக்கு எண்ட கதை எங்கை கொண்டு போய் விடப் போகுது எண்டு விளங்கியிட்டுது போலை. தனக்கு அவசரமான அலுவல் இருக்குது எண்டு சொல்லிப்போட்டு உள்ளுக்குப் போயிட்டார். எனக்கு இன்னமும் நூல் கட்டிறதிண்டை சயன்ஸ் சரியாப் பிடிபடேல்லை எண்டுதான் நினைக்கிறன். முந்தியெண்டா வேதாளசிங்கனிட்டை கேட்டிருக்கலாம். மூதேசியைக் கண்டு வருசக் கணக்காகுது. அதாலை என்டை ஆராய்ச்சியைக் கைவிடேலுமா?

இந் நூல் ஆராய்ச்சியை இன்னங் கொஞ்சம் தூரங் கொண்டு போய் ஒரு பெரிய தீசிஸ் எழுதி அதுக்கு ஒரு கலாநிதிப் பட்டம் வாங்கிறதுதான் எண்டை அடுத்த புறொஜெக்ற். எண்டாலும் எண்ட ஆராய்ச்சியை எவரேன் புறெபசர்மாரிட்டைச் சொன்னன் எண்டால் அதை அவையள் தங்கட ஆராய்ச்சி எண்டு சொல்லி நோபல் பரிசுமாதிரி எதுக்கும் தெண்டிச்சாலும் எண்டும் பயமாயிருக்குது. அதுக்கும் எப்பிடியும் ஒரு வழி கண்டு பிடிக்கிறது எண்டு ஒரு புறஜெக்ற் போட வேணும் போல. உங்கள்ளை ஆருக்கேன் இந்த நூல் மகிமையைப் பற்றி ஏதேன் தெரியுமெண்டா எனக்குச் சொல்லுங்கோ. கட்டாயம் எண்ட தீசிசிலை உங்களுடைய உதவிக்கு நன்றி தெரிவிப்பன்.

## உன்னைப் பார்

சு. சுகேசனன்

புனர் வாழ்வு
அனைவருக்கும் ஒரு புதிர்
தீண்டத்தகாதது
வெளியார்க்கு
இங்கு சிக்கினோம்
எனும் உளப்பாங்கு
உள்ளார்க்கு

கருவறை முதல்
கல்லறை வரை
தேடுகின்றான்
ஒவ்வோர் மனிதனும்
தன்னொழுங்கில் தனக்கு
அன்னம்
அன்பு
ஆதாரம்
இருக்கை என
போசனையும்
செய்கின்றான்
அவனே அறியாது
வாழ்விற்காய் கற்கின்றான்
வாழ்நாள் முழுவதும்
ஒவ்வொரு கணமும்
பாசறையும்
தானேயாகின்றான்

உன்னைக் கொண்டு
உன்னைப் பார்
இதை ஓர் கருவறை
உலகின் அனுபவமாக
கருத்திலேற்றிக்
கொள்கின்றான்

# மௌன யுத்தம்

தாமரைச்செல்வி

இப்படி ஒரு பிரிவு ஏற்படும் என்று போன மாதம்வரை அவள் நினைத்தும் பார்த்ததில்லை. இத்தனை வருடங்களும் இப்படி இயல்பாய் நடந்தது போலவே தான் இருந்தது.

அவர் அப்படியொன்றும் மோச மானவராய் இருந்ததில்லை என்று தான் இப்போதும் தோன்றுகிறது. ஒரு நிமிடத்தில் அவள் உணர்ந்த ஆதங்கம் இயலாமை கையாலா காத்தனம் எல்லாமாகச் சேர்ந்து தான் அவளை இந்த முடிவை எடுக்கவைத் திருக்க வேண்டும்.



அவளின் பிரிவு அவரை அப்படி யொன்றும் வருத்தப் போவதில்லை என் பதும் அவள் உணர்ந் ததுதான். ஒரு வினாடி நடந்தவற்றை நினைக் கும் போது தான் எடுத்த முடிவு சிறு பிள்ளைத்தனமானதோ என்றும் தோன்றியது.

அவர் எப்போதும் அவராகவே இருந்திருக்கிறார். மற்றவர்களுக்காக என்றைக்குமே தன்னை விட்டுக்கொடுத்து நடந்தவரல்ல. அவரோடு வாழ்ந்த காலங்களில் கூட அவரை அறிந்து கொள்ள முடியா தவளாகவே அவளும் இருந்திருக்கிறாள். அவர் அவராகவும் அவள் அவளாகவுமே இருந்திருக்கிறார்கள்.

அவளைப் பொறுத்தவரை அவர் ஒரு நெகிழ்ச்சியான கணவராக ஒரு போதுமே இருந்தது இல்லை. அவரின் படிப்பு மேதாவித்தனம், தன்னைப்பற்றிய கர்வம் இவையெல்லாம் அவளிடம் அவரை ஒரு படி தள்ளியே வைத்திருந்தது. மனைவி என்பவள் இப்படிதான் இருக்க வேண்டும் என ஒரு வரையறை அவருக்குள் இருந்தது.

குடும்பம் என்றால் இந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும் என்று எழுதாத சட்டத்தை அவர் ஆரம்பம் முதலே அமுல்படுத் தியிருந்தார். அது உனக்கானது இது எனக்கானது என்ற வாழ்க்கை சின்ன சின்ன வலி களுடன் நகரும் வாழ்க்கை... .......... சண்டை யில்லை........ குரலு யர்த்தல் இல்லை...... அதி மேதாவித் தனத்துடன் ஆன மௌனமான யுத்தம்.

திருமணமான புதி திலேயே அவரது இயல்பை அவள் ஓரளவுக்கு ஊகித் துக் கொண்டாள். மனைவியுடன் சிரித்துப் பேசினாலே அவளுக்கு இடம் கொடுத்ததாய் போய்விடும் என்ற பயம் அவருக்குள் இருந்தது. அந்தப் பயமே அவர்களுக்குள் ஒரு இடைவெளியை ஏற்படுத்தியிருந்தது.

அவருக்கு நண்பர்கள் என்று வந்து போகின்றவர்களும் மிகச் சிலரே அவர்களோடு அவளும் அதிகம் கதைத்ததில்லை வந்து அமர்ந்து மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப் பார்கள். அவள் சிறு முறுவலுடன் ஒரு தேநீரோ கோப்பியோ கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்வாள். அவர்கள் பேசிக்கொள்ளும் பல

விடயங்கள் அவளுக்கு புரிவதில்லை. இலங்கை அரசியலிலிருந்து உலக அரசியல் வரை அவர்கள் பேசிக்கொள்வார்கள். அரசியல் விஷசயங்களில் அவளுக்கு ஆர்வம் இருந்ததில்லை.

பல்கலைக்கழக படிப்பு வெறும் பாடப் புத்தகங்களுடனேயே போய்விட்டது. அவை தாண்டிய வேறு விடயங்களில் கவனம் போனதில்லை சிறுவயதிலிருந்தே அவள் கொஞ்சம் அமைதியான பெண்ணாகவே வளர்ந்திருக்கிறாள். தனக்கு என்ன தோன்றுகிறதோ, தனக்கு எது இயல்பாக அமைகிறதோ அதன் படியே நடந்து கொண்டிருக்கிறாள். அவளால் யாருக்கும் அநீதி நிகழ்ந்ததில்லை. யார் மனதையும் காயப் படுத்தியதில்லை. அவளுக்கு இப்போதும் ஞாபகமிருக்கிறது.. "இந்தப்பிள்ளை பின்நாளில் கஷ்டப்படப்போகுது இப்பிடி எதுவுமே தெரியாமல் தன்பாட்டில நடக்கிறவளை வாறவன் பேய்க்காட்டப்போறான்." அப்பா ஆதங்கத்தில் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள். அவளுக்கு அந்த வார்த்தைகளின் அர்த்தம் அப்போதும் புரியவில்லை. பிற்காலங்களிலும் புரியவில்லை திருமணப்பேச்சு நடந்த பொழுது அப்பா மிகவும் பயந்தார். அவளுக்கு பார்த்த மாப்பிள்ளை பற்றி ஊருக்குள் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. படித்தவர், உலக அறிவுள்ளவர், பேச்சாற்றல் உள்ளவர் அவரோடு போய் இந்தப்பெண் எப்படி சமாளித்து வாழப் போகிறாளோ என்று கவலைப்பட்டார். புத்தகப்படிப்புத் தவிர வேறு உலக அறிவு அவளுக்கு கிடையாது என்பதில் அப்பாவுக்கு பெரும் குறை. இருவரது குணங்களும் ஒத்துப்போகுமா என்றும் நிறைய யோசித்தார். அப்பா தேவையில்லாமல் நிறைய யோசிப்பதாக அவளுக்குத் தோன்றியது.

திருமணமான ஆரம்ப நாட்களில் அவளுடைய இயல்பை பார்த்து அவருக்கு சிறிது ஏமாற்றம் ஏற்படத்தான் செய்தது. தன்னுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் வேகத்திற்கும் ஏற்றவளாய் இவள் இருக்க போவதில்லை என்று அவருக்கு தோன்றிவிட்டது. ஆனாலும் அவளால் தனக்கு எந்த இடையூறும் ஏற்படப்போவதில்லை எனவும் புரிந்துகொண்டார்.

அவள் ஒரு பிரபல கல்லூரியில் ஆசிரியையாக இருந்தாள். அதிகாலையிலேயே எழுந்து சமையல் வேலைகளை முடித்து வீட்டையும் பளிச்சென்று துப்பரவாக வைத்து வேலைக்கும் போய்வந்து கொண்டிருந்தாள். வீட்டு வேலைகளில் அவர் எந்த உதவியும் செய்வதில்லை அவளும் அதை எதிர்பார்ப் பதில்லை.

குழந்தைகள் பிறந்த நேரத்திலிருந்து அவர்கள் கொஞ்சம் வளரும் வரையும் அம்மா வந்து அவர்களுடன் இருந்தாள். அம்மா போன பிறகு சமையலில் உதவி செய்ய ஒரு பெண் வந்து போவாள்.

தலை வலி, காய்ச்சல் என்றும் அவளுக்கு அதிகம் வருவதில்லை வந்தாலும் இரண்டு பனடோலைப் போட்டுக்கொண்டு தன் வேலைகளை கவனிப்பாள். காய்சலுடன் வேலை செய்கிறாயே என்ற ஆதங்கமும் அவருக்கு ஏற்படுவதாகத் தெரிவதில்லை. எந்த நிலையிலும் தன்வேலைகளை செய்வது அவளுக்கு பழகிவிட்டதொன்று.

இப்படி எந்த சலனமுமில்லாமல் அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு இயல்பாய் இருந்தபோதுதான் அந்த சம்பவம் நிகழ்ந்தது. நினைத்துப்பார்த்தால் அது ஒரு சாதாரண நிகழ்வுதான். ஆனால் மனதுக்குள் சுர் ரென்று கோபம் வந்ததே.

அவரை விட்டு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறும் தீர்மானம் ஒரு நிமிடத்தில் அவளுக்குள் உருவான நேரம் அது. நோய் என்பது யாருக்கும் செல்லிக்கொண்டு வருவதில்லை. இம்முறை காய்ச்சல் வந்து அவளை சரியாக வாட்டி விட்டது. அவளும் பனடோல் போட்டுப்பார்த்தாள், மல்லித்தண்ணி வைத்துக்குடித்துப் பார்த்தாள் எதுக்கும் கேட்காமல் காய்ச்சல் தொடர்ந்து

காய்ந்து கொண்டே இருந்தது. உடம்பில் ஊசியாய் குத்தியது. தலை தொடர்ச்சியாய் வலித்துக்கொண்டே இருந்தது இயலாத் தனத்துடன் ஒருவாறு சமையலை முடித்துவிட்டு சுருண்டு படுத்துக்கொண்டாள். தொண்டை வரண்டு போயிருந்தது. சுடச்சுட ஒரு கோப்பி குடித்தால் நன்றாயிருக்கும் ஆனால் எழும்பிப் போக உடம்பு ஒத்துழைக்கவில்லை.

மாலை நான்கு மணிபோல அவரது நண்பர்கள் வந்து முன்மண்டபத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். கோப்பி போட்டுக் கொடுக்க எழும்ப முடியவில்லை. சில நிமிடங்களில் வந்து "அவையளுக்கு டீயோ, கோப்பியோ போட்டு வந்து தருவீரா......" என்று கேட்டார். "எழும்பவே என்னால ஏலாமல் கிடக்கு....." என்று முனங்கினாள்.

அவரும் எதுவும் பேசாமல் போய் தண்ணீரை கொதிக்க வைத்தார். தனக்கும் ஒரு கோப்பி போட்டுத்தர ஏலுமா என்று கேட்போமா என்று நினைத்தாள். கேட்க தயக்கமாய் இருந்தது. ஆனாலும் இயலாத்தனம் அவரிடம் எனக்கும் ஒரு கோப்பி போட்டுத்தருவீங்களா என்று கேட்க வைத்தது.

அவர் எதுவும் போசமல் கோப்பியை போட்டு கப்புகளில் நிறைத்து நண்பர்களுக்கு கொண்டுபோய் கொடுத்துவிட்டு உள்ளே வந்தார். கோப்பி தழும்பிய கப்பை அவளிடம் நீட்டினார் பெரும் ஆறுதலோடு வாங்கிக்கொண்டாள். தாங்ஸ் என்று சொல்லத் தோன்றியது. சொன்னால் டோன்ற் மென்சன்ட் என்பார். கோப்பி குடிக்கும் போது ஒன்று தோன்றியது. அவருக்கு கோப்பி போடத்தெரியும் என்பதே இப்போதுதான் தெரிந்தது. அவளுக்கு கோப்பி போட்டுக் கொடுப்தை கௌரவ பிரச்சனையாய் உணர்வது அவர் முகத்தில் தெளிவாய் தெரிந்தது. இதை ஒரு சலுகையாய் எடுத்து வழக்கப் படுத்திக்கொண்டு விடுவாளோ என்ற பயமும் அவர் கண்களில் மின்னியதை அவள் கவனித்தாள். அவமானமாக இருந்தது. கோப்பி தொண்டைக்குள் சிக்கி இறங்க மறுத்தது. தானில்லாத வீட்டின் கஷ்டம் அவருக்கு புரிய வேண்டும் என்ற ஆவேசம் ஒரு வினாடியில் எழுந்தது. இவ்வளவு காலமும் சாதாரணமாய் எடுத்துக்கொண்ட விடயங்கள் எல்லாம் இப்போது விஸ்வரூபம் எடுத்து நின்றது. எப்படித்தான் இந்த மனிதரோடு இத்தனை காலம் வாழ்ந்தேனோ என்று மனது கலங்கியது.

அவள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீட்டிலிருந்தும் வெளியேறி வந்தாள். வந்து இப்போது ஒரு மாதம் ஆகிறது. அனுசரித்துப்போகிறதுதான் வாழ்க்கை என்று அப்பா செல்லிக்கொண்டு இருக்கிறார்.

எந்த அனுசரிப்பும் இல்லாமல் அவர் அவராகவும் தான் தானாகவும்தானே இத்தனை காலம் வாழ்ந்தோம். இங்கே வந்தபின்தான் இன்னும் சிரமமோ என்று தோன்றியது. ஒரு மாதம் கடந்து போனதில் மனம் நிதானத்துக்கு வந்தது. திரும்ப வீட்டுக்கே போகலாம் என்று தீர்மானித்தாள். அவளுக்குத் தெரியும் திரும்பிப்போகும் போது வாவென்று கூட அவர் சொல்ல மாட்டார். வா என்று சொன்னால் தன் கௌரவத்துக்கு குறைச்சால் என்றுதான் நினைப்பார்.

அவர் வெளியேறி வந்ததுக்கு எப்படி வருந்தவில்லையோ அதேபோல் திரும்பிப் போகும் பொழுதும் வரவேற்கப் பேவதில்லை. இது அவளுக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் திரும்பிப் போவதற்கு ஆயத்தமானாள்

ஏதோ காலைதான் வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய் மாலை வீடு திரும்புவது போல அவள் நிதானமாக தங்கள் வீட்டினுள் நுழைந்தாள். கதிரையில் அமர்ந்து பத்திகை படித்துக்கொண்டு இருந்தவர் காலடி சத்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தார். வழக்கம் போல முகத்தில் எந்த உணர்வும் இல்லை. ஆனாலும் வாய் அசைந்து "வாரும்" என்றது.

# செய்க வினை

கானசீலன்

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திலும் எமது மக்களிடத்தில் அறியாமையும், மூடநம்பிக்கைகளும் மிகுந்து காணப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். மதங்கள் சார்ந்த சடங்குகள், சம்பிரதாயங்களில் மட்டுமல்ல சோதிடம், சகுனம் பார்த்தல், கைரேகை, எண்சாத்திரம் என்பவற்றின் மீது மக்களது நம்பிக்கைகள் இன்று அதிகரித்து வருகின்றன. அவற்றை விட இத்தகைய நம்பிக்கைளின் தொடர்ச்சியாக செய்வினை சூனியம், பெல்லி சூனியம் போன்றவற்றின் மீதான நம்பிக்கையின் மிக இழிவான கொடூர இருட் கரங்களும் எமது கிராமங்களை நோக்கி இன்று விரிந்து செல்கின்றன. இவைகளை வளர்த்துச் செல்வதில் தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்களும் பெரும் தொண்டை ஆற்றி வருகின்றன.

எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்வி கேட்டு விடைதேடும் விஞ்ஞான அறிவு என்பது வெறுமனே வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், நுகர்வுத் தேவைகளை விரிவுபடுத்தவுமே பயன்படுத்தப் படுகிறது. ஆனால் வாழ்வின் உயிரோட்டமாக அமையும் உயர்ந்த இலக்குகள், குறிக்கோள்கள், வாழ்வின் ஆத்மார்த்தம் என்பவை பற்றி அறிவியல் பூர்வமாக அணுகுவதில்லை. மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் இன்றைய நவீன அறிவியல் யுகத்துக்குப் பொருந்தாத சடங்குகள் சம்பிரதாயங்கள் என பாரம் பரியமாகத் தொடர்ந்து வரும் வெறும் நம்பிக்கைகளின் மீதே கட்டி எழுப்பப் பட்டு வருகின்றன.

ஒருவரது நம்பிக்கைகள் அது மூடநம்பிக்கையாக இருந்தாலும் அவரளவில் அவரது வாழ்வில் மகிழ்ச்சியையும், ஒழுங்கையும் , அமைதியையும் ஏற்படுத்துவதாக அமைந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியும் என சில உளவியலாளர்கள் கூற முற்படுகின்றனர். தனி ஒரு மனிதனின் உளநோய் போன்றவற்றிற்கு சிகிச்சையாக அவசியமானால் அது அமையலாம். ஆனால் மனிதன் தனித்து வாழாது சமூகத்தோடு இணைந்து வாழ்பவன் என்றவகையில் சமூக அசைவியக்கத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறான். ஒரு சமூகத்தின் பெரும்பாலான மக்கள் அறியாமையிலும் மூடத்தனங்களிலும் மூழ்கிவிடும் போது அவற்றை ஏற்றுக் கொண்டு வாழும் வாழ்வே மேலானதென நம்பிவிடும் மாறுதல்களற்ற இறுகிப்போன வாழ்முறையாக மாறிவிடும் சிக்கலான நிலையும் இங்கு உருவாகி விடுகிறது. மேற்கு நாடுகளில் இவை வேறு நவீன வடிவங்களாக வெளிப்பட்டாலும், ஆசிய ஆபிரிக்க நாடுகளில் மிகப் பழமையான புராதன நம்பிக்கைகளின் வடிவங்களாகவே இன்றும் இவை நீடித்து நிலைத்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது.

இத்தகைய நிலையில் இருக்கும் ஒரு சமூகம் தான் எதிர்நோக்கும் அரசியல் பொருளாதார வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்வதிலும், அவற்றைத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதிலும் கூட பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. உதாரணமாக புத்தரின் "அன்பு மதம்" அரசோச்சும் இலங்கையில் இனப் பிரச்சினையால் லட்சக்கணக்கான மக்கள்

கொன்றழிக்கப்பட்ட பின்னரும் அதற்கான தீர்வின்றி தொடரும் துயர் நிலையைக் காணலாம். ஒரு ஜனநாயக ஆட்சிமுறையின் கீழ் வாக்களிக்கும் பெரும்பாலான மக்கள் பழமையான மதசார்புச் சிந்தனையில் மூழ்கடிக்கப் பட்டிருப்பது இதற்கு ஓர் தடையாகவே அமைந்துள்ளது. சமூக ஏற்றத் தாழ்வுகளும், ஒடுக்குமுறைகளும் நிறைந்த இச் சமூக அமைப்பை அதிகார வர்க்கங்கள் தமது நலன்களுக்காக கட்டிக் காப்பதற்கு மக்கள் அறியாமையிலும் மூடநம்பிக்கைகளிலும் மூழ்கி இருப்பது அவசியமாகிறது. அதற்காகவே மதங்களை அரசோடு இறுகப் பிணைத்தபடி அதன் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டி வருகின்றன. எனவே மக்கள் இந்நிலையில் தொடர்ந்தும் இருப்பதற்கு மக்களை ஒடுக்கும் கருத்தாயுதமாக இவை அரசால் மக்கள்மீது திணிக்கப்படுவதும் ஒரு காரணமாகும்.

இதன் வெளிப்பாடாகவே இன்றைய தாராள சந்தைப் பொருளாதாரத்தின் நுகர்வுப் போட்டியால் மனித உறவுகள் சீரழிந்து போட்டி, பொறாமை, பழிவாங்கும் உணர்வுகள், என வளர்ந்து செய்வினை, சூனியம் போன்ற மாந்திரீகச் சடங்குகளை நம்பும் அளவிற்கு மக்களுள் ஒரு சாரார் தள்ளப்படுகின்றனர்.

மதம் சார்ந்த மந்திரச் சடங்குகளால் நன்மை பயக்கும் விடயங்கள் கிட்டும் என்று நம்பிக்கை கொள்வதைப் போலவே மாந்திரிகச் சடங்குகளால் தாம் பகைவர்கள் என்று கருதுவோர்களுக்கு தீங்குகளைச் செய்யமுடியும் என்று நம்பும் போக்கு வேதகாலந் தொட்டே இருந்து வருகிறது. இவை சாத்தியமா இல்லையா என்ற கேள்வி பதில்களுக்கு அப்பால் மற்றவர்களுக்கு தீங்கு செய்ய எண்ணும் இத்தீச்செயலை முதலில் மக்கள் வெறுக்க வேண்டும். அத்தகைய வெறுப்புணர்வின் அடிப்படையில் இவைகளை நம்பும் போக்கிலிருந்து விடுபட முனைய வேண்டும். “மந்திரத்தால் மாங்காயை விழுத்த முடியுமா? என்பது போல எதையும் கேள்விக்கு உட்படுத்த வேண்டும். நல்லது நடக்கும் என்று நம்பும் போது குறுகிய நேர மனச் சாந்தியாவது கிட்டுவது போல, தீமைபயக்கும் என்று நம்பினால் அந்த நம்பிக்கை உள்ளவரை மனம் துயரடையும். வெறும் நம்பிக்கைகளால் விளையும் பயன்கள் இவை. இத்தகைய நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு அறிவியல் பூர்வமாக நல்லது நடக்கவும் தீயதை அழிக்கவும் செயற்பட முயலும் போது யதார்த்த உலகைப் புரிந்துகொள்வதுடன் முற்றாக நாம் நினைப்பதை செயற்படுத்தக் கூடிய சாத்தியப்பாடுகளும் ஏற்படும்.

செய்வினை என்பது ஊரவர் உறவினர்களிடையே எழும் போட்டி பொறாமை காரணமாக மாந்திரிகர்களைக் கொண்டு செய்யப்படும் பழிவாங்கல் செயற்பாடாகும். செய்வினை செய்வதைவிட செய்யப்படாமலே செய்துள்ளதாகப் பாவனை காட்டி மாந்திரிகர்கள் அதற்கான தடயங்களை தாமே வைத்து தாமே எடுக்கும் நிகழ்வுதான் அதிகம் நடைபெறுகிறது. அதற்குக் காரணம் ஒருவருக்கு வாழ்க்கையில் நெருக்கடிகள் துன்பங்கள் ஏற்படும்போது அதற்கான உண்மைக் காரணங்களைக் கண்டறிய முயலாது அல்லது காணும் வழிதெரியாது இலகுவாக தனக்கு எதிரானவர்கள் செய்வினை சூனியம் செய்து விட்டார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடுவதுதான். இதனால் உற்றார் உறவினருடன் பகைமை உணர்வை மேலும் ஏற்படுத்திக் கொள்வதுடன் இப்படிப்பட்ட தீமை செய்யும் மாந்திரிகர்களையும்

ஊக்குவித்து வளர்க்கும் நிலை உருவாகின்றது.

ஒரு காலத்தில் உண்மை என நம்பப்பட்ட இதுபோன்ற எத்தனையோ விடயங்கள் இன்று இல்லாமல் மறைந்து விட்டன. கொள்ளிவால் பேய், எறிமாடன், வல்லமுனி, காடேறி என பலபெயர்களில் உலாவி உயிர்களை எடுத்து தொல்லைகள் கொடுத்த தீயசக்திகள் யாவும் இன்று தொலைந்து விட்டன. குளங்குட்டைகள் நீர்நிலைகளிலிருந்து எழும் எரிவாயுவாக கொள்ளிவால்ப் பேயும், ஏனைய முனி அடித்தல் போன்ற சம்பவங்கள் மாரடைப் பால் ஏற்படும் மரணங்களாகவும் விஞ்ஞான அறிவியல் இன்று விளக்குகிறது. அதுபோன்றே முன்பெல்லாம் ஊரூராக உயிர்களைக் கொள்ளை கொண்ட பெரியம்மை, சின்னம்மை போன்ற பல நோய்கள் கடவுளரின் கோபச்செயலாகக் கருதப்பட்டது. இன்று அவை யாவும் விஞ்ஞான அறிவால் கட்டுப்படுத்தக் கூடியவையாக உள்ளன. சோப்பும், தொற்று நீக்கிகளும், இல்லாத ஒருகாலத்தில் ஆரம்பித்த தீட்டுத் துடக்கு என்பவைகள் கூட இன்று தளர்ச்சியடைந்து வருகின்றன. முன்பெல்லாம் மாதவிலக்கு நாட்களில் பெண்கள் வீட்டின் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் கரிக் கட்டியால் கோடு கீறி அதற்குள் சுருண்டு ஒதுங்கிக் கிடந்தார்கள். இன்று உடற் சுகாதாரத்தைப் பேணிக் கொண்டே தத்தமது கருமங்களை அவர்கள் ஆற்றுகின்றனர். இவற்றைப் போன்றே எதையும் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து செயற்படும் மனநிலைக்கு மக்கள் மாற்றமடைய வேண்டும்.

அறிவியல் அடிப்படையில் எதையும் புரிந்து கொள்ளும்போது மூடநம்பிக்கைகள் மெல்ல அகலும் நிலை உருவாகும். வாழ்வு பற்றிய ஒரு புதிய நோக்கும், வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய அறிவார்ந்த தெளிவும், அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளும் நன்கு புலப்படும். நாம் எதிர்நோக்கும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் சமூகம் சார்ந்தவையாகவே உள்ளன. எனவே சமூகத்துடனான தொடர்பு, சகமனிதர்கள் மீதான அன்பும் அக்கறையும், சுயநலம் குறைந்த வாழ்க்கை முறை என ஒரு புதிய பண்பாட்டுச் சூழலை இங்கு உருவாக்க இது வழிசெய்கிறது. எனவே எமது வாழ்வில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனைத்தையும் அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து தெளிந்து செயற்பட உறுதி கொள்வோம்.

## விலங்குகள் உடையுமோ?

நெடுங்கேணி ரமணன்

சீரழிந்த வாழ்வை
சிறப்பிக் நினைக்கும் சமூகவாதி
சின்னா பின்னமாகி
திருந்தாத ஜென்மமாய்
உயிர்.. உடல்.. உடமையிழந்து..
ஊரூராய் அலையும்
ஊர்க் குருவிகளா?

மதிப்பிழந்த மரணமும்
மாளத் துடிக்கும்
நடை பிணங்களும்
சிறை வாழ்வால்
துடிக்கின்றதே!

பகலவன் ஒளிராத
பாதையில் புரமும்
பாவிகள் நாம்
விடுதலை காண
விளைகின்ற விழிகளில்
வழிகின்ற கண்ணீரால்
விலங்குகள் உடையுமோ?

இனியேனும் எம் கண்ணில்
ஒளி வீசுமோ.. இனிதான வாழ்வு
இங்கு புலர்ந்திடுமோ?

# ஒரு கண்ணீர்ப் பள்ளத்தாக்கின் விமர்சனம்

- கார்ல் மார்க்ஸ்

மதம் என்பது மெய்யாகவே தன்னை இன்னமும் அறிந்துணராத அல்லது ஏலவே தன்னை மீண்டும் இழந்துவிட்ட ஒருமனிதனின் தன்னுணர்வும் தன்மானமுமாகும். ஆனால் மனிதன் என்பவன் உலகுக்கு வெளியே குந்தியிருக்கும் சூட்சுமமான பிறவி அல்ல. மனிதன் என்பது மனிதனின் உலகு அரசு, சமூகம். இந்த அரசும், சமூகமும் உலகினைப் பற்றிய தலைகீழாக்கப்பட்ட ஒரு உணர்வு நிலையாகிய மதத்தை உருவாக்குகின்றன. ஏனெனில் அவை ஒரு தலைகீழாக்கப் பட்ட உலகம். மதம் என்பது இவ்வுலகம் பற்றிய ஒரு பொதுக் கொள்கையும் அதன் பல்துறை சார்ந்த பொழிப்போடும் அதன் பொதுவழக்கிலான அளவையியலும் (தர்க்கமுறை) அதன் ஆன்மிக மதிப்பு மையமும் , அதன் உற்சாகமும், அறஞ்சார்ந்த அங்கீகாரமும், அதன் வீறார்ந்த நிரப்புக் கூறும், அதன் ஆறுதலுக்கும் நியாயப்படுத்தலுக்குமான பேரண்ட அடிப்படையுமாகும், மனிதத்தின் சாராம்சம் எவ்விதமான மெய்யான யதார்த்த நிலையையும் பெற்றிராமையால் அதுவே மனிதத்தின் சராம்சத்தின் நம்ப இயலாத உணர்வாக்கம். எனவே மதத்திற் கெதிரான போரட்டம் என்பது மறைமுகமாக, மதத்தை தனது ஆன்மீகச் சுகந்தமாகக் கொண்ட ஒரு உலகிற்கெதிரான் போராட்டமாகும். மதஞ்சார்ந்த துன்புறல் என்பது ஏககாலத்தில் துன்புறலும் துன்புறலுக்கெதிரான எதிர்ப்புமாகும். மதம் என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பிராணியின் பெருமூச்சு. இதயமற்ற ஒரு உலகின் ஒரு இதயம். ஆன்மாவற்ற நிலைமைகளின் ஆன்மா. அது மக்களின் அபினியுமாகும். மக்களின் மருட்சியான மகிழ்ச்சி என்ற வகையில் மதம் இல்லாதொழிக்கப்படல் அவர்களது மெய்மையான மகிழ்ச்சிக்கான வேண்டுதலாகும். தமது நிலைமை பற்றிய மருட்சிகளைக் கைவிடுமாறு அவர்கட்கு அழைப்பு விடுத்தல் மருட்சிகளைத் தெவைப் படுத்துகின்ற ஒருநிலையைக் கைவிடுமாறு அவர்கட்கு அழைப்பு விடுத்தலாகும். எனவே மதத்தைப் பற்றிய விமாசனம் என்பது அதன் கருப் பொருளில் மதத்தைத தனது ஒளிவட்டமாகக் கொண்ட ஒரு கண்ணீர்ப் பள்ளத்தாக்கின் விமர்சனமாகும்.




நூல் : குழந்தையும் தேசமும்

ஆசிரியர்: சிவசேகரம்


விலை: 350/=



நூல் : நிமிர்வு

ஆசிரியர்: அனாதரட்சகன்

# சக்கரம்



ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

வேணி நடந்தவாறே வானத்தினை அண்ணாந்து பார்த்தாள். மழையின் வரவைக் கூறும் கட்டியக் காரன் பாத்திரத்தை ஏற்று கரு மேகங்கள் கூடி இருந்தது. சற்று முன்னர் தான் நடுமண்டை வெடித்துவிடும் போல வெய்யில் எறித்தது. அதனை மாற்றுமாப் போல் திடீரென வந்த மழை முகில் கூட்டம் சூழலை இதமாக்கி இருந்தது.

"என்னம்மா எங்கே பார்த்துக் கொண்டு நடக் கின்றாய்...?" முன்னால் நின்ற கனரக வாகனம் நிலமையை உணர்த்தியது. தான் நடு வீதிக்கு வந்ததும் புரிந்தது. எதுவும் பேச முடியாது போக சாரதியைப் பார்த்து சிரித்துக் கொண்டே வீதியின் கரைக்கு ஒதுங்கினாள்.

மேகங்களும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்ட வலியினால் நீர்த்துளிகளைச் சிந்தியது. வேணி வீதி யோரத்து மரநிழலில் ஒதுங்கினாள். அவளோடு ஆண்கள் இருவர் இணைந்து கொண்டனர். முன்பின் பார்த்திராத மூவரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து புன் முறுவல் ஒன்றை சிந்திவிட்டு மழையின் சிதறலில் நனைந்தனர். மழையின் வரவு அதிகரிக்க "இது சரிவராது" என ஆண்கள் இருவரும் வீதியை நடந்து மறுபக்கத்திலிருந்து பூட்டப்பட்டிருந்த கடையின் முன் பகுதியில் ஒதுங்கினர். அங்கே போவதற்கு சங்கடமாக இருந்ததால் மழையில் நடந்தவாறே வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். சேலை நனைந்து உடலோடு ஒட்டியதால் நடப்பதற்கு கடினமாக இருந்தது.

இரு மாதங்களாக பழைய இரும்புச் சாமான்களை கொழும்பில் இருந்து வந்து விலைக்கு எடுக்கிறதாலை வேணியைப் போல் பலபேருக்கு அன்றாட வாழ்க்கை பசியற்று நகர்ந்தது. வேணியின் வீடு வீட்டுத்திட்டத்தில் கிடைத்தது. வீட்டின் சூழல் குப்பைகள் பாதுகாப்புத்திட்டம் என்பது போல் மாறியது. வீட்டுக்கு வந்த ஆரம்பத்தில் நகரத்துக் குப்பைகளை வண்டிகளில் கொண்டு வந்து கொட்டுற ஒவ்வொரு நேரத்திலும் இதயம் வலித்தது. பிறகு அதுவே அவர்களுக்கு வழக்கமாகிப் போனது. குப்பைகளை கிளறும், நாய் காகத்தோடு அவர்களுடைய பிள்ளைகளும் சேர்ந்து பொறுக்கியெடுத்து வரும் பாவனைக்குகந்த பொருட்களை ஆவலோடு பார்க்க ஆரம்பித்தனர்.

கோடை காலத்தில் வெய்யிலுக்கு ஒதுங்க வீட்டுக் கூரையை தவிர எதுவும் கிடையாது. கடற்கரையை ஒட்டிய உவர்நிலப் பகுதியில் மரஞ்செடிகள் அந்த மக்களின் வாழ்வைப்போல் போராடி போராடி தோற்றுப் போயின. மழைக்காலம் ஆரம்பித்து விட்டால், வீட்டைச் சுற்றி மழை வெள்ளம் தேங்கும் நுளம்புகளும், இலையான்களும் உறவுகளாகும்.

வேணி வீதியினால் இறங்கி தகரப் படலையை தள்ளிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள். மழையும் மெல்ல மெல்ல ஓய்ந்தது. வீட்டின் இரு மருங்கிலும் பழைய இரும்புச் சாமான்களும் ஓரளவு சேர்ந்திருந்த இரும்பை விலைக்கு வந்து வாங்குபவர் பிரதான வீதியில் இரும்புக் கடையொன்றை வைத்திருக்கின்றார். அவரைக் கண்டு தம்மிடமிருக்கும் இரும்புகளை கொடுப் பதற்கான ஒழுங்குகளை செய்துவிட்டு வந்திருந்தாள். வீட்டைச் சுற்றி தண்ணீர் தேங்கியிருந்தது. அடுக்கப்பட்ட இரும்புப் பொருட்களை மறைவாகக் கொண்டு நனைந்த சேலையைக்களைந்து கீழே இருந்த பிளாஸ்ரிக் பாத்திரத்தில் போட்டுவிட்டு உள்பாவாடையை உயர்த்தி மார்புக்கு குறுக்கே கட்டினாள். வீட்டில் ஓரத்தில் இருந்த பாத்திரத்திலிருந்த மழை நீரினால் சுத்தமாக கழுவிவிட்டு பிரதான வீதியை எட்டிப்பார்த்தாள் ஆள்நடமாட்டம் இன்மையை உறுதி செய்து கொண்டு வீட்டினுள் சென்றாள்.

வேணி வீட்டினுள் நுழையும் பொழுதே கணவனின் குறட்டைச் சத்தம் அவளை வரவேற்றது. வெற்றுத் தரையில் கை, கால்களை அகல விரித்தும் இடையில் கட்டியிருந்த சாறம் இறங்கி உள்ளாடை தெரியவும் படுத்திருந்தான். சாராய வாடையும் வீசியது.

"உந்தாளுக்கு.. உதே வேலையாப் போச்சு....ம் நெடுகச் சொல்லேலுமே சீ ....."

கொடியில் தொங்கி கொண்டிருந்த சட்டையொன்றை எடுத்துப் போட்டு கொண்டு கணவன் அருகே வந்தாள். வெற்றுத் தரையில் அகல விரித்து கிடந்த அவனது உள்ளங்கைகள் மரத்துப் போய் ஆங்காங்கே கண்டல்களுடன் காணப் பட்டது. முதுகின் தோள்மூட்டுப்பகுதியிலும் மூட்டைகள் சுமந்ததால் ஏற்பட்ட வடுக்களும் காய்ந்து போய் இருந்தது. அவை வேணியின் கண்களை கண்ணீர் சிந்த வைத்தன.

வேணியின் வீட்டோடு இருநூறு குடியிருப்பு வீடுகள் இருக்கும். நகரத்தை அண்டியிருந்தமையால் நகரக் கடைகளுக்கு வரும் பொதிகளை ஏற்றி இறக்க இவர்களுடைய குடியிருப்பு ஆண்களை அழைப்பார்கள். அதுவே அவர்களது தொழிலுமாகியது. கனக்கும் மூட்டைகளை சுமக்கும் வலு உடலில் இல்லாத போதும் உள்ளத்தில் மிகுதியாக இருந்தது. ஏனெனில் அவர்களது உளம் வறுமையின் முகங்களை சேகரித்து வைத்திருந்தது. உடல்நோவுக்கு சாராயம் தான் மருந்து. என யாரோ ஆரம்பித்து வைத்த நடைமுறை இவர்களை அதற்கே அடிமையாக்கியது. வீட்டுக்கு கொடுப்பது ஒருபாதி கொடுக்காதது ஒரு பாதியென அன்றாடக் கூலிப்பணம் கரைந்தது. சென்ற இருமாதங்களாக குப்பைக்குள் பழைய

இரும்புகளை தேடிச்சேகரித்து விற்பதால் முன்னரை விட சற்றுப் பணம் கையில் இருந்தது. இதனால் சங்கரன் குடிப்பதை அதிகப்படுத்திக் கொண்டான். அவனிடம் வீட்டுச் செலவுக்காகப் பணம் கேட்டாள்.

" வேணி.... உன்னட்டை காசு கிடக்கு எனக்குத் தெரியும். நான் நாளைக்குத் தாறன்" எனத் தட்டிக்கழித்து விடுவான்.

வேணி நினைவுகளை நிதர்ச னத்திற்கு கொண்டு வந்து கணவனின் அருகே அமர்ந்தாள்.

"இஞ்ச.. எழும்பப்பா சாப்பிடாமல் கிடந்தே சாகப்போறாய்..."

"ம்.. வேணி நான் நான் சாப்பிடமாட்டன் சாப்பிடமாட்டன் தெரியுமோ.. போ நீ போ..."

சாப்பாட்டையும் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு வந்து கணவன் அருகே வைத்து விட்டு

"எழும்பி சாப்பிட்டு படுங்கோ...."

என்ற வாறு வீட்டுக்கு வெளியே வந்தாள் மழை ஓய்ந்து மெல்லிய வெய்யில் எறித்தது. வேணி பார்வைக்கு எட்டிய தூரம் வரை மகள்கள் இருவரையும் தேடினாள். பக்கத்தில் இருந்த தகரத்தினை கவனியாது அதில் மோதி அத்தகரத்தின் கூர்முனை வேணியின் காலைக் கிழித்தது.

" ஆ .. இது ஒரு கரைச்சலாப் போச்சு.."

எச்சிலை தொட்டு இரத்தம் கசிந்த இடத்தில் பூசிவிட்டு தகரத்துண்டு ஒன்றின் மேல் தேங்கி நின்ற மழை நீரில் கையை கழுவினாள்.

அம்மா.. அம்மா.."

என்ற அழைப்புடன் இடது பக்கமாக திரும்பினாள். துவாரகாவும் பிரியாவும் நின்றனர் அவர்களுடைய கரங்களில் பழைய தகரத்துண்டுகள் இருந்தன.

"பிள்ளையள் உங்களை சொன்னான் குப்பை பக்கம் போக வேண்டாமெண்டு.. எந்த நேரமும் அதுக்க நிண்டு கிளறுறதே வேலையாப்போச்சு.."

"போங்கம்மா நீங்களும் இல்லை அப்பாப்பிள்ளையும் சத்தம் போட்டு கொண்டு கிடக்கிறார். விசராக் கிடந்தது அதுதான் தங்கச்சியை கூட்டிக்கொண்டு போய் இதை குப்பைகளுக்க பொறுக்கி கொண்டு வாறம்.

துவாரகா தாயிடம் கூறிக் கொண்டே கொண்டு வந்த தகரத்தை முன்னர் இருந்த தகரங்களின்மேல் போட்டாள்.

"பிள்ளையல் தனியாவே பொறுக்க போனனீங்கள்...??"

"சீச்சீ கொஞ்சக் காகங்களும் நாயும் எங்களோடை வந்தவை..."

பிரியா வாய்விட்டுசிரித்தபடி கூற அவளின் சிரிப்போடு வேணியும் துவாரகாவும் இணைந்து கொண்டார்கள்

"அம்மா இந்த இரும்புகளை எப்ப வந்து எடுப்பினமாம்..?

"நாளைக்கு பின்னேரம் வந்தெடுக் கிறது எண்டு சொன்னார் பாப்பம்..!

மூவரும் வீட்டினுள் நுழைந்தனர். சங்கரன் வைத்த சோற்றினை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பாட்டு தட்டத்தின் வட்டத்தை தாண்டி சோறு நிலத்தில் சிந்தியிருந்தது. சோற்றில் அளவுக்கதிகமாக அள்ளி வாயினுள் திணித்து சாப்பிட முயற்சித்ததனால் அவை நழுவி மடியில் விழுந்து கொண்டிருந்தது. தந்தையின் தோற்றம் பிள்ளைகளுக்கு பயத்தை கொடுக்க தாயோடு ஒட்டிக் கொண்டனர். வேணி நிலமையை புரிந்து கொண்டு,

"துவாரகா... ரியூசனுக்கெல்லே... போகோணும்... கெதியாப் போங்கோ.. நான் போய் இரும்பு பார்க்கிறன்....!

தாயிற்கு தலையசைத்தவாறே துவாரகாவும் பிரியாவும் தயாராகி, பயிற்சி கொப்பிகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு தாய் அருகே வந்தனர்.

"அ-ம்-மா... வாறம்..."

அவர்கள் தந்தையை நோக்கினர். சாப்பிட்ட இடத்திலேயே கைகளை கழுவிவிட்டு மீண்டும் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தார். இதனைக் கண்டு முக வாட்டத்துடன்,

"அம்மா வாறம்...! ஆ... குப்பேக்கை ஏதாவது சில்லு இருந்தால் தேடி எடுத்தாங்கோம்மா...."

## உழைப்பினம்!

- பகுத்திதாசன்

தேயிலைக் கொழுந்து
போட்ட தீனியில்
கொழுத்துப் போனதா
பேரினம்...?

விலை கொடுத்து
விலகிக் கிடந்து
விறகாகிப் போனதா?
விரல்களில் இருந்த
வசீகரம்!.

லயன்கள் கொடுத்த
பயங்கள் தானோ
அடிமை வாழவின்
அடித்தளம்
ஆழ்வதெப்போ
இவ்வினம்..?

இனங்கள் என்பதில்
ஓடுவதெல்லாம்
இரத்தப் பாதையில்
ஒரே நிறம்
கறுத்துப் போன இனத்திலும்
கருக்கொள்ளும்
ஓர் கண்ணியம்.

ஒடுக்கு முறை
அடிமைத்தனம்
உடைத்தெறியும்
உழைப்பினம்.

பிரியா தாயின் கரங்களை பிடித்துக் கேட்டுக்கொண்டாள்.

"பத்து வயதாப் போச்சு, இன்னும் சக்கரம்... உருட்டிற வேலை விட்டுப் போகேலை...!"

"ஆ.. அது பறவாயில்லை... நீங்கள் எடுத்தாங்கோ... ஆ... எடுத்துக் கொண்டு வேளைக்கு வாங்கோம்மா.. இல்லாட்டி நாங்க அங்க வந்திடுவம்..."

"ஓம்... ஓம்.. நான் வேளைக்கு வாறன்... அங்க ஒருத்தரும் வர வேண்டாம்...."!

"நீங்கள் வராட்டி வருவம்..."

தாயிடம் விடை பெற்று புறப் பட்டனர். வேணி உரப்பை யொன்றை எடுத்து மடித்துக் கொண்டு வீதிக்கு நடந்தாள். தூரத்தில் புகைமூட்டம் தெரிந்தது. அதுதான் அவள் நடக்கும் இலக்கு இப்பொழுது இரு மாதங்களாக குடியிருப்புக்களைத் தாண்டி இரண்டு மைல் தூரத்திலும் குப்பைகளை கொட்டுகின்றனர். அந்த இடத்தை நோக்கி நடந்தாள். தன்னுடன் யாராவது கூட வந்தால் நன்றாக இருக்கும் என நினைத்துக் கொண்டு குடியிருப்புக்களை நோக்கினாள். எவரும் வருவதாக தெரியவில்லை. தார் வீதியில் பட்டுத் தெறிக்கும் வெய்யிலும் மெல்லிய சுடுகாற்றும் கண்ணை கூச வைத்தது. வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து ஒன்று அவளைக் கடந்து சென்றது. பேருந்தில் இருந்த குறும்புக்கார சிறுவன் ஒருவன்.

" அன்...ரி.. அன்..ரி..."

என அழைத்து கையசைத்தான். வேணியும் உரப்பையை உயர்த்தி அசைத்து சிரித்தாள்.

பிரதான வீதியிலிருந்து நூறு மீற்றர் தள்ளியிருந்த குப்பை மேட்டை நெருங்கினாள். இடத்தை நெருங்க, நெருங்க அருவருக்கத்தக்க மணம் வீசியது. நிலத்தில் கிடந்த பெரிய தடியொன்றை எடுத்து குப்பைகளைக் கிளறினாள். பாவனைக்கு உகந்த சீப்பொன்று இருந்தது. அதனை உரப் பையினுள் போட்டு விட்டு மேலும் கிளறிப் பார்த்தாள். எதுவும் கிடைக்காது போக கடலோரமாக சற்றுமுன் கொட்டி விட்டு போன குப்பை மேட்டை நோக்கி நடந்தாள். காகங்கள் இவளது வருகையை உணர்ந்து, கூட்டமாக மேலெழுந்து பறந்து பக்கத்து குப்பை மேட்டில் அமர்ந்து கொண்டன. இரண்டு மாடுகள் கொட்டிக் கிடந்த குப்பைகளில் படுத்திருந்து அசை போட்டுக் கொண்டிருந்தன. சற்றுத் தள்ளி நின்றிருந்த நாய்கள் வேணியை கண்டு வாலை ஆட்டிக் கொண்டன. வேணிக்கு சிரிப்பு வந்தது. காய்ந்த குப்பைகளுக்கு தீ மூட்டியிருந்ததால் எங்கும் ஒரே புகை மூட்டமாக இருந்தது.

வேணி புதிய குப்பைகளை கிளறினாள். ஏதோவொரு விலங்கின் குடல்பகுதி வந்தது. வாந்தி வருவது போலிருந்த உணர்வைக் கட்டுப்படுத்திக் கொண்டு அதனை தூக்கி அப்பால் போட்டு விட்டு மேலும் கிளறினாள். ஏதோ சந்தைக் கழிவுகள் போலிருந்தது. அதனுள் பிரியாவுக்கு அளவானதொரு அழகிய சட்டை இருந்தது. அதனையும் எடுத்து உரப்பையினுள் போட்டு விட்டு இரும்புப் பொருட்களின் தேடலை அழுக்கு

குவியலுக்கிடையில் ஆரம்பித்தாள் கிடைத்தவற்றை உரப்பையின் மேல் அடுக்கினாள்.

சூரியன் மேற்கு கீழ்வானை நெருங்கிக் கொண்டிருந்தான். சில காகங்கள் அந்த இடத்தை விட்டு எழுந்து அங்கு நின்ற இரு பனை மரங்களில் அமர்ந்து கொண்டன. உழவு இயந்திர மொன்று பிரதான வீதியிலிருந்து குப்பை கொட்டுவதற்காக வந்து கொண்டிருந்தது. அதன் சக்கரம் பிரியா சொன்னதை நினைவுபடுத்த ஏதாவது சக்கரம் கிடைக்குமா? என தேட ஆரம்பித்தாள். ஓர் பெரிய குப்பை மேட்டின் பக்கத்திலிருந்த சிறிய குப்பை பகுதியில் சில்லொன்று தெரிவது போலிருக்க நிலத்தில் குந்தியிருந்து கொண்டு சிறிய தடியினால், தட்டிப் பார்த்தாள். உழவு இயந்திரம் நெருக்கமாக வந்து விட்ட சத்தம் கேட்டது. அதனை எழும்பிப் பார்க்காமலே சில்லை எடுத்து விட வேண்டும் என்ற உறுதியோடு குப்பைகளை அகற்றினாள் பழைய துவிச்சக்கர வண்டியொன்றின் சக்கரம் இருந்தது. சந்தோஷத்துடன் அதனை எடுக்க குனிந்தாள்.

திடீரென அவள் மீது பெரும் குப்பைகள் மலையாக விழுந்தது. தன் நிலமையை புரிந்து கொள்ள முன் குப்பைகள் முற்று முழுதாக அவளை மூடியது. வலது கன்னம் நிலத்தில் படுமாறு சரிந்து வீழ்ந்து குப்பைகளின் அடியில் சிக்கிக் கொண்டாள். காற்றை முடிந்தவரை உள்ளிழுத்துக் கொண்டு கையில் தூக்கிய சக்கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள். உழவு இயந்திரத்தை ஓட்டியவர் குப்பை மறைவில் இருந்த வேணியை அவதானித்துக் கொள்ள முடியாததனால் கொட்டிவிட்டார். அதனுள் வேணி அகப்பட்டுக் கொண்டதை அறியாது உழவு இயந்திரம் மீண்டும் குப்பைகளை ஏற்றி வருவதற்காக அந்த இடத்தை விட்டு நகர்ந்தது. பிரதான வீதியில் பயணிக்க ஆரம்பித்தது.

ஈரமான அழுகிய குப்பைகளுக்கு வெளியே அவளுடைய கையும் சக்கரமும் நீண்டிருந்தது. குப்பைகளுக்கிடையில் விழுந்த பலகைத் துண்டொன்று முகத்தினையும் நிலத்தையும் தொட்டு நின்றதால் முதலில் ஓரளவு அவளால் சுவாசிக்க முடிந்தது. பின்னர் பெரும் பாரச்சுமையும், அருவருக்கத்தக்க மணமும் அவளது சுயநினைவை சிறிது சிறிதாக இழக்க வைத்தது.

வீட்டிற்கு வந்த துவாரகாவும், பிரியாவும் தாயை காணாது, குப்பை மேட்டை நாடி வந்தனர். யாருமற்ற தனிமை அவர்களுக்கு பயத்தை கொடுத்தது. அவர்களுக்கு சற்று முன்னால் நிலத்தில் உரப்பையில் சுற்றப்பட்ட தகரத்துண்டுகள் இருந்தது. அதன் தனிமையும் ஏதோ விபரீதம் நடந்து விட்டது என்ற உள்ளுணர்வை ஏற்படுத்த,

"அம்மா..... அ..ம்...மா.."

என அழைத்துக் கொண்டே எல்லா இடமும் தேடினர். இறுதியில் வேணியை மூடியிருந்த குப்பை மேட்டிற்கு அருகே வந்து நின்றனர். பிரியாவிற்கு குப்பைகளுக்கு அடியில் இருந்த சக்கரம்

தென்பட, அதை எடுக்க சந்தோஷத்துடன் ஓடினாள். வேணியின் சக்கரத்தை பற்றிய கரம் விழுந்த குப்பைகளால் மறைந்திருந்தது. பிரியா சக்கரத்தை எடுப்பதற்கு முயன்றாள். முடியாது போக துவாரகாவை உதவிக்கு அழைத்தாள்.

"நான் அம்மாவைக் காணேலை எண்ட விசரிலை இருக்கிறன்... உனக்கு சில்லும் மண்ணாங்கட்டியும்..."

சகோதரியை பேசிவிட்டு, பிரியாவுடன் இணைந்து சக்கரத்தை இழுக்க முற்பட வேணியின் சோர்ந்த கரம் மெதுவாக தெரிந்தது.

தாயின் கையினை இனங்கண்ட இருவரும்,

"ஐயோ... எங்கட அம்மா .... அம்... மா..."

என்று கதறி அழுத சத்தம் குப்பை மேடுகளில் மோதி எதிரொலித்தது. படுத்திருந்த மாடுகள் சத்தம் வந்த திசையை திரும்பி பார்த்துவிட்டு மீண்டும் அசை போட ஆரம்பித்தது. பிரியாவை அவ்விடத்தில் இருக்கும் படி விட்டு துவாரகா வீதிக்கு ஓடினாள். பிரியா தன் பிஞ்சுக் கரங்களால் தாயை மூடியிருந்த அழுக்குகளையும், குப்பைகளையும் தன் வலிமையை மிஞ்சி அகற்ற முற்பட்டாள். இடையிடையே தாயின் கரங்களை மென்மையாக வருடிக் கொண்டே,
"அம்மா... அம்மா..."

தன் ஈனக் குரலால் அழைத்துக் கொண்டாள். நான்கு ஆண்கள் வயல் வேலை முடித்து வந்து கொண்டிருந்தனர். துவாரகா அவர்களிடம் தாயின் நிலமையை கூறி உதவி கேட்டு அழுதாள். அந்த நால்வரும் துவாரகாவுடன் மிகத் துரிதமாக ஓடி வந்தனர். பிரியா தாயின் கரத்தில் தலையை வைத்து, படுத்திருந்தாள். அவளை துவாரகா தூக்க, அவர்கள் மண்வெட்டிகளால் குப்பைகளை அகற்றி விட்டு வேணியை தூக்கினர். சுயநினைவை முற்றாக இழந்த போதும் மெல்லிய உயிர்த்துடிப்பு இருந்தது. இரு மகள்களதும், "அம்மா... அம்மா.."

எனும் கதறல் வேணியின் காதினுள் நுழைந்து இதயத்தை தொட்ட போதும் அதற்கு அவளால் பதிலளிக்கவோ, கண்களை திறந்து பார்க்கவோ முடியாதிருந்தது. வேணியை தூக்கிக் கொண்டு வீதிக்கு ஓடிவந்தனர். நகரத்தை நோக்கி சென்று கொண்டிருந்த சாரதி பயிற்சி பேரூந்தினை மறித்து. வேணியை ஏற்றினர். கூடவே இரு ஆண்களும் ஏறிக் கொண்டனர்.


வேணியின் கரம் மெல்ல இளகி துவிச்சக்கரவண்டியின் சக்கரத்தை நழுவவிட்டது. பிரியா அதனை ஏந்திக் கொண்டு தாயின் முகத்தை பார்த்தாள். இந்த நேரத்திலும் எந்த சலனமற்ற முழுநிலாவாக அவளது முகம் ஒளிர்ந்தது. தாயை சுமந்து பேருந்து பயணிக்க, துவாரகா தங்கையின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டு தாய் மீண்டும் வருவாள் என்ற நம்பிக்கையோடு தந்தையை நாடி ஓடினாள்.

# சொத்து

சமரபாகு சீ.உதயகுமார்

தங்கச்சிக்கு வீடு கட்ட வேண்டும். யோகுச் சாத்திரியார் எங்கள் வீட்டுக்கு வந்து நின்றார். அவர் அந்தக் காணியின் கிழக்கு மேற்காக நடந்தார். இடது கரத்தினை தன் இடுப்பில் வைத்து காணியின் நான்கு திசைகளையும் தன் பார்வைகளால் ஒரு துளாவு துளாவினார்.

தங்கச்சியின் சாத்திரப் புத்தகத்தைப் பார்த்தார். தான் கொண்டு வந்த பழகுதாளில் ஏதோவெல்லாம் எழுதினார். கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்று ஒரு கணிதக் குடும்பமே அதில் தெரிந்தது. தன் தலையை உயர்த்தி



அப்பாவைப் பார்த்துச் சொன்னார்.

'இவவின்ர பலனுக்கு மேற்கு வாசல் வீடுதான் நல்லது! மற்றது நிறைவான பணம் புரண்டு விளையாடும் சந்தர்ப்பங்களும் இவவுக்கு உண்டு பாருங்கோ! என்று சாத்திரியார் தன் பங்கிற்குச் சொல்லி முடித்தார். தான் குறித்துவிட்ட குறிப் புத்தாளை அப்பாவிடம் தந்தார்.

'நான் போட்டு வாறன் வாத்தியார். அவசரம் இன்னுமொரு இடம் போகக் கிடக்கு!' என்று சொல்லி புறப்பட்டுக் கொண்டிருந்தார் சாத்திரியார்.

வெற்றிலை மேல் ஆயிரத்தொரு ரூபா பணத்தை வைத்து 'இந்தாங்கோ சாத்திரியார். இதைப் பிடியுங்கோ!' என்று சாத்திரியாரைப் பின் தொடர்ந்து போனார் அப்பா.

நடந்து போய்க்கொண்டிருந்த சாத்திரியார் திரும்பி நின்று அப்பாவைப் பார்த்தார். திரும்பி வந்தவர் அப்பா முன் பௌவியமாக நின்றார். அப்பா தந்த விசேட பணத்தை வாங்கிக் கொண்டார். வலு வேகமாக நடந்து சென்று சைக்கிளில் ஏறி அமர்ந்தவர், மெதுவாக சைக்கிள் பெடலை உழக்கியபடி போய்க் கொண்டிருந்தார்.

தங்கச்சிக்கென்று எழுதப்பட்ட அந்தக் காணிக்குள் நூறிக்கும் குறையாத பனைமரங்கள் நின்றன. அந்தக் காணிக்குள் வீடு கட்டுவதென்றால் எப்பிடியும் எண்பது பனை மரங்களாவது தறிக்க வேண்டும். இதை நினைக்க எனக்குப் பயமாக இருந்தது! கூடவே கவலையும் வந்தது.

அந்தக் காலத்தில் எங்கள் வீட்டுப்

பின் பனங்காணிக்குள் சிறிய வட்டக் குடில் ஒன்று இருந்தது. வளவுக் காணிக்குள் சீவலுக்கு வருகிறவர் அதில் தங்கி நின்றுதான் கள்ளு வியாபாரம் செய்வார்.

கொழும்பில் அப்பாவுடன் ஒன்றாக வேலை பார்க்கும் சிங்கள, முஸ்லீம் நண்பர்கள் எங்கள் வீட்டிற்கு வந்திருக் கிறார்கள். அவர்கள் பனங்கள்ளுச் சீசனில்தான் அடிக்கடி இங்கே வருவார்கள். யாழ்ப்பாணத்துப் பனங்கள் என்றால் அவர்களுக்குக் கொள்ளை விருப்பமாம். குடிலுக்குள் இருந்து கள்ளுக் குடிப்பார்கள்.

பனங்கள்ளைப் பிளாவில் விட்டு குடிப்பார்கள். நண்டு, சூடை, சுட்டு சாப்பிடுவார்கள். சுட்ட நண்டினை வாயில் போட்டு உறிஞ்சுவிட்டு உதட்டைக் குவித்துப் பொச்சடிப்பார்கள். அதைப் பார்த்தால் எங்களுக்கும் வாய் ஊறும்.

அக்காவுக்கென்று கொடுத்த காணிக்குள்ளும் நிறையப் பனைகள் நின்றிருக்கின்றன. ஆனாலும், அவ வீட்டு முற்றத்தில் நிற்கும் அந்த ஒற்றைப் பனை தான் அத்தனைக்கும் சாட்சி.

எங்கள் காணிக்குள் நிற்கிற பனைகள் சும்மா பனைகள் இல்லை. எல்லாம் முத்தி முறுகி பருத்து வளர்ந்த கரும்பனைகள், எங்கள் வீட்டுக்கு வருகிறவர்களுக்கு அந்தப் பனைகள் மீதுதான் ஒரு கண் எப்போதும் இருக்கும்.

அப்படித்தான் ஒருநாள் எங்கள் வீட்டிற்குப் பக்கத்து ஊர் துரையண்ணை வந்திருந்தார். பத்துப் பனைகள் அவசரம் தரவேணும் என்று கேட்டிருக்கிறார். அதற்கு அப்பா "உந்தப் பனைகள், கினைகள் தாங்கோ என்று கேட்டு இங்கே ஆரும் வரக்கூடாது. உதுகள் என்ர கற்பகச் சீமாட்டிகள் எடா..... துரையா. உதுகள் மாத்திரம் கேட்டு மினக்கெடாதயும்!' பனைகளைக் கட்டி அணைத்துப் பெருமை சொல்லிக் கொண்டார்.

அப்பாவின் சொல் கேட்ட துரையண்ணை மௌனத்துடன் தன் வீடு போய்விட்டார். எப்போதும், அப்பாவை விட எனக்குத்தான் அந்தப் பனைகள் மீது அதிக பிரியம் இருக்கும்.

அந்தக் காலத்தில் அந்த எட்டுப் பரப்புக் காணிக்குள் ஒரு மூலையாக எங்கள் வீடு இருந்தது. மேற்கு வாசலாக அமைந்த மண் வீடுதான். ஆனாலும் அது ஒரு கல்வீடு போலவே எப்போதும் அழகாக இருக்கும்.

ஒரு அறையும் "டானா" வடிவ விறாந்தையும் அதனுடன் இணைந்திருந்தன. மேற்குப் பக்கமாக இருந்த மால் வந்தவர்களை வரவேற்கும் கூடமாகவும் இருந்தது. நல்ல பனஞ்சோலையில் எங்கள் வீடு இருந்தது.

தெருக்கேற்றோரமாக செவ்வரத்தை மரங்களும் ஒரு தேமாவும் நின்றன. பூவரசு மரங்கள் வேலி எல்லைகளாக இருந்தன. அவை பனம் ஓலைகளால் சாத்தி அழகாக அடைக்கப்பட்டிருந்தன. வீட்டு முற்றம் எப்போதும் தூய்மையாகவும் அழகாகவும் இருக்கும். முற்றத்து மணல் பால் போல பரந்திருக்கும்.

மாலின் தாவரப் பகுதியின் இரு பக்கங்களிற்கு அகலமாகவும் உயரமாகவும் திண்ணை வடிவச் சுவர்ப்பிட்டி இருக்கும். பகலில் எங்கள் வீட்டுக்கு வருகிறவர்கள் அதில் உட்கார்ந்திருந்து உரையாடுவார்கள். இரவு நேரமானால் அம்மையா அதில் படுத்துறங்குவார்.

எங்கள் வீடு ஓலைகளால்

வேயப்பட்டிருந்தது. மூன்று வீடுகளும் வேய்வதென்றால் அது ஒரு விழா மாதிரியே நடக்கும்.

வீடு வேய்வதற்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னரே ஓலை வெட்டுக்கார கந்தையாண்ணையும் அவர் மூத்த மகனும் வந்து ஓலை வெட்டுவார்கள்.

பனைகள் நெருக்கமாக நின்றன. ஒரு பனைக்கு ஏறினால் போதும், தொற்றித் தொற்றி மற்றைய பனைகளுக்கும் தாவுவார்கள்.

மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்பதை நிருபிப்பார்கள். அதை நாங்கள் பார்த்து ரசித்திருக்கிறோம். நாங்கள் பார்த்து ரசிப்பதைக் கண்டால் போதும் அவர் களுக்கும் புழுகமாகவே இருக்கும்.

வெட்டிய ஓலைகளை வெயிலில் காயப் போட்டு அடுத்த நாள் விடிவதற்கு முன்பே ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அப்பா மிதிப்பார். அவ்வளவு ஓலைகளும் மதிப்பதென்றால் எப்படியும் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது பிடிக்கும். அதற்காக நானும் அண்ணாவும் அதிகாலை நாலரை மணிக்கெல்லாம் எழுந்து விடுவோம். கஸ்டப்பட்டு எழுந்து பல் துலக்கி முகம் கழுவி விட்டு இருக்க அம்மா தேநீர் கொண்டு வந்து தருவார். பனங்கட்டியோடு கடித்துச் சுவைத்துக் குடிப்போம். சோர்ந்திருந்த எங்கள் உடலுக்கு அது பெரும் உற்சாகத்தைத் தந்து விடும்.

அப்பா ஓலைகளைக் கால் களுக்குள் போட்டு இடம் வலம் ... இடம் வலம்... என்பது போல் கால்களை மாறி மாறி எடுத்து வைத்து முன்னேறுவார்.

மிதித்த ஓலைகளைப் பார்த்தால் வளைந்து நெளிந்து செல்லும் மலைப்பாம்பு போல அது தெரியும்.

இரண்டு மூன்று நாட்களின் பின்னர் கரம் போடுவார். பெரிய வட்டமாகத் தொடங்கும் மிதிப்பு, உயர, உயர அதன் சுற்றளவு குறைந்து கொண்டு செல்லும். ஓலையெல்லாம் கரம் போட்டு முடிந்த பின்னர் பார்த்தால் அது ஒரு கூம்பு வடிவமாவே பார்ப்பவர்களுக்குத் தோற்றும். சுற்றி வர சுருக்கு மட்டைகள் நீண்டு போய் இருக்கும். அவற்றினைப் பார்த்தால் வேட்டை நாய்கள் கழுத்தை நீட்டிக் கொண்டிருப்பது மாதிரியும் இருக்கும்.

ஐந்து ஆறு நாட்கள் கழித்து வீடு வேய்வதற்கு ஊர் ஆட்களுக்கு சொல்லுவோம். வீடு வேய்வதில் நிபுணத்துவமுடையோர் வருவார்கள். அவர்கள் எல்லோரும் எங்கள் உறவுக் காரர்கள் தான். மூன்று வீடுகளும் ஒரே நேரத்தில் வேய்வார்கள்.

வீடு வேய்ந்து முடிந்ததும் கை, கால்களை சுத்தம் செய்து விட்டு அந்தத் திண்ணைக் குந்துகளில் உட்காருவார்கள். சிலர் நீள வாங்கிலில் இருப்பார்கள். எல்லோருக்கும் பெரிய வட்ட வடிவத் தட்டினில் வாழையிலை வைத்து தோசை அடுக்கி அம்மா கொடுப்பார்.

தேங்காயும் செத்தல் மிளகாயும் சேர்த்து அரைத்த சம்பலும் இருக்கும். வெங்காயம், செத்தல்மிளகாய், சீரகம் கலந்து தாளித்த தாளிப்பினை சம்பலுடன் சேர்த்து பிசைந்த சம்பல் கமகம என்று வாசம் வீசும்.

தோசையைப் பிய்த்து சம்பலில் தொட்டு சாப்பிடுவார்கள். அந்த நேரம் அம்மா, மரவள்ளிக் குழம்புச் சாம்பாரைக்

கொண்டு வந்து தோசை மீது ஊற்றுவார். மரவள்ளிக் குழம்புச் சாம்பாரில் ஊறிய தோசை பதமாகக் கரைந்து விடும். அதைச் சம்பலோடு பிசைந்து வாயினுள் திணிக்கும் போது...!

அப்பாடா.... அதை நினைக்கவே வாய் ஊறுகிறது.

சாப்பிட்டு முடிந்ததும் சுடச்சுடத் தேநீர் கிடைக்கும். உறைப்பால் விறைத்த நாக்கினை அந்த இளகிய சூடு இதம் செய்வதோடு மனதினையும் இன்பமடைய வைத்துவிடும்.

பாத்தி போட்டு கிழங்கு கிண்டும் காலத்தில் பொடியள் தரவளியாகிய நாங்கள் தான் கிழங்கு கிண்டுவோம். பிரண்டைத் தண்டும் வடலிப் பச்சை மட்டைகளும் எடுத்து கத்தியால் சிறு சிறு துண்டுகளாக வெட்டி பாத்தியைச் சுத்திப் போடுவோம். முதலில் பிடுங்கி எடுத்த கிழங்குகளை மூன்று மூன்றாகக் கட்டி பாத்தியின் நான்கு மூலைகளிலும் நிறுத்தி வைத்து படையல் செய்வோம்.

கிண்டி எடுத்த கிழங்குகளை பெரிய நார்க்கடகங்களில் அள்ளி எடுத்து மாமரத்திற்குக் கீழ் குவிப்போம். ஊமல் கொட்டைகளை அக்காவும், தம்பியும் அள்ளி எடுத்து ஆட்டுக் கொட்டிலின் ஒரு ஓரமாகப் போடுவார்கள்.

அம்மம்மா, ஓரளவான மொத்தக் கிழங்குகளைத் தெரிவு செய்து எடுப்பார். எரியும் அடுப்புத் தணலில் போட்டுச் சுடுவார். படக்.... படக் என்று வெடிப்புடன் கிழங்க வேகும். வெந்த கிழங்குகளை வெளியே எடுத்துப் பார்த்தால் முள்முருக்கு முட்கள் போல் ஆங்காங்கே முட்தெறிப்புகள் இருக்கும்.

கிழங்கு சூடு ஆறிய பின்னர் அவற்றினைப் பீலிகளாகக் கிழித்தும் சின்னச் சின்னத் துண்டுகளாக முறித்தும் உரலில் போட்டு இடிப்பார். பச்சை மிளகாய், உள்ளி, மிளகு, உப்பு என்று எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு துவையல் துவைப்பார்.

துவையல் கிழங்கில் ஒரு கொஞ்சத்தை அள்ளி பூவரசம் இலையில் எடுத்து பாத்தி கிண்டிய இடத்திற்கக் கொண்டு சென்று கிள்ளி எறிந்து, தண்ணி தெளித்து விட்டு வருவார். அதன் பிறகு எங்களுக்கும் பூவரசம் இலைகளில் கிள்ளிப் போட்டுத் தருவார்.

கண்களில் நீர் பனித்துக் கொண்டு வரும். ஊ... ஊ.... ஊ.... என்று உறைத்துச் சாப்பிடுவோம். கிழங்குத் துவையல் என்றால் இப்பவும் வாயுள் உறைப்பு உணர்வு மேலோங்கும்.

அந்த நேரம் எனக்கு எட்டு வயது இருக்கும் என்று நினைக்கின்றேன். நாங்கள் பத்துப் பன்னிரண்டு பேர் சேர்ந்து அந்தக் காணிக்குள் சின்னதாக ஒரு வீடு கட்டி ஒடியல் கூழ், ஆடிக்கூழ் காய்ச்சிக் குடித்திருக்கிறோம். அம்மா, ஒடியல் மாவில் காய்ச்சிய கூழினை பெரிய தாச்சிக்குள் விட்டுத் தருவார். எல்லோரும் ஒரு வட்டமாக இருந்து விடுவோம். பெரிய முதலாளி போல் தம்பி வருவான்.

“எல்லோரும் குழப்படி இல்லாமல் இருங்கோ..! இதோ எல்லோருக்கும் கூழ் ரெடி...! என்று தம்பி சொன்னதும் நாங்கள் எல்லோரும் குபீர் என்று சிரித்து விடுவோம். தம்பியும் சிரிப்பான். ஓரளவான குண்டுக் கிண்ணங்கள் எல்லோருடைய கைகளிலும்

இருக்கும். பனம்பழத்திலிருந்து ஒடித்த பருமிள்களை எடுத்து அதை உடைத்து ஒவ்வொன்றாக எல்லோருக்கும் கொடுப்பான்.

குண்டுக் கிண்ணத்துக்குள் இருக்கும் ஒடியல் கூழினை பருமிளினால் அள்ளி அள்ளிப் பருகுவோம். பவன் உறிஞ்சி உறிஞ்சிக் குடிப்பான். நித்தி கூழிற்குள் இருக்கும் மீனை எடுத்து லாவகமாக உடைத்து வாயுற்குள் திணிப்பான். கூழ் குடிக்கும் போது... அப்பாடா...!

கூழ் குடித்த பின்னர் அளவளாவு வோம். புதுப்புது ஐடியாக்கள் வரும்.

"சிவா..! டேய் ஆளுக்கு இரண்டு ரூபா போட்டு பொங்கல் செய்வோமா..! இதைப் பவன் சொன்னான்.

"நானும் காசு தாறேன். அழகேசும் வருவான். அவனுக்கும் இதை நான் சொல்லுன்." ராயனும் ஆமோதித்தான்.

பொங்கல் திட்டத்திற்கு எல்லோரும் சம்மதம் தெரிவித்திருந்தனர். நாங்கள் நினைத்ததை விட பெரியதொரு தொகைக்கான ஆள் சேர்ப்பு அங்கிருந்தது. மோதகம் அவிப்பது என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

"பிலாலி ஆச்சியை மோதகம் அவிக்கக் கூப்பிடுவோம்" அக்கா ஆலோசனை கூறினார்.

"பிலாலி ஆச்சி மோதகம் பிடிச்சால் நல்ல மிருதுவான மோதகமாக இருக்கும். நல்ல வடிவாகவும் இருக்கும். 'வனிதாக்கா பக்க வாத்தியம் வாசித்தார்.

பொங்கலன்று மோதகம் பிடிப்பது என்ற முடிவும் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டிருந்தது. இதற்கிடையில் தம்பி சொன்னான்.

"தீ மிதிப்புச் செய்வோம்.! தீயில் முதலில் நான் இறங்குகிறேன்!" என்றான்.

"நானும் தீயில் இறங்குகிறேன்." முந்திரிக்கொட்டை போல் துருத்திக் கொண்டு பவன் சொன்னான்.

எல்லோருக்கும் நல்ல புழுகம். வருகிற வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடம் லீவு. அன்றைய தினம் பொங்கல் செய்வதென்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமையும் வந்தது.

நான்கு அன்றில்கள் போல் நின்ற பனைமரங்களை இணைத்து பூவரசம் தடிகளால் கூரையினை மிதித்த ஓலைகளை எடுத்து தீர்மானம் எடுக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமையும் வந்தது.

நான்கு அன்றில்கள் போல் நின்ற பனைமரங்களை இணைத்து பூவரசம் தடிகளால் கூரையினை மிதித்த ஓலைகளை எடுத்து ஈர்க்கினால் கட்டி வேய்ந்தோம். மூன்று பக்கமும் கிடுகு கட்டி மறைத்தோம். மண்ணினால் செய்யப்பட்ட பிள்ளையார் எங்கள் கருவறையில் வீற்றிருந்தார். எங்களால் உருவாகிய பிள்ளையார் கோயிலுக்கு தம்பி தான் பூசாரி.

சுவாமி கொட்டில் நிலம் சாணத்தினால் மெழுகியிருந்தது மாவிலைத் தோரணங்களால் சுவாமிக் கொட்டிலும் அதன் சூழலும் அழகாகக் காட்சி தந்தன. அயலிலுள்ள அன்ரிமார் சிலர் சிவப்பரிசியும் வேறு சிலர் அரிசிமாவும் கொண்டு வந்து தந்தனர். வலு புழுகத்தோடு நிகழ்வு நடந்து கொண்டிருந்தது. மோதகம் பிடிக்க மாவினை அம்மையா குழைத்துத் தந்துவிட்டு பிள்ளையார் கோவிலுக்குச் சென்றுவிட்டார்.

பிலாலி ஆச்சி மோதகம் பிடித்துக் கொண்டிருந்தார். ராயன் "குறூப்" பொங்கல் பொங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் சின்னதாக ஒரு சண்டை கிழம்பியிருந்தது. வாய்ச்சண்டை கைகலப்பில் வந்து நின்றது.

நித்திக்கும் ரஞ்சனுக்கும்தான் சண்டை. உந்தச் சண்டை எங்கள் வகுப்பில் அடிக்கடி நடக்கிற சண்டை தான். அது இங்கேயும் தொடங்கியிருந்தது. பிளா கோலிக் கொண்டிருந்த அம்மையா படக்கொன்று எழுந்து அந்த இடத்திற்கு ஓடி வந்தார்.

"ஏன்...? என்ன நடந்தது...? அம்மையா கேட்டார். நித்தியின் கன்னம் வழி இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

ரஞ்சனோடு சண்டைக்குப் போனால் உப்பிடித்தான் நகக் கீறல் காயங்கள் தான் வரும்.

"உவன்.. என்னை நரியனாம்." அழுதழுது நித்தி சொன்னான். "ஏனம்.....?"

"எல்லாரும் மூன்று ரூபா, நாலுரூபா போட்டதாம் என்னை ஒறுவா போட்டதாம், பாணியன் என்றும் சொல்லுறான்." இதைக் கேட்ட அம்மையா தனக்குள் மென்மையாகச் சிரித்தார். அவர்கள் இருவரையும் சமாதானம் செய்தார்.

"என்ர ஒறுவாவை வாங்கித் தாங்கோ. நான் வீட்டை போகப் போறேன்." என்று நித்தியன் அடம் பிடித்தான்.

அம்மையா தன் இடுப்பில் சொருகியிருந்த தட்டைப் பெட்டியை வெளியே எடுத்தார். தட்டைப் பெட்டிக்குள் இருந்த ஒரு ரூபாவை எடுத்து நித்தியிடம் கொடுத்தார். கண்களைக் கசக்கியபடி அந்த இடத்தை விட்டு நித்தி ஓடிப்போனான். அதில் நின்ற எல்லோரும் நித்தியைப் பார்த்து சிரித்தனர். அம்மையாவும் கொடுப்புக்குள் சிரித்தபடி உட்கார்ந்து கொண்டார். அவர் மீண்டும் பிளா கோலத் தொடங்கினார்.

பூசை தொடங்கியிருந்தது. சுவாமிக் கொட்டிலின் முகப்புக்கு முன்னால் அறேழு காவோலைகள் சிறகடிக்கப்பட்டு கொழுத்தப்பட்டன. காவோலைகள் எரிந்து சாம்பலாகின. எரிந்த ஒலைச்சாம்பல் மட்டும் எஞ்சியிருந்தது. மட்டைத்தணல், மூரித்தணல் அகற்றப்பட்டன.

தம்பிக்கு உருத்தொடங்கியிருந்து. அவனைத் தொடர்ந்து பவனுக்கும் உருவந்தது. ஒலைச் சாம்பல் மேல் தீ மிதிப்பு வைபவம் நடந்து கொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் பார்த்து தீ மதிப்பில் இறங்கியிருந்தார்கள். பார்வையாளர்களுக்கு அது பெரிய முசுப்பாத்தியாகவே இருந்தது.

தீயில் மிதிக்கவென்று வேலண்ணாவும் இறங்கினார்.

"ஐயோ...! என்ர... அம்மா.....! ஆ... ஊ...." என்று சத்திமிட்டு வேலண்ணா குழறத் தொடங்கினார்.

சாம்பலோடு சாம்பலாக ஒர ஒரமாக சிறு மூரித்தணல் இருந்திருக்கிறது. தற்செயலாக அது இவரை மட்டும் பதம் பார்த்திருக்கிறது. புதினம் பார்த்த அனைவரும் இந்தக் காட்சி கண்டு இன்னும் சிரித்தார்கள். வேலண்ணா வெக்கப்பட்டுக் கொண்டார். தன் உபத்திரவத்தையும் பொருட்படுத்தாமல் உடனேயே எழுந்து நின்றார்.

தீ மிதிப்பு முடிவடைந்ததும்,

பொங்கல், மோதகம் கொடுக்கத் தயாரானார்கள். எல்லோரும் வரிசையாக இருந்து கொண்டனர். சிறுவர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என்று அந்த வரிசை நீண்டிருந்தது. சிலர் கிண்ணங்களும், வேறு சிலர் பிளாவும் வைத்திருந்தனர். அதில் நித்தியும் அமர்ந்திருந்தான். அவனின், அம்மம்மாவும் அவன் அருகில் அமர்ந் திருந்தார். நித்தியின் கைகளில் பெரிய தொரு பிளாவு இருந்தது.

ரஞ்சன் எனக்கு ஒரு நுள்ளு விட்டான். நித்தியைப் பார் என்று கண்களால் காட்டினான். நித்தியைப் பார்த்த எனக்கும் பெரியதொரு சிரிப்பு வந்தது. என்னைத் தொடர்ந்து மற்றவர்களும் நித்தியைப் பார்த்துச் சிரித்தார்கள்.

வெளிநாடு போன நித்தி பதினைந்து வருடங்கள் கழித்து போனமாதம் ஊருக்கு வந்திருந்தான். இந்தச் சம்பவங்களை ஞாபகப்படுத்திச் சொல்லிச் சொல்லி சிரித்தோம்.

வெளிநாட்டிலிருந்து வந்த நித்தி என்னுடனேயே எந்த ஒரு இடத்திற்கும் போவான். ஒரு நாள் ஆசைப்பட்டு என்னைக் கேட்டான்.

“சிவா டேய்.....! கருப்பணி குடிக்க வேணும் போல கிடக்கு. கன காலங்கள் அதை மறந்து. எங்கை எடா குடிக்கலாம்.”

“அம்மம்மா வீட்டுக்கு வாடா! கட்டியண்ணா அங்கை சீவ வாறவர். சொல்லி வைச்சால் சுண்ணாம்பு குறைச்சு பதமாகத் தருவார்.” என்றேன்.

இப்படி உரையாடி இரண்டாம் நாள் இரண்டு பேரும் சேர்ந்து கருப்பணி குடித்தோம். அதற்குள் வெள்ளைக் கொழும்பான் மாங்காயும் வெட்டிப் போடப்பட்டிருந்தது. அது நாவிற்கு இன்னும் இன்பச் சுவையைத் தந்தது.

அவன் வெளிநாடு போகும் போது புழுக்கொடியல், பாணி போட்ட பனாட்டு, பனங்கட்டி, பனம்பணியாரம் என்றும் பெரியதொரு பார்சலோடுதான் போனவன். பழைய பாரம்பரிங்களை அவன் இன்னும் மறக்காமல் இருந்திருக்கிறான்.

இப்படி எல்லா வகையான நினைவுகளிலிருந்தும் நான் மீண்டு கொண்டேன். சின்னதாக தலையை அசைத்து திரும்பிப் பார்த்தேன். தங்கச்சியின் காணிக்குள் பனைமரம் தறிப்பதற்கு வேலைக்காரர்கள் வந்து நின்றார்கள. பனையின் அடியில் மண்ணினை அகழ்ந்து பனைமரங்களைப் புரட்டி விழுத்திக் கொண்டிருந்தார்கள்.

பனைமரங்கள் விழுவதைப் பார்த்த அப்பாவிற்கு மனம் பொறுக்கவில்லை. தலை மேல் கை வைத்து ஓர் இடத்தில் குந்தி இருந்துவிட்டார். அப்பாவின் அருகாக நான் போனேன்.

“அப்பா.....! உந்தப் பனை மரங்களால் தானே நாம் உயிர் பிளைச்சு வாழ்ந்திருக்கிறோம்.!”

“அடக் கடவுளே! உதுகள் எதையும் எனக்கு ஞாபகப்படுத்தாதை எடா தம்பி.” அப்பா வெதும்பினார். அப்பாவின் உடலும் வேர்த்துக்கொண்டு வந்தது.

எண்பத்தேழு எண்பத்தெட்டு காலங்களில் பொம்மர் அவ்ரோ குண்டு போடேக்கை உந்தப் பனை மரங்களுக்கை தானே ஒளிக்கிறனாங்கள்.

தொண்டைமானாறு வல்வெட்டித்

துறைப் பக்கமாக விமானத்திலிருந்து குண்டு போடுவாங்கள். எங்கட வீட்டு பக்கத்துச் சனங்கள் எங்கட வீட்டுக் காணிக்குத்தான் ஒடி வருவார்கள்....!

பலாலியிலிருந்தும் பொலிகண்டிக் கடலிலிருந்தும் ஷெல் அடிப்பார்கள். அந்த நேரங்களில் ஷெல்குண்டுகளிலிருந்தும், விமானக் குண்டுகளிலிருந்தும் தப்புவதற்கு வழி என்னவென்றே தெரியாமல் இருந்த காலம். தெரிந்த ஒரே சங்கதி பனைமரக் கூடலுக்கை ஒளிவதுதான்.

பிறகு பிறகு, இயக்கம் கூட்டம் போட்டுச் சொல்லும்

"எலலோரும் உங்கள் வீடுகளில் பங்கர் போடுங்கோ. டானா வடிவிலும், டபிள்யூ வடிவிலும் பங்கர் போட வேண்டும்" என்று சொல்லுவார்கள்.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு பங்கர் போடுவோம். அந்தமாதிரியான சந்தர்ப்பங்களிலெல்லாம், எத்தனை பனை மரங்களுக்கும் முக்கிய பங்கிருந் திருக்கிறது.

இப்படி நான் என் எண்ணங்களை சிதற விட்ட நேரம், அப்பா ஏதோ யோசனை வந்தவர் போல மீண்டும் கதைக்க ஆரம்பித்தார். அவர் கதையில் அவசரமும் அந்தரிப்பும் துருத்திக்கொண்டு தெரிந்தன.

"தம்பி டேய் உடுப்பிட்டியில் புதுசா வாங்கின காணி இருக்குதெல்லோ...!"

"ஓம் அப்பா...! அதுக்கென்னங்க இப்ப....?"

அது பெரிய வெளிக் காணிதானே. அந்தக் காணியின் பின் வளவுக்கை முந்நூறு பனங்கொட்டை விதைக்கப் போறேன் எடா! என்ர கற்பகச் சீமாட்டிகள் சாய்கிறதைப் பார்த்தால் என்ர கை கால்கள் ஒன்றும் ஏவாதாம் எடா."

அப்பாவின் வார்த்தைகள் என் மனதை இதம் செய்தன. அந்தக் காணி வாங்கும் போதே நான் நினைத்த விடயத்தை அப்பா இப்ப எனக்குச் சொல்லுகிறார். நூறு பனங்கொட்டை களாவது விதைக்க வேண்டும் என்று நான் நினைத்திருந்தேன். அப்பா என்னைவிட அனுபவசாலிதான். மனது ஆனந்தத்தால் ஊசலாடியது.

அடையாளமாக விடுபட்டிருந்த அக்கா வீட்டு முற்றத்து ஒற்றைப்பனை தன் ஒலைகளைச் சிறகடித்து உல்லாசமாக ஆடிக்கொண்டிருந்தது.





நூல் : செங்கதிர்
ஆசிரியர் : செங்கதிரோன்
தொடர்புகள் : திரு.த.கோபாலகிருஸ்ணன்
19, மேல்மாடித்தெரு,
மட்டக்களப்பு.
விலை : 60/=

# ஆளாமுடியாத பரம்பரை

ஜெகதலப்பிரதாபன்

கோபாலுக் கட்டாடியார் வீட்டுக்குத் திரும்பிப் போகும் போது அவருடைய சட்டைப் பையிலிருந்த இரண்டாயிரம் ரூபா நோட்டுகள் ஐந்தும் அவற்றின் பெறுமதிக்குரிய பைகளை விடக் கனத்தன போல இருந்தது. சண்முகம்பிள்ளை மறுநாள் தன்னுடைய மகனுடைய கலியாண வீட்டுக்கு நிலபாவாடை விரிக்கும் படி அவரைக் கேட்ட போது அதை மறுக்க ஏன் சங்கத்தைக் காரணம் சொன்னோம் என்று தன்னையே நொந்து கொண்டார். "இப்போது நாங்கள் அந்த வேலையை செய்வதில்லை" என்று சொல்லி ஒரேயடியாகப் பேச்சை முறித்திருக்க முடியாதா என்று யோசித்தார். ஆண்டைகளை முகம் முறிக்கப் பேசுவது தன்னுடைய தலை முறைக்கு இயலாதது என்றும் அவரால் நியாயப்படுத்த முடியவில்லை. சங்கத்தின் விதியை மீறி நிலபாவடை விரிப்பது தண்டப்பணம் கொடுத் தவுடன் மறையப்போகிறகளங்கமா? ஆனாலும் நிலபாவாடை விரித்தால் சங்கம் தண்டம் விதிக்கும் என்று சொன்னதையே தனக்கு ஒரு விடயமாக்கி பத்தாயிரம் தருவேன் என்று சொன்னதோடு யோசித்து மறுமொழி சொல்ல வாய்ப்பளிக்காமலே கையில் ரூபாவையும் திணித்துவிட்டார்.

வீட்டுக்கு வருமாறு தன்னை அழைத்த போதே அதில் ஏதோ சூது இருக்கிறது என்று விளங்கியிருக்க வேண்டும். கலியாண வீடு சாவீடு களுக்கெல்லாம் நிலபாவடை விரிக்கிற வழக்கம் இந்தப் பகுதியில் நின்று போய்ப் பல வருடங்கள் வீடுகளுக்கு வெள்ளை எடுக்கப் போகிறது கூட மிகவும் குறைந்துவிட்டது. இவை யெல்லாம் சண்முகம்பிள்ளை அறியாத தல்ல என்றாலும் தன்னுடைய மகனுடைய கலியாண வீட்டுக்கு நிலபாவாடை விரிக்கும் படி தன்னுடைய குடிமை என்று உரிமை பாராட்டிக்



கேட்டதன் நோக்கம் என்னவென்று ஆராய்வதற்கு அவருக்கு அவகாசம் என்று தன்னை ஆறுதற்படுத்த முயன்றவாறு நடையைத் தொடர்ந்தார். ஆனாலும், "நீ எப்பவும் எங்கடை குடிமேனாக இருக்க வேணும். எங்கடை கட்டாடியாக இருக்க வேணும். வேறை கதை கதைக்கப்படாது" என்ற சொற்கள்

அவருடைய நெஞ்சில் சம்மட்டியால் அறைந்தன. சாதியத்திற் கெதிரான நூற்றாண்டுக்காலப் போராட்டங்களால் இன்னமும் சாதியக் கோட்டையை முற்றாகத் தகர்க்க இயலவில்லை என்றால் அதற்குத் தானுமல்லவா பங்காளாகி விட்டேன் என்ற குற்ற உணர்வு மனதைக் குடைந்தது.

"என்னப்பா, உசாராகப் போனியள், சோர்ந்து போய்த் திரும்பி வாறியள்?" என்று வாசற்படியிற் கால்வைத்த போதே அவருடைய மனைவி அவரைக் கேட்டார்.

இல்லையெணை சண்முகத்தார் தன்னுடைய மேன்ரை கலியாணத்துக்கு நிலபாவாடை விரிக்கச் சொல்லிக் கேட்டவர் ... நாளைக்குக் கலியாணமாம்....

"மாட்டன் எண்டு சொல்லிப் போட்டியளாக்கும் அவர் ஏதேன் கோவமாச் சொல்லிப் போட்டாரே?"

'....' "அவை தர வழியலை மாத் தேலாது. சொல்லிறதைச் சொல்லிப் போட்டுப் போகட்டும். காதிலை விழாத மாதிரிக் கவனியாமை விடுகிறது தான் சுகம்" "இல்லையென கொஞ்சம் வில்லங்கப்படுத்திக் கேட்டார். சங்கத் திலை செய்யிறேல்லை எண்டு முடி வெடுத்திருக்கு எண்டு சொன்னன்....."

"சங்கத்துக்கும் சேர்த்துக் கிழி விழுந்திருக்கும்"

"சங்கம் என்ன செய்யும் மெண்டு கேட்டார். குற்றப்பணம் விதிக்கும் எண்டன். குற்றப்பணத்தையும் சேர்த்துத் தாறன் எண்டார்….. "

'பேந்து'

"நான் யோசிச்சு மறுமொழி சொல்ல முதலே கையிலை காசு பத்தாயிரத்தையும் திணிச்சுப் போட்டார்"

'அதை என்ன......' என்று ராசாத்தி கேள்வியை முடிக்கு முன்னமே' வேறை வழியில்லாமை வாங்கிப் போட்டன்' என்றார் கோபாலு.

ராசாத்தி எதுவுமே பேசாமல் விருட்டென்றெழும்பி வீட்டுக்குள் போனாள். கோபாலுவோடு கடுமையான கோபம் வந்தால் கதையை வளர்காமல் எழுந்து போய் விடுவது அவவுடைய வழக்கம்.

இப்படிப் பேசாமற் போவதற்குப் பதிலாகத் தன்னை நாலுவார்த்தை திட்டித் தீர்த்திருந்தால் பரவாயில்லை என்று நினைத்து கோபாலு தன்னுடைய இயலாமையை நொந்து கொண்டவாறு சாய்மனைக் கதிரை மீது சரிந்தார்.

சிறிது நேரங்கழித்து ராசாத்தி திரும்பி வந்தார்.

"இஞ்சாருங்கோ அப்பா, சங்கத்தையும் சனத்தையும் பகைச்சுச் சீவிக்கேலாது. பிழையொண்டு நடந்து போட்டுது. அது பிரச்சினையாப் போக முன்னம் காசைக் கொண்டு போய்த் திருப்பிக் குடுத்துப்போட்டு வாங்கோ" அவவுடைய குரலில் கோபம் இருக்கவில்லை. ஆனால், மிகுந்த கண்டிப்பு இருந்தது.

"உடனேயே மாட்டான் எண்டு சொல்லிப்போட்டு வந்திருந்தா அது ஒரு கதை. இப்ப யோசியாமை' ஓமெண்டு காசையும் வாங்கிப் போட்டு வந்து என்ன முகத்தோடை போய் ஏலாது எண்டு சொல்லிறது?'

"காசைத் திருப்பிக் குடுத்துப் போட்டு வேறை யாரையும் பார்க்கச் சொல்லிறது தானே!"

'முகத்தை முறிக்கிற மாதிரி எப்பிடிப் போய்க் கதைக்கிறது.....?'

'அவையின்டை முகத்தை முறிக்கிறதுக்கு யோசிக்கிறியள். சங்கத்தையும் சனத்தையும் பற்றிக் கொஞ்சம் யோசியுங்கோ. இந்த அடிமை குடிமை இழிவாரங்களிலை இருந்து அதுகள் விடுபட்டு மனிசராத் தலை நிமிர்ந்து நிக்குதுகள். இப்படிச் செய்து அதுகளைத் தலைகுனிய செய்யப் போறியளே?" ராசாத்தியின் குரலில் கொஞ்சம் ஆத்திரங் கலந்திருந்தது.

அப்போது தான் தனது செயலின் தாற்பரியம் முழுவதும் கோபாலுக்கு விளங்கினாற் போலிருந்தது. மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் கூசினாற் போல முகட்டைப் பார்த்துக் கொண்டு "முன்பின் யோசியாமை ஓமெண்டு போட்டன் முள்ளிலை போட்டதை மெல்ல மாகத்தான் எடுக்க வேணும்..... எப்படியோ போய்ச் சொல்லி விளங்கப்படுத்துகிறன்...." என்றவாறே சாய்மனைக் கதிரையிலிருந்து எழுந்தார்.

'நானுங் கூட வரட்டே?' என்று கேட்ட ராசாத்தியின் கேள்விக்கு ஒரு தலையசைப்பா மறுப்புத் தெரிவித்து விட்டு வாசலை நோக்கி நடந்தார்.

சண்முகம்பிள்ளை கோபாலுவை அங்கே அப்போது எதிர்பார்க்கவில்லை. மனதிற்கு பலவாறான ஐயங்கள் நிழலாடின. யாராவது எதையாவது பேசி மனத்தை குழப்பியிருப்பார்களா அல்லது தருணத்தை பாவித்துத் தன்னிடம் மேலும் ஐந்து பத்தை கறக்கும் நோக்கமாக என்றெல்லாம் யோசித்தாலும் எதையுமே காட்டிக்கொள்ளாமல் 'வா, வா என்ன விசயம், சொல்லு!" என்று உற்சாகமான குரலில் பணித்தார்.

'இல்லை ஐயா நீங்கள் தந்த காசைத் திருப்பித்தர வந்தனான்'

"என்ன? கையிலை வைச்சிருந்தா சிலவழிஞ்சு போமெண்டே?"

"இல்லை ஐயா. எனக்கு உங்கடை காசு வேணாம்"

"அப்படியெண்டாச் சும்மா செய்யப்போகிறியோ?" சொன்னது விளங்காத தோரணையில் சண்முகம்பிள்ளை தொடர்ந்தார்.

"என்னாலை சங்கத்தைப் பகைச்சு நிலபாவாடை விரிக்கேலாது"

"அதுக்குத் தானே குற்றக்காசு பத்தாயிரமும் தாறன் எண்டு சொல்லியிருக்கிறன். நீ எங்கடை குடிமகன் என்ட உரிமையிலை செய்யிறாய். அதிலை உனக்குத் திருத்தி சங்கத்துக்கு ஒண்டும் செய்யாததுக்குப் பத்தாயிரம் ரூபாய் காசு பிறகு என்ன பிரச்சினை?"

"ஆரோ உன்னைப் பிடிச்சுக் குழப்பிப் போட்டினம்" என்று இன்னொரு கோணத்தில் காய் நகர்த்தினார் சண்முகம்பிள்ளை.

"ஆருங்குழப்பேல்லை ஐயா. எல்லாத்தையும் ஆறுதலா யோசிச்சு தானாத் தான் ஒரு முடிவுக்கு வந்தன்...."

"ஒமெண்டு சொல்லிக் காசையும் வாங்கிக் கொண்டு போகேக்கை இல்லாத யோசினையே?" என்று கொஞ்சம் ஆவேசமாகத் தொடங்கிய சண்முகத்தார் தனது ஆத்திரத்தைக் கொஞ்சம் அடக்கி 'இஞ்ச கோபால் நாளைக்கு விடிஞ்சாக் கல்யாணம். இப்ப வந்து ஏலாது எண்டிறாய். நான் இனி ஆரைப் பிடிக்கிறது?" என்று கெஞ்சுகிற தொனிக்கு மாறினார்.

"ஐயா நீங்களும் கடைசி நேரத் திலை தானே கேட்டனியள். நான் யோசிச்சு மறுமொழி சொல்ல ஏலாமை நெருக்கினியள். ஆளனுப்பின நேரமே என்ன அலுவலெண்டு சொல்லி அனுப்பியிருந்தால் அப்பவே யோசிச்சுப் பார்த்து மறுமொழி சொல்லியிருப்பன்..."

சண்முகம் பிள்ளைக்குத் தலைக்குள் இரத்தம் கொதிக்குமாப் போல் இருந்தது. என்றாலும் கோபப்பட்டால் விடயம் முற்றாகவே பிழையாகி விடும் என்பதால் நிதானத்தை கைவிடாமல், "கோபாலு நீ தேவையில்லாத வீண் கதை கதைக்கிறாய். உன்னை ஆரோ உசுப்பேத்தி விட்டிருக்கினை. நீ எப்பவும் எங்கடை குடிமகன். அதை நான் மறக்க மாட்டன். எனக்கு உன்னிலை எண்டைக்கும் கோவம் வரவுமில்லை. இனியும் வரவிடமாட்டான்".

"......"

'இன்னொரு விதமா யோசிச்சுப் பார். நாங்கள் ஆர்? தமிழர்! ஆண்ட பரம்பரை! இப்ப எங்களையெல்லாம் சிங்களவர் ஏறி மிதிக்கப்பாக்கினம். ஏனெண்டு யோசிச்சுப் பார்! நாங்கள் எங்கடை பண்பாடு மரியாதையெல்லாம் கைவிட்டுச் சாதி வேணாம் சைவம் வேணாம் எண்டலைனிலை போய்த்தானே இவ்வளவு அழிவும் நடத்திது. நாங்கள் எங்களின்டை பண்பாட்டைக் காப்பாத்தாவிட்டால் ஆர் வந்து காப்பாத்துகிறது". "..."

"நிலபாவாடை விரிக்கிறது எண்டால் என்ன கருத்து? ஒரு மாப்பிள்ளைக்கு சீவியத்திலை அவுன் மறக்கக்கூடாத ஒரு நல்ல நாளிலை அவனுக்குக் குடுக்கிற ஒரு ராச மரியாதை அது. மாப்பிள்ளைத் தோழன் எண்டு வாறவன் என்ன செய்யிறான்? மாப்பிள்ளைக்குக் கால் கழுவி விடுகிறான். ஏன் செய்யிறான்? அது தான் எங்களின்டை பண்பாடு. இதெல்லாம் இப்பவுள்ள தலைமுறையிலை உள்ள வைக்கு விளங்காது. நாங்கள் தான் எல்லாத்தையும் சரியாச் செய்து காட்டி அவைக்கு விளங்கப்படுத்தி வழிநடத்த வேணும். உன்ரை தேப்பன் கட்டாடி சின்னானைக்கேள். சொல்லுவான்'.

"ஐயா, நீங்கள் சொல்லு கிறதுக்கு என்னட்டை மறுமொழி யில்லை. எண்டாலும் நிலபாவாடை விரிக்கிறதுக்கு நான் தான் தேவை

யெண்டில்லையே. என்னாலை ஏலாமை யிருந்தால் என்ன செய்திருப்பியளோ அதையே செய்ய லாமே!" கோபா லுக்குள் எழுந்து கொண்டிருந்த கோபம் தன்னை முற்றாக வெளிக்காட்ட வில்லை. மிகவும் நிதானமாகவே பேசினார். ஆனால், சண்முகத்தாரின் வாதம் கொஞ்சம் தடம்புரளத் தொடங்கிவிட்டது. குரலிலும் ஆத்திரம் வெளிப்படத் தொடங்கியது.

'கோபாலு நான் என்னவோ சொல்லுகிறன். நீ வேறெதுக்கோ மறுமொழி சொல்லுகிறாய். நிலபாவாடை விரிக்கிறதாலை உனக்கொண்டும் சங்கை கெட்டுப் போகாதெண்டு தான் விளங்கப்படுத்தப்பார்க்கிறன். மாப் பிள்ளைக்குக் கால் கழுவி விடுகிறதைப் போல அதை ஒரு மரியாதையாகச் செய்யிறதாலை உனக்கென்ன குறைஞ்சு போம் உன்ரை சங்கத்துக்கு என்ன குறைஞ்சுபோம்?

"ஓமெண்டு விட்டால் இனி நீ மாத்தேலாது. நீ செய்யத்தான் வேணும்"

"அதுதான், காசைத் திருப்பித் தாறனே ஐயா. என்னாலை ஏலாது. என்னைக் கஷ்டப்படுத்தாதையுங்கோ".

"உன்னாலை ஏலாதெண்டால் ஆரைக் கொண்டு செய்யச் சொல்லு கிறாய்?" சண்முகத்தாரின் குரல் உரத்தெழுந்தது. கண்களிற் சிவப் பேறியது. கோபாலுவை அறையக் கைகள் துருதுருத்தது. "எளிய சாதியர். சாதிப்புத்தி போகாது" என்று புறு புறுத்தார்.

அவர் எதையும் செய்வதற்கு முதலே கோபாலு "ஐயா மாப் பிள்ளைக்குக் கால் கழுவுற மாதி ரித்தான் நிலபாவாடை விரிக்கிறதும் எண்டால் கால் கழுவி விடுகிறவை யின்ரை பகுதியிலையோ மாப்பிள்ளை யின்றி பகுதியிலையோ ஆரேனையும் பிடிச்சு நிலபாவாடையை விரிக் கேலுந்தானே". தொடர்ந்து எதையும் பேசாமல் ஐந்து இரண்டாயிரம் ரூபாத்தாள்களையும் அருகில் இருந்த ஒரு ஸ்ற்றுல் மீது வைத்துவிட்டு "நான் வாறானையா" என்ற படி படலையை நோக்கித் திரும்பி "ஐயா நிலபாவாடை விரிக்கிறது ஒண்டுங் கேவலமில்லை எண்டுதான் சொன்னீங்கள்! அப்ப நான் சொன்ன மாதிரி உங்களிலை ஆரையாவது பிடிச்சு விரிச்சுக் கொள் ளுங்கோவன். நானும் உங்கடை குடிமேன் எண்ட முறையிலை என்ரை பங்குக்கு ஒரு ஐயாயிரம் பிரட்டித் தாறன்' என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார்.

அதற்குப் பிறகு சண்முகப் பிள்ளை என்ன சொன்னார் என்பது எனக்கோ உங்களுக்கோ கோபாலு வுக்கோ முக்கியமான விடயமல்ல. அவர் இனி ஆளமுடியாத ஒரு பரம்பரைக் குரியவராகிவிட்டார்.

நன்றி தினக்குரல்

# கடவுளின் தனிமை

மீளளிப்பு: கே.ஏ. சீவரத்தினம்

பூலோகத்தில் ஒருவர் இறந்த பின்னர் சொர்க்க லோகம் சென்றார். அவர் அங்கு சென்றபோது சொர்க்கலோகம் அமளிப் பட்டுக் கொண்டிருந்தது. எங்கு நோக்கினும் ஒரே அலங்கார மயம். வாழை மரங்களும், தோரணங்களும் பல பல நிறங்களில் பறந்து கொண்டிருக்கும் கொடிகளோடு - அலங்கார வளைவுகள், பந்தல்கள், "பளிச், பளிச்" எனப் பல வர்ணங்களில் ஒளி விளக்குகள், வாண வேடிக்கைகள், பட்டாசுகள் வெடிக்கும் சத்தங்கள் - இப்படி ஒரே அமர்க்களம்.

இங்கிருந்து போன வருக்கு ஒரே ஆச்சரியம். மகிழ்ச்சியும் கூட சொர்க்க லோகம் தினமும் இப்படித்தான் இருக்குமோ என நினைத்துப் பக்கத்தில் நின்றவரிடம்


"ஐயா, சொர்க்க லோகம் தினமும் இப் பிடித்தான் இருக்குமோ?" என வினவினார்.

அதற்கு மற்றவர்.

"இல்லை ஐயா, இன்றைக்கு கடவுளின் பிறந்த நாள்.. அதுதான் சொர்க்க லோகம் இப்படி ஒரே கோலாகலமாக இருக்கிறது" என்றார்.

"அப்படியா" என்று இவர் வியந்து கொண்டிருக்கையில் தூரத்தில் மாபெரும் ஊர்வலமொன்று வந்துகொண்டிருந்தது. ஊர்வலத்தின் முன்னே ஒருவர் யானை மீது அமர்ந்து பெரிய மஞ்சள் நிறக் கொடியைப் பிடித்துக் கொண்டுவர, பின்னே ஒரு மதத்தின் சின்னங்களையும், கொடிகளையும் ஏந்தியபடி குதிரைகளிலும் நடந்தும் ஏராளமானவர்கள் வந்து கொண்டிருந்தனர். ஏதேதோ மந்திரங்களை உரத்து ஜெபித்துக்கொண்டே வந்தனர். அந்த ஊர்வலம் இவர்களைக் கடந்து செல்ல பலமணி நேரம் சென்றது. அந்த ஊர்வலம் பெரும் இரைச்சலுடன் இவர்களைக் கடந்து சென்று முடிந்தது.

சில நிமிடங்கள் கழித்து பச்சைக் கொடி பிடித்துக் கொண்டு வந்த ஒருவரின் தலைமையில் இன்னுமொரு ஊர்வலம்



வந்தது. இதிலும் ஏகப்பட்ட யானைகள், குதிரைகள், பெருந்தொகையான மக்கள் காணப் பட்டனர். இவர்களும் வானம் அதிரும் வகையில் மந்திரங்களை ஒலித்துக் கொண்டும், கடவுள் வாழ்த்துப் பாடல்களை சத்தமிட்டுப் பாடிக்கொண்டும் மிகவும் உற்சாகமாக வந்து கொண்டிருந்தனர்.

அந்த ஊர்வலமும் சென்று மறைந்த பின்னர் இன்னுமொரு நிறக் கொடியை பிடித்தவர் தலைமையில் வேறொரு ஊர்வலம் மிகவும் உற்சாகத் தோடு வந்து கொண்டிருந்தது.

இப்படியாக ஏகப்பட்ட ஊர்வலங்கள் பலபல நிறக் கொடிகளைப் பிடித்தவர்களுடைய தலைமையில் சென்று கொண்டிருந்தன.

எல்லோரினதும் மந்திர உச்சாடனங்கள், கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஆகியவற்றால் சொர்க்கலோகமே அதிர்ந்து கொண்டிருந்தது.

ஒருவாறு ஊர்வலங்கள் சென்று முடிந்தன. ஆனால் சில நிமிடங்களுக்குப் பின் தனியாக ஒருவர் மட்டும் ஒரு குதிரையில் ஒரு கொடி ஒன்றைப் பிடித்துக் கொண்டு மெதுவாக வந்து கொண்டிருந்தார். குதிரையோ எலும்பும் தோலுமாக இருந்தது. அதன் மேல் அமர்ந்திருந்தவரோ மெலிந்து நோஞ்சானாகக் காட்சியளித்தார். அவர் பிடித்திருந்த கொடியோ மிகமிக பழையதாகவும் ஓரங்கள் யாவும் கிழிந்து போயும் இருந்தது.

இங்கிருந்து போனவருக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. இவ்வளவு பிரமாண்டமான ஊர்வலங்கள் போய் முடிந்த பின்னர் இவர் ஒருத்தர் மட்டும் தட்டத் தனியாக வந்து கொண்டிருக்கிறாரே. அவரைப் பார்க்க இவருக்குப் பரிதாபமாக இருந்தது.

குதிரை இவரைக் கடந்து போனபோது இவருக்கு மனம் கேட்கவில்லை: குதிரையில் அமர்ந்திருந்தவரை அணுகி

"ஐயா, கொஞ்சம் நில்லுங்கள்" என்றார்.

குதிரையும் நின்றது.

"ஐயா, ஏகப்பட்ட ஊர்வலங்கள் முன்னால் அமர்க்களமாகப் போய்க் கொண்டிருக்கிறதே. ஆனால் நீங்கள் மட்டும் இப்படி எலும்பும் தோலுமாக, நோஞ்சான் குதிரை மீது, பழைய கிழிந்த கொடியையும் பிடித்துக் கொண்டு தனியாக வந்து கொண்டிருக்கிறீர்களே, உங்களைப் பார்க்க பரிதாபமாகவும், ஆச்சரியமாகவும் இருக்கிறது... தாங்கள் யார் ஐயா?" என்று கேட்டார்.

அதற்கு குதிரைமேல் இருந்தவர் மெல்லிய புன்னகையுடன் சொன்னார்.

"நான்தான் கடவுள்"

அப்படிச் சொல்லி விட்டு மெதுவாக அவர் போய்க்கொண்டிருந்தார்.

## தூக்குக் கயிறாகும் கேள்விகள்

த.ஜெயசீலன்

உலகத்தைப் பற்றி உயர்ந்த இயற்கை பற்றி
உயிர் மூலம்பற்றி.
உருண்டோடும் வாழ்வுபற்றி
இயங்குகிற சக்திபற்றி.
கடவுள் என்னும் ஒன்றுபற்றி
கெள்விகள் நூறு நூறு கேள்விகள்
தினம் தினமும்
ஊறிக்கொண் டிருக்கிறது.
புத்தம் புதிதாக
விடைகாணாக் கேள்விகளின் மலை
மனதில் வளர்கிறது.
விடை இதுவோ அதுவோ என்ற
வியாக்கியானம்
முடிவெதையுங் காணாமல்
முட்டி மோதி முடிகிறது.
முடிவதற்கு முதற்கணத்தில்
புரியும் நிஜஞானம்
பிறர்க்குப் பயனின்றிப் பின்னால்
யமன் வயிற்றுள்
சீரணிக்கப் படுகிறது!

# மரண அறிவித்தல்

ஆங்கில மூலம்: ஏ. கே. ராமனுஜன்
தமிழாக்கம்: சோ. பத்மநாதன்

சாகும் போது
அப்பா விட்டுச் சென்றவை
மேசை முட்ட
புழுதி படிந்த காகிதக் குவியலும்
கடனும் பெண் பிள்ளைகளும்
அவர் பெயரே சூட்டப்பட்ட
படுக்கை நனைக்கும் பேரனும்
நாங்கள் வளரும் போது
வருஷக் கணக்காக
வளைந்த தென்னை
மெல்லச் சாய்ந்திருக்கம் வீடும்!

தகனம் செய்தபோது
முறையாக முற்றாக எரிந்தார்
இருகண்ணிலும்
வைத்த நாணயங்கள்
சாம்பலில் கிடக்கின்றன
சிறிதும் வித்தியாசமின்றி
வெந்து நீறான
முறட்டு முள்ளந் தண்டு
வளையங்கள் சில
ஆண்பிள்ளைகள்
மெள்ளப் பொறுக்கி
றயில் நிலையத்துக்கருகே
மூன்று நதிகள் சங்கமத்தில்
கிழக்கை நோக்கி நின்று
குருக்கள் சொன்னபடி
வீசுவதற்காக!

தலைமாட்டில்
அவர் முழுப் பெயரும்
இரண்டு திகதிகளும் பொறித்த
நடுகல்லோ
அவற்றுக்கிடையில்
ஓர் அக்கிரகாரத்தில்
அவர் சிசேரியன் அவதாரம் எடுத்ததோ
இருதயம் நின்றுவிட
பழக்கடையில் அவர் செத்து வீழ்ந்த
செய்தியோ
ஏதுமில்லை
ஆனால் ஆரோ சொன்னார்கள்
வெளியான நாலு வாரத்தில்
கிலோ கணக்கில்
பழைய பேப்பராக விற்கப்பட்டு
உப்பும் கொத்த மல்லியும் வெல்லமும்
பேப்பர் சுருளில் விற்கும்
சில்லறை வியாபாரிகளைச் சென்றடையும்
சென்னைப் பத்திரிகை ஒன்றின்
உட்பக்கத்தில்
அப்பாவைப் பற்றி
இரண்டு வரிகள் வந்ததாக!
வேடிக்கையாக
சுருள்களைப் பிரித்து வாசிக்கிறேன்
அவ்வரிகளைக் காணலாம் என!

அவர் எமக்கு விட்டுச் சென்றவை
அடியோடு மாறிப்போன அம்மாவும்
ஒன்றுக்கு மேற்பட்ட
வருடாந்தச் சடங்குகளும்.



தேசிய கலை இலக்கியப் பேரவை அனைத்திலங்கை மாநாடு -39வது ஆண்டு



பாடிப்பறை நிகழ்வு - கொழும்பு



புத்தகப் பண்பாட்டு மாலை - மன்னார்



பௌணமி தின நிகழ்வு - இரத்தினபுரி